பக்கங்கள்: இருபத்தெட்டு +IV

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை (14.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 200



14

வெளிநாடுகளுக்கு ஓடமுயலும் தி.மு.க.



21

உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும்




25

எங்கள் ஆதிக்கம் தொடரும்

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு; யோசனைக்கு எதிர்ப்பு!

### இனப்பிரச்சினைத் தீர்வில் இழுத்தடிப்பு என விசனம்

கொழும்பு, ஜூன் 14

**இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து முடிவெடுக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படும் என அரசு அறிவித்திருப்பது காலத்தை இழுத் தடிக்கும் செயலென பெரும்பாலான கட்சிகள் விசனம் தெரிவித்துள்ளன.**

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்க நியமிக்கப்பட்ட அமைச்சர் திஸ்ஸவிதாரண தலைமையிலான சர்வகட்சிக் குழு ஆக்கபூர்வமாக எந்த ஆலோசனைகளையும் முன்வைக்கவில்லை.

சுமார் இரண்டு வருடங்கள் இக்குழு மாதாந்தம் கூடிக் கலைந்தது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் இதேநிலைதான் ஏற்படுமென அக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணும் நடவடிக்கைகளில் பல குழுக்களை அமைத்து அறிக்கைகளை வெளியிட்டிருந்த அரசு, அதில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்தவில்லை. அவ்வாறே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதும் காலத்தை வீணடிக்கும் செயலாகும். அதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

ஏற்கனவே சர்வகட்சிகள் குழு, மங்கள முனசிங்க குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும் அவற்றினூடாக எவ்வித (04ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் துணைத்தூதர் நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலங்கைக்கான பிரிட்டனின் துணைத்தூதர் மார்க் கூடிங் யாழ்ப்பாணத்துக்கு நேற்று உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம் மற்றும் தெல்லிப்பழை, கொல்லன் கலட்டி ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்களை இவர் சந்தித்து அவர்களின் நிலைமை தொடர்பாக நேரில் பார்த்து அறிந்துகொண்டார். அத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் தற்போதைய நிலை மற்றும் சமூகத்துடனான அவரிகளின் ஒருங்கிணைவு என்பன குறித்து இந்த விஜயத்தின் போது மார்க் கூடிங் அவதானித்தார்.

இதன் போது பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

வட மாகாணத்திலுள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் சமூக மீள்இணைப்புக்கென பிரிட்டன் சார்பில் சுமார் 90 மில்லியன் ரூபாவை (5 லட்சம் ஸ்ரேலிங் பவுண்) வழங்கவுள்ளதாகவும் இதன் போது அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்காக 3,000,000 ஸ்ரேலிங் பவுண்களை வழங்கவுள்ளதாக பிரிட்டன் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-10)

## நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி குடாநாட்டில் பதிவுகளை மேற்கொள்வது குற்றமில்லையா?

### சுரேஷ் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்.மாவட்டத்தில் பொது மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டதாக உயர்நீதிமன்றம் அறிவித்த பின்னரும் படையினரும் பொலிஸாரும் பதிவுகளை மேற்கொள்வது நீதிமன்றத்தை அவமதிப்பதாக இருக்காதா? நீதிமன்றத்தின் உத்தரவை மீறுவது பாரதூரமான குற்றமல்லவா?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

பொலிஸார் கிராமசேவையாளர்களிடம் படிவங்களை வழங்கி பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

படையினர் சிவில் உடையில் வந்து வீடுகளை படம் எடுத்து வீட்டில் உள்ளவர்களையும் படம் எடுத்து விவரம் பதிவு செய்கின்றனர் (27ஆம் பக்கம் பார்க்க)

### வழமைக்கு மாறாக இம்முறை

## ஹெலியில் பூமாரி பொழிய வற்றாப்பளையில் பொங்கல்



கிளிநொச்சி, ஜூன் 14

வழமைக்குமாறாக இம்முறை வானத்தில் இருந்து பூமாரி பொழிய வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கல் விழா நேற்று மாலை பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

பல்வேறு பகுதிகளில் இருந்து அங்கு கூடிய பல்லாயிரக் கணக்கானவர்கள் அரோகரா கோஷம் எழுப்ப நேற்று மாலை 4 மணிக்கு பொங்கல் ஆரம்பமானது.

ஆலயத்தில் வீதிகள் எங்கும் ஆயிரத்துக்கு மேற் பட்டவர்கள் பொங்கல் பொங்கி (27ஆம் பக்கம் பார்க்க)

## 41 இலங்கையர்கள் ஈராக்கில் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 14

ஈராக்கில் இலங்கைப் பணியாளர்கள் 41 பேர் தங்களுக்கு வழங்கப்படவேண்டிய 19 மாத சம்பளத்தை வழங்குமாறு கோரி நேற்றுமுதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக், அமாராஹி நகரில் இவர்கள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள (28ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் தூதுக்குழு விரைவில் நோர்வே செல்கிறது

### கூட்டமைப்புடனான பேச்சு குறித்து விவாதிக்க

கொழும்பு, ஜூன் 14

அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து இலங்கை அரசின் தூதுக்குழு நோர்வே அரசுடன் பேச்சு நடத்த இருக்கிறது.

நோர்வேயின் சர்வதேச விவகார அமைச்சர் எரிக்சொல் ஹெய்முடன் இலங்கைத் தூதுக் குழு பேச்சு நடத்தவிருக்கிறது.

அரசு - கூட்டமைப்பு பேச்சுக் குழுவில் இடம்பெறும் அமைச்சர் நிமால் டி சில்வா தலைமையில் செல்லும் இலங்கைத் தூதுக்குழு நோர்வே அரசின் உயர் மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தும் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளை நீக்கி, நல்லுறவை கட்டி எழுப்பும் நோக்குடன் இந்த விஜயத்தை இலங்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

நோர்வே வாழ் தமிழ் மக்களுடன் இந்தக் குழுவினர் சந்திப்புக்களை நடத்தவுள்ளனர்.

மேலும் இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நல்லிணக்க நடவ (28ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் பல்வேறு நிகழ்வுகள்; ஆனால் பஸில் வரமாட்டாராம்

யாழ்ப்பாணம்,ஜூன் 14

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தர இருந்த பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் விஜயம் ஒத்திப்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனினும் திட்டமிட்டபடி நிகழ்வுகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழும், 'றப்' திட்டத்தின் மூலமும் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைகள் வலி. வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (27ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தத்தின் கீழ் தீர்வு குறித்து அரசு முன்னுக்குப் பின் முரணான கருத்து

### இரட்டை வேடம் வேண்டாம் என்கிறது ஐ.தே. கட்சி

கொழும்பு, ஜூன் 14

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக வைப்பது தொடர்பில் அரசு முன்னுக்குப் பின் முரணான கருத்தைத் தெரிவித்து வருகிறது.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அரசு நாடாளுமன்றில் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அரசிடம் வேண்டுகோள் விடுத்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினரான கயந்த கருணாதிலக்க இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைக்கப் போவதாக அரசு கூறுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் இந்திய அரசிடம் அரசின் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், இது தொடர்பில் (28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# குடாநாட்டில் பல இடங்களிலும் நேற்று வீடுகள் படம் எடுக்கப்பட்டு விவரங்கள் பதிவு

## மக்கள் மத்தியில் மனக்கிலேசம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். குடாநாட்டில் பொதுமக்களையும் அவர்கள் தங்கியுள்ள வீடுகளையும் படம் பிடித்து பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றன என்று எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

இந்த நடவடிக்கைகளில் சில இடங்களில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். வேறு சில இடங்களில் இராணுவத் தினர் என்று தெரிவித்து சிவில் உடையில் வந்தவர்களும் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் மத்தியில் மனக்கிலேசம் ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்கு வந்தவர்கள் குடும்ப பதிவு அட்டையிலுள்ள விவரங்களை தாம் கொண்டு வந்த படிவங்களில் நிரப்பியுள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்தவர்களைத் தனித் தனியாக படமும் எடுத்துள்ளனர்.

வீட்டில் எத்தனைபேர் இருக்கின்றீர்கள்? எல்லோரும் என்ன செய்கின்றனர். எத்தனைபேர் வேலை செய்கின்றனர். வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்று கேட்டு விவரங்களைபதிவு செய்துள்ளனர். சில இடங்களில் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் கரைச்சல் இருக்கிறதா என்றும் கேட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் தாம் கொண்டுவந்த புகைப்படக் கருவியினால் வீட்டையும் படம் பிடித்துச் சென்றுள்ளனர். தங்களின் இந்தப் பணிகளை முடித்துக்கொண்டு வீட்டில் "ஸ்ரிக்கர்" ஒன்றையும் ஒட்டிச் சென்றுள்ளனர்.

இது குறித்து பிரதேச பொலிஸ் நிலையம் ஒன்றுடன் தொடர்புகொண்டு கேட்ட போது, தாம் அவ்வாறான பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அத்துடன் இவ்வாறானதொரு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளனர். (ஒ-15)

# மாணவ குடும்ப உத்தியோகத்தருக்கு அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம், வவுனியா தாதியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிபெற்று வெளியேறியுள்ள 222 மாணவ குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பதவியேற்கு மாறு மாகாண சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. தாங்கள் பயிற்சி பெற்ற கலாசாலைகளுக்கு சமுகமளித்து, தங்கள் கடமைக்குச் செல்லவேண்டிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை தெரிந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

# 1983ஆம் ஆண்டு படுகொலைகளின் பின்னரே இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டது

## விமர்சகர் சத்தியமூர்த்தி கருத்து

கொழும்பு,ஜூன்14

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற திட்டமிட்ட படுகொலைகளையடுத்து தமிழர்கள் ஆயிரக்கணக்கில் தமிழ் நாட்டிற்குள் சென்று இறங்கியதையடுத்துத் தான் இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு கவனம் செலுத்தத் தொடங்கியது. அதற்கு முந்தியன்று. இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் அக்கறையை இந்திய மேலாதிக்கம் செய்ய முற்படுகின்றது அல்லது சுயநலநோக்கில் செயல்படுகிறது என்றெல்லாம் தொடர்புப்படுத்தி கூறுவதனது ஆரம்பமுதலே தவறாகும். இந்தக்கரிசனைகள் தமிழ் நாட்டு கவலைகளுடன் இணைந்தவை. தமிழ்நாடு பற்றிய கவலைகள் - இதனைக் கொழும்பு அரசியல் சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு தமிழ்நாட்டு அரசியல் விமர்சகர் என். சத்தியமூர்த்தி கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை யொன்றில் எழுதியுள்ளகட்டுரையில் தெரிவித்துள்ளார்.

போருக்கு பின்னரான சூழ்நிலையில் இலங்கையர்களில் ஒரு பகுதியினர் குறிப்பாக அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீனவர் தொடர்பான விவகாரங்களில் இறைமை பற்றியும் ஆள்புல ஒருமைப்பாடு பற்றியும் அதிகமாக அலட்டிக்கொள்கிறார்கள். இன்னும் சிலர் இலங்கை கடற்படையினரின் தலையீட்டையும் அதே பாணியில் நியாயப்படுத்துகிறார்கள். கடற்புலிகள் போன்று முன்னைய சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான சோதனைகள் நடத்தப்படுவதாகக் கூட அவர்கள் வாதிடுகிறார்கள். இந்த வாதம் சரியென்றால் அதேவிதமான ஏனைய வாதங்களும் சரியானவையே. தமிழ் நாட்டில் உள்ள கவலையும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சத்தியமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் எழுதுகையில் குறிப்பிட்டிருப்பதாவது:

கச்சத்தீவு விவகாரம் இப்போது புதுடில்லியிலுள்ள உயர் நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கின்றது. அதன் தீர்ப்பு வரும்போது எப்படி அமைந்தாலும் அதற்கு எதிராக இலங்கை வரையறையான விதத்தில் ஏதும் வாதிட முடியாது. இருதரப்பு அல்லது சர்வதேச சட்டப்பூர்வ உறவுகள் நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி வேறு இடங்களில் விவாதிக்கப்படலாம். எதுவானாலும் மாகாண இணைப்பு தொடர்பான வழக்கில் கொழும்பு உயர்நீதிமன்றம் இந்தியாவுடனான இருதரப்பு உடன்பாடு குறித்து பிரஸ்தாபம் இன்றி செயற்பட்டிருந்தது. இலங்கையின் நீதிமன்ற தீர்ப்பும் இந்திய மனுவும் (ஜெயலலிதாவின்) நடைமுறை குறைபாடுகளுடன் இடம்பெற்றுள்ளன. கொழும்பு நீதிமன்றம் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தியிருக்கலாம்.

- இவ்வாறு அவர் எழுதியுள்ளார். (ப)




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

# மூன்று நாள்கள் மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன்14

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, சுதுமலை, மானிப்பாய் நகர்ப்பிரதேசம், கட்டுடை ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பிரதேசம், கலட்டிபிரதேசம், பிறவுண் வீதியில் ஆடியபாதம் வீதியிலிருந்து கலட்டிச் சந்தி வரை, கம்பஸ் லேன், தலங்காவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

# புங்குடுதீவில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

புங்குடுதீவு மகா வித்தியாலய வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி முதல் 4 மணிவரை இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியும் குருநாகல் மாலிய தேவ மொடல்ஸ் கல்லூரிகளின் ஒன்றுகூடும் இலங்கை அமைப்பும் இணைந்து இந்த மருத்துவ முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

இதில் பலதுறைசார் மருத்துவ நிபுணர்களும் கலந்துகொள்வதால், பொதுமக்கள் பங்குபற்றி பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# கிளிநொச்சி பொலிஸ் கொலை; கைதானோர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆனந்த சமரக்கோனின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பரந்தன் மதுபான விற்பனை நிலையத்தில் பணியாற்றும் ஐவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அந்த நிலையத்தின் முகாமையாளர் எஸ். சந்திரகுமார் மற்றும் பணியாளர்களான ரி. தர்மநாதன், ம. மாதராஜன், பா. ஜெயந்தபவன், என். நிசாந்தன் ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் நேற்று கிளிநொச்சி பதில் நீதிவான் திருமதி ச. விஜயராணி முன் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி மதுபான நிலையத்துக்குச் சென்று மது அருந்திவிட்டு கலாட்டா செய்தார் என்றும்-

அவரை தாங்கள் பலவந்தமாக வெளியேற்றியதாகவும் கைதானவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ஒ-ஐ)

# மீன் பிடித்தவரை கடித்தது கடற்பாம்பு

தென்மராட்சி,ஜூன்14

வடமராட்சி கிழக்கு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவரை கடற்பாம்பு கடித்து காயப்படுத்தியது.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கடற்பாம்பு கடித்த மருதங்கேணி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வேலாயுதபிள்ளை (வயது - 55) என்பவர் மருதங்கேணி வைத்திய சாலை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ- 207)

# நிகழ்வுகள்

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் செல்வி. ந. பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் திருமதி. கலைவாணி இராமநாதனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் செ. குபேரநாதனும் கலந்துகொள்வர்.

யாழ்ப்பாண இந்துசமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் ஆசியுரை வழங்குவார். (ஐ)

## காரைநகரில் பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் நடத்தப்படும் நாடகமும் அரங்கியலும் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் சங்கீதம், பண்ணிசை, நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், அறநெறி சமயம், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் செய்தல், தியானம், யோகாசனம் ஆகியவை உள்ளடக்கப்படுகின்றன.

இலவசமாக நடைபெறும் இந்த பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ளலாம் என பதிவாளர் அறிவித்துள்ளார். (313)

## கந்தபுராணப் படிப்பு பூர்த்தி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 14

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயத்தில் ஏப்ரல் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கந்தபுராணப் படிப்பு நாளை புதன்கிழமை பூர்த்தி நிகழ்வு நடைபெறவுள்ளது.

கந்தபுராணப்படிப்பு ஓதிய ஓதுவார்களை கௌரவிக்கும் நிகழ்வு அன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முன்னாள் அரச அதிபர் செல்லையா பத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடி அமீனுக்கு ஏற்பட்ட கதிதான் விரைவில் மஹிந்த குழுவுக்கும்!

## சாபமிடுகிறார் ரில்வின் சில்வா

வரலாற்றில் இகழப்பட்ட சர்வாதிகாரிகளான உகண்டாவின் இடிஅமீன் மற்றும் பிலிப்பைன்சின் மார்க்கோஸ் இற்கு நடந்த கதி மிக விரைவில் மஹிந்த குழுவினருக்கும் நடக்கும் என்று ரில்வின் சில்வா எதிர்வு கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் முக்கியஸ்தர்களுக்கு மனோவியாதி பிடித்திருப்பதாகவும், அதன் காரணமாக மிக விரைவில் சரிவை எதிர்கொள்வார்கள் என்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசு எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களையும் அனைவரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற மனோவியாதி அரசின் முக்கியஸ்தர்களுக்கு இருக்கின்றது. அதன் காரணமாக எதிர்க்கருத்துக்களை சகித்துக் கொள்ளும் பக்குவம் அவர்களிடம் இல்லை.

அரசுக்கு எதிரான விமர்சனங்களை தாங்கிக்கொள் ளும் மனோபக்குவம் அரசின் முக்கியஸ்தர்களிடம் இல்லை. அதன் காரணமாகவே அரச அதிகாரம், நீதிமன்றம், பொலிசார் மற்றும் உத்தி யோகபூர்வமற்ற குண்டர்களைக் கொண்டு அவ்வாறான கருத்துடையோரை பழிவாங்க முற்படுகின்றனர்.

இவ்வாறான குணாதிசயங்களைக் கொண்டிருந்த உகண்டாவின் இடி அமீன் மற்றும் பிலிப்பைன்சின் மார்க்கோஸ் போன்ற சர்வாதிகாரிகள் தற்போது வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் எறியப்பட்டு விட்டார்கள். அவ்வாறான ஒரு நிலை மிக விரைவில் மஹிந்த ராஜபக்ஷ குழுவினருக்கும் ஏற்படும் என்றும் ரில்வின் சில்வா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இணையச் செய்திகள்

# 30 ஆயிரம் சிறார்கள் பாலியற் தொழிலில்

இலங்கையின் சிறார்களில் 18 வீதமானோர் சிறுவர் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்படுவதாக சிறுவர் தொழிலாளர் கள் குறித்து ஆராய்ந்த வல்லுனர்கள் கூறுகிறார்கள் என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் கருத்து வெளியிட்ட கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான எஸ்.விஜயச்சந்திரன், இலங்கையில் குறிப்பாக மலையகப் பகுதியில் பெருந்தோட்டங்களில் 29.1 வீதமான சிறார்கள் தொழிலாளர்களாக இருப்பதாகக் கூறினார்.

பெருந்தோட்டங்களிலும், அதனையடுத்து கடந்த பல தசாப்தங்களாக யுத்தம் நடந்த வடக்கு கிழக்கிலும், தலைநகர் கொழும்பை அண்டிய குடிசைப் புறங்களிலும் சிறார் தொழிலார்கள் அதிகமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசு சிறுவர் தொழிலாளர் முறைமையை ஒழிப்பதற்கான பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற போதிலும் அவை பலவீனமாக இருப்பதாகவும் விஜயச்சந்திரன் கூறினார்.

இலங்கையில் சுமார் முப்பதினாயிரம் சிறார்கள் சுற்றுலாத் துறையில் பாலியல் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் காணப்படும் கட்டாயக் கல்வி முறைமை, பாடசாலைகளின் ஆழமான வலையமைப்பு மற்றும் அதிக பெற்றோர்கள் கல்வியறிவு பெற்றிருத்தல் ஆகியவை இதற்கான காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

# பொஸ்னியாவைப் போன்று இலங்கையிலும் போரால் பெண்களுக்கே பாதிப்பு!

பொஸ்னியாவைப் போன்று இலங்கையிலும் பெண்கள் போரின் போது பிரதான இலக்குகளாகத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக பெங்களூர் பல்கலைக்கழக கலாநிதி நியூமேன் என்பவர் தெரிவித்துள்ளார்.

இவர் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற நிரந்தர தீர்ப்பாயத்தின் நான்கு பேச்சாளர்களில் ஒருவராக உள்ளார்.

போல் நியூமேன் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலக நாடுகள், இலங்கையின் வடக்கு கிழக்கில் பெண்கள் மீது படையினரால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களை பெரிதாகஎடுத்துக் கொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு தனது அறிக்கையில் இலங்கைப் படையினர் இறுதி யுத்தத்தின் போது பொது மக்களைக் குறிப்பாக பெண்களை காப்பாற்ற தவறிவிட்டது என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இலங்கையின் அதிகாரிகள் இந்த செய்திகளை பொய்யானது. அடிப்படையற்றது என்று கூறிவருகின்றனர்.

இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு பெண்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்போது சரணடைந்தவர்கள் குறிப்பாக பெண்கள் பலர் காணாமல் போனதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற போர் காரணமாக சுமார் 80 வீதமான பெண்களும் சிறுவர்களுமே பாதிக்கப்பட்டனர்.

சனல் - 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய போர்க்குற்ற காட்சிகளின்போது பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் மதிப்பீட்டின்படி வடக்கு, கிழக்கில் மாத்திரம் 90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் கணவர்மாரை இழந்துள்ளனர்.

இதன் காரணமாக அவர்கள் ஆண்கள் மேற்கொள்ளும் கடினமான பணிகளை மேற்கொண்டு தமது குழந்தைகளைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை தவிர, வடக்கு, கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றுவதற்காக, சிங்கள படைவீரர்கள் இளம் தமிழ் யுவதிகளை திருமணம் செய்ய அரசு ஊக்கமளித்து வருகிறது.

இவ்வாறான இனச்சுத்திகரிப்புக்கு பெண்களைப் பாதிப்பிற்குள்ளாக்கும் நடவடிக்கையே பொஸ்னியாவிலும் மேற்கொள்ளப்பட்டது - என்றார்.

உதயன் வெளியீட்டகத்தின்

இரு சஞ்சிகைகளின் வெளியீட்டு விழா



பல்சுவை மாத இதழ்



சிறுவர்களுக்கான மாத இதழ்



உதயன் கேட்போர் கூடத்தில்
நாளை 15-06-2011 புதன்கிழமை
பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

உங்கள் பிரதிகளுக்கு முகவர்களிடம் இப்போதே பதிவு செய்யுங்கள்

மேலதிக விவரங்களுக்கு:
உதயன் வெளியீட்டகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயனும் கிடைக்கவில்லை. எனவே, அரசு தீர்மானித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் முன்னைய குழுக்களைப் போன்றே காலத்தை வீணடிக்கும் செயலாக அமையும் - என்றார்.

ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதை காலம் கடத்துவதற்காகவே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கப்போகிறது என அரசு இந்திய உயர்மட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கம் அரசுக்கு இல்லை. எனவேதான் சர்வகட்சி மாநாடு போன்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் அமைக்க முனைகின்றது. இது வெறும் காலத்தைக் கடத்தும் செயலாகும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதன் மூலம் அனைத்து கட்சிகளதும் கருத்துகளைப் பெற்று இனப் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க அரசு தீர்மானித்துள்ளது. இதன் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியப்படாது. அத்துடன், ஏகோபித்த தீர்மானம் ஒன்றும் எடுக்க முடியாது.

அனைவருக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என்று அரசு கருதினால், எந்தவித குழுக்களையும் நியமிக்காமல், நியாயமான உடனடித் தீர்வை அரசு முன்வைக்கவேண்டும். அதைச் செய்யாமல், நாடாளுமன்றக் குழுவை அரசு நியமிக்குமானால், அது காலத்தை வீணடிக்கும் முயற்சியாகும் - என்றார்.

இது தொடர்பாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரி.சித்தார்த்தன் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்துக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க அரசு முயற்சிக்கிறது. இது காலத்தை வீணடிக்கும் முயற்சியாகும். இனப்பிரச்சினைக்கு அரசு இக்குழுவை நியமித்தால் தமிழரின் தீர்வுக்காக அரசு நியமிக்கும் மூன்றாவது குழுவாக அது அமையும்.

யுத்தத்துக்குப் பின்னர் அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் பலவீனமடைந்துள்ளனர். எனவே, இந்தியா போன்ற வெளிநாடுகளின் அழுத்தம் அவசியமாகின்றது.

அனைத்துக் கட்சிகளையும் இணைத்து இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் தொடர்பான கருத்துகளையும், யோசனைகளையும் பெறுவது என்று அரசு தெரிவித்துள்ளது. தமிழர்களுக்கே இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவைப்படுகின்றது.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட கட்சிகளுடனேயே அரசு பேச்சு நடத்தவேண்டும். அதைவிடுத்து, அனைத்துக் கட்சிகளுடனும் பேசுவதற்கு அரசு தீர்மானித்துள்ள நிலையில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு கிடைக்காது - என்றார்.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் அரசின் தீர்மானம் காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடாகும்.

இந்திய உயர்மட்டக்குழுவின் இலங்கை விஜயத்தில் இந்திய அரசு, தமிழர் விடயத்தில் எதனையும் சாதிக்கவில்லை. இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்திய மத்திய அரசு உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை மனதிலிருந்து அஸ்தமிக்கின்றது.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடனான பேச்சுகள் நடைபெற்று வரு கின்றபோதிலும், நாடாளுமன்றத் தெரி வுக்குழு அல்ல, வேறு எந்த வகையி லும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க மாட்டோம் என்று இலங்கை அரசு இந்தியாவுக்கு மறைமுகமாகத் தெரிவித்துள்ளது.

இதனைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இந்திய அரசு உள்ளது. 'பேச்சு பல்லக்கு, தம்பி கால்நடை' என்பதைப் போலவே தமிழரின் இனப்பிரச்சினைக்கான பேச்சுகளும் காணப்படுகின்றன - என்றார்.

இதுகுறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தது. இதன் இறுதி சாதனையே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் முயற்சியாகும்.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா, மாவட்ட சபைகள், சந்திரிகா பொதி, ரணில் விக்ரமசிங்க பேச்சு, சந்திரிகாவின் ஆழிப்பேரலை சபை, சர்வகட்சிக் குழுவின் அறிக்கை ஆகிய ஒப்பந்தங்களையும், முயற்சிகளையும் செய்து காலத்தை வீணடித்தது அரசு.

அவற்றைக் கடந்தே இன்று இவ்வாறானதொரு முயற்சியை மேற்கொள்ளவுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அரசு அமைக்குமானால் அது அதி முட்டாள்தனம்.

தமிழர்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது? பயங்கரவாதம் தானே அன்றிருந்த பிரச்சினை? தற்போது அதுவும் இல்லையே என்று கூறும் சிந்தனையின் வெளிப்பாடே அரசின் இந்த நடவடிக்கையாகும் என்று கூறினார்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

அரசுப்பக்கம் இருந்துகொண்டு இனவாதத்தைத் தூண்ட முயலும் அமைச்சர்களுக்கு அடிபணிந்தே அரசு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை இழுத்தடிக்கின்றது. இதனை மேலும் இழுத்தடிக்கவே நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க அரசு முனைகின்றது.

இனவாதத்தைத் தூண்ட முயலும் அமைச்சர்களுக்கு அடிபணிந்தே அரசு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை இழுத்தடிக்கின்றது. இதனை மேலும் இழுத்தடிக்கவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன ஆகியோரே இதன் பின்னணியில் உள்ளனர் - என்றார்.

(அ-சி)

# வித்தகபுரம் பகுதிகளை புனரமைக்க நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 14

இருபது வருடங்களின் பின்னர் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம் கிராமத்தில் வீதிகளைத் துப்புரவு செய்வதற்கும் , மண் அணைகளை அகற்றுவதற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 1.5 மில்லின் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடியிருப்பாளர்கள் தமது காணிகளை துப்புரவு செய்வதற்கு 6 லட்சத்து 77 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீதிக் காணிகளை துப்புரவு செய்வதற்காக 5 லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

( ம-15)


## 21 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*தாய் மடியில்:*
*07.12.1940*

*இறை அடியில்:*
*25.05.2011*



அமரர்
## சரவணமுத்து அருணாசலம்

*திதி: வைகாசி அபரபக்க நவமி*

அருணோ தயமாய் இருந்தீர் அப்பா,
அளப்பல பணிகள் புரிந்தீர் அப்பா
இருளில் எம்மை இங்கே விட்டு
எங்கே மறைந்தீர் அருணா சலமே

*கடந்த 25.05.2011 புதன்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் தந்தை அமரர் சரவணமுத்து அருணாசலம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.06.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

**தகவல்:**
**அ.கோபாலராஜன் (ராஜன் )குடும்பம்**
**அ.இராஜ்குமார் (குட்டி)**

*83, கண்டி வீதி,*
*கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

(48,27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றவா மற்றொரு தெரிவுக்குழு...?

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதில் தனக்கு ஆரா அக்கறை உள்ளதாக வர்ண மொழி பேசி, அனைத்துலக நாடுகளுக்கு இலங்கை அரசு வெளிக்காட்டி வருகிறது. சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதே அதன் பின்னணியில் உள்ள சூத்திரம்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ- மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த ஏப்ரல் மாதம் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரதி, அன்றைய தினமே, இலங்கை அரசாங்கத்துக்கு அதன் அவதானிப்புக் குறித்து கருத்துத் தெரிவிக்கக் கோரி அனுப்பி வைக்கப்பட்டது.

தனக்கு பாதகமான அறிக்கையையே நிபுணர்குழு தயாரிக்கும் என்பதனை முன்கூட்டியே சாடைமாடையாக மணந்து பிடித்த அரசு, தமிழர் பிரச்சினையை நியாயபூர்வமாகத் தீர்ப்பதில் தனக்கு மிகுந்த ஆர்வமும் அக்கறையும் உள்ளதாக கடந்த ஜனவரியில் சமிக்ஞை காட்டியது.

அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதம் 10ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தை முதலாவது தடவையாக நடைபெற்றது. அதன் பின்னர் அரசு-கூட்டமைப்புக்கு இடையே ஐந்து தடவைகள் இருதரப்புப் பேச்சுக்கள் நடைபெற்று விட்டன.

அவற்றில் ராஜீவ்- ஜே.ஆர். ஒப்பந்தத்தின் கீழான பதின்மூன்றாவது அரசமைப்புச் சட்ட திட்ட திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்தும் ஆராயப்பட்டு வந்தது.

பேச்சுக்களின் போது பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரமான காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்துப் பிரஸ்தாபிக்காத அரசாங்கத் தரப்பு, தனது அங்கத்துவக் கூட்டுக் கட்சிகளின் பிரதானிகள் ஊடாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கமுடியாது என்று முழங்க வைத்தது.

அந்த முழக்கங்களை - அடிப்படையாக வைத்து, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கு வதனைத் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எதிர்ப்பதால், பதின்மூன்றாவது அரசமைப்புச் சட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடந்த வார இறுதியில் கொழும்பு வந்திருந்த இந்திய அரசின் மூவர் அடங்கிய உயர் அதிகாரிகள் குழுவிடம் முகத்தில் அறைந்தது போன்று கூறி அனுப்பினார்.

இந்தியாவிடம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து சம்மதம் பெற்றுவிட்டதால், அதன் மீது அரக்கு முத்திரை ஒட்டுவதற்கு (சீல் செய்வதற்கு) தயாராகிறார் ஜனாதிபதி மஹிந்த. ஆம். அது தான், அவர் திருவாய் மலர்ந்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தனது அரசுக்கு எல்லையில்லா விருப்பம் உண்டு என்று இந்தியா உட்பட உலக நாடுகளுக்கு மேளம் தட்டிக் கொண்டு, காலத்தை இழுத்தடிக்கும் வழியில் காலடி வைப்பதற்காகவே தெரிவுக்குழு என்ற இந்தச் சூத்திரம் என்பதனை மத்திய வகுப்பில் பயிலும் மாணவன் கூட புரிந்து கொள்வான்!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான பேச்சின் போது அவர்களை அரசுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வருமாறும், தாம் ஒரு வெளிநாடு என்ற வகையில் அதனையே அரசிடமும் கூறமுடியும் என்றும் அதற்கதிகமாக எதனையும் செய்யமுடியாதென்றும் இந்திய உயர் அதிகாரி சிவ்சங்கர் மேனன் தமிழர் தரப்பைக் கை கழுவி விட்டதும் அரசாங்கத்தை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் முடிவு காலத்தை வாங்கிக் காரியத்தைக் கெடுக்கும் தந்திரம் என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அகில உலகத்துக்குமே தெரிந்த பரகசியம்!

அப்பாடா! தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டு அரசுகளால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள், அனைத்துக் கட்சிக் குழுக்கள், நிபுணர் குழுக்கள் ஏராளம், ஏராளம்! தமிழருக்குக் கவ்வைக்கு உதவாத சிபார்சுகள் வெளியிடப்பட்ட போதிலும் அவையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எதுவும் பலனளிக்கவில்லை.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்று இலங்கை அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் ஏராளம். ஏராளம்! பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், சந்திரிகாவின் பொதி என்று அவற்றில் எதுதான் உருப்படியாக நடைமுறைப்படுத்தப் பட்டது.

மங்கள முனசிங்க குழு, அனைத்துக் கட்சிக் குழு, திஸ்ஸவிதாரண குழு என்று எத்தனையோ குழுக்கள் நியமிக்கப்பட்டும் பிரச்சினையைத் தீர்க்க அவை எந்த வகையிலும் உதவவில்லை.

இத்தனைக்குப் பின்னரும் மற்றுமொரு அனைத்துக் கட்சிக் குழுவா? இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவைப்படுவது தமிழ் மக்களுக்கு. ஆகையால் அவர்களின் கட்சிகளுடன் ஒரு முடிவை எட்டுவதே நியாயம்.

தமிழர்களுக்கு நியாயமான, நீதியான ஒரு தீர்வை வழங்காது, மேலும் இழுத்தடிப்பதும் அதனூடு தமிழர்களை நிரந்தரமாக ஆளப்படும் மக்களாக, இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருப்பதற்கான ஏற்பாடே- மீண்டும் ஒரு தடவை வைக்கப்படும் பொறியே - நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற குழி!

## எரிபொருள்களின் விலைகளை உயர்த்தக் கோருகிறது ஐ.ஓ.சி

கொழும்பு, ஜூன் 14

இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐ.ஓ.சி) டீசல் மற்றும் பெற்றோலின் விலைகளை அதிகரிக்கவுள்ளது.

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துச் செல்லும் நிலைப்பாடே தற்போது நிலவுகிறது.

இந்திய எண்ணெய் நிறுவனம் தற்போதுள்ள விலைகளில் டீசல் மற்றும் பெற்றோலை விநியோகித்து வருவதன் காரணமாக பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக அதன்சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதைய விலைக்குத் தொடர்ந்து டீசலை விநியோகிப்பது சாத்தியமற்றது என்பதால் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகளை அதிகரிப்பதற்கு எமது நிறுவனம் அரசிடம் அனுமதி கோரியுள்ளது எனவும், தற்போதைய விலையில் விநியோகிக்கப்படும் டீசல் லீற்றர் ஒன்றுக்கு முப்பது ரூபா வரை நிறுவனத்துக்கு நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்திய எண்ணெய் நிறுவனம் கடந்த பெப்ரவரி மாதத்தில் டீசல் விலையை லீற்றர் ஒன்றுக்கு ஐந்து ரூபாவால் அதிகரித்திருந்தது.

இதற்கமைய மேற்படி நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் டீசலின் விலை 85 ரூபாவாகும். கடந்த ஏப்ரல் மாதத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் விலையை லீற்றர் ஒன்றுக்கு 3 ரூபாவால் அதிகரித்திருந்தது.

இந்திய எண்ணெய் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் டீசலின் விலை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய்யப்படும் டீசலின் விலையை விட 9 ரூபா அதிகம் எனத்தெரிவிக்கப்பட்டது.

(த-22)

## நாளை இரவு நிகழவிருக்கும் மிக நீண்ட நேர சந்திர கிரகணம்

கொழும்பு, ஜூன் 14

இந்த நூற்றாண்டில் மிக நீண்டநேரம் நிகழவிருக்கும் சந்திர கிரகணத்தை நாளைய தினம் 15 ஆம் திகதி புதன்கிழமை இரவு இலங்கை வானில் பார்க்கக் கூடியதாகவிருக்கும்.

மத்திய ஆசியா, கிழக்கு ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் மேற்கு அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களில் இந்த சந்திர கிரகணத்தை பார்க்கக் கூடியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டுக்குப் பிறகு நிகழும் மிக நீண்ட நேரமான இந்த சந்திர கிரகணம் 100 நிமிட நேரம் நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புதன்கிழமை இரவு 11.32 மணியிலிருந்து விடியற்காலை 3.32 வரை சந்திர கிரகணம் தெரியும் என்று இலங்கை வானாராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த நூற்றாண்டில் மிக நீண்ட நேரம் இடம் பெறும் இந்த சந்திர கிரகணத்தின் போது, அது முழுக் கிரகணம் என்பதால் மிகவும் இருள் சூழ்ந்து க்ாணப்படும் என்று கூறப்படுகின்றது.

(ப)

## அல்லிப்பளைப் பாடசாலையை மீண்டும் இயக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

பளை, அல்லிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். போரின் போது கட்டடங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ள இந்தப் பாடசாலையைத் திருத்தியமைப்பதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் அல்லிப்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களின் பிள்ளைகள் பளை நகரப் பாடசாலைகளுக்கு நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

அல்லிப்பளைப் பாடசாலையை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால்; இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் பயனடைவார்கள் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இதனையடுத்து பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க அல்லிப்பளை தமிழ்க் கலவன் பாடசாலையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிஅபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கல்வித்திணைக்களத்துக்குப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-313)

## மோ. சைக்கிளில் சென்றவரை தாக்கி 4 பவுண் தங்கச் சங்கிலி அபகரிப்பு

வடமராட்சி, ஜூன் 14

நண்பர் ஒருவரின் வீட்டில் உரையாடி விட்டு மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்பியவரை மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வழிமறித்து அவரது கழுத்தில் இருந்த 4 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் உடுப்பிட்டி வீரபத்திரர் கோயில் வடக்கு வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கே. ஜெயரட்ணம் என்பவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டதாகும்.

கோயில் வடக்கு வீதி வழியாக தமது வீட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மறித்து கசிப்பு குடித்து விட்டு வருகிறீரா எனக்கேட்டு, அவரைத் தாக்கி கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தொண்டமானாறுப் பக்கமாக மோட்டார் சைக்கிளில் சென்று மறைந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து வல்வெட்டித் துறைப் பொலிஸில் முறைபப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த-236)

## இரத்ததானம் செய்வோருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

குருதிக் கொடையாளர் தினமான இன்று இரத்ததானம் செய்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு யாழ். போதனா வைத்திய சாலையில் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. குருதிக் கொடையில் ஆர்வம் உள்ளவர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்த வங்கிக்கு நேரடியாகச் சென்று இரத்ததானம் செய்ய முடியும்.

உயிர் காக்கும் உன்னத பணியில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது

(ம-149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்க மறுக்கும் மின்பிறப்பாக்கிகள்; நெடுந்தீவு மக்கள் இருளில் தவிப்பு

## இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த நிலை

யாழ்ப்பாணம் ஜூன் 14

நெடுந்தீவில் உள்ள மின் பிறப்பாக்கிகள் அடிக்கடி இயங்க மறுத்து அடம்பிடிப்பதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

நெடுந்தீவு மின் விநியோகத்துக்கென 250 கிலோ வாற்ஸ் வலுக்கொண்ட இரண்டு மின் பிறப்பாக்கிகள் உள்ளன. இதில் ஒன்று பழையது என்பதால் அடிக்கடி பழுதடைகின்றது. மற்றைய மின்பிறப்பாக்கி தனது சக்திக்கு அப்பால் நீண்ட தூரங்களுக்கு மின் வழங்க முடியாத நிலையில் திடீர்த் திடீரென இயங்கமறுத்து நெடுந்தீவை இருளில் மூழ்கச்செய்கிறது.

இவை ஒருபுறம் இருக்க இலங்கை மின்சாரசபை இந்தச் சேவைக்கான எரிபொருள்களை ஒழுங்காக அனுப்பிவைக்காததால் டீசல் இல்லை எனக் கூறி சேவைநிறுத்தப்படுவதாகவும், அங்குபணியில் உள்ளவர்களும் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

காலை 4.30 மணி முதல் காலை 6.30 மணிவரையான மின் விநியோகம் சில சமயங்களில் ஒரு மணிநேரம் வரை தாமதிப்பதாகவும், இரவு நேரங்களில் தாமதங்களும் ஸ்தம்பிதமும் ஏற்படுவதாகவும் இதனால் மின் பாவனைப் பொருள்கள் சேதமடைவதாகவும் பொது மக்கள் கூறுகிறார்கள்.

(த-7)

# இலங்கை வங்கி விரிவாக்கல் கிளை திறப்பு விழா நாளை நயினாதீவில்

வலி.வடக்கு, ஜூன் 14

நயினாதீவுக்கு வருகை தரும் இந்து பௌத்த யாத்திரிகர்களின் அவசர வங்கிச் சேவையை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கை வங்கியின் புதிய விரிவாக்கற்கிளை நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு நயினாதீவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நயினாதீவு மக்கள் தமது வங்கிச்சேவையை பெறுவதில் நாளாந்தம் பல்வேறு சிரமங்களைச் சந்தித்து வந்தனர்.

நாளை திறந்து வைக்கப் படவுள்ள இந்தக் கிளைக் காரியாலயம் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளைக்கும் ஓர் விரிவாக்கற் கிளையாக தனது சேவையை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஏற்கனவே நெடுந்தீவுப் பிரசேத்தில் பிரதான விரிவாக்கற் கிளைச் சேவையை ஊர்காவற்றுறைக் கிளை வழங்கி வருகின்றது.

தற்போது விரிவுபடுத்தப்படும் இந்த இரண்டாவது விரிவாக்கற் கிளை தீவக மக்களின் இலகு வான வங்கிசார் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# மட்டுவில் ஒதுக்குப்புற பகுதியில் 'மைனர்'களின் அடாவடிச் செயல்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 14

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றுவரும் மாணவிகள் மற்றும் பெண்கள் வீதிகளில் பயணிப்பதில் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.


பாடசாலைக்குச் செல்லும் நேரம் மற்றும் தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் நேரத்திலும் இளம் பெண்கள் தனிமையாகச்செல்லும் நேரங்களிலும் மோட்டார் சைக்கிள்களில் வரும் இளைஞர்கள் பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்படுவதாகக் கூறப்படுகின்றது.

வீதிகளில் ஆள்கள் நடமாட்டம் குறைந்த இடங்களிலும், பற்றைகள் காணப்படும் இடங்களிலும் இந்த மைனர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாகவும் குறிப்பாக மட்டுவில், சரசாலை, சந்திரபுரம், கல்வயல் போன்ற இடங்களில் இந்த நடவடிக்கைகள் அதிகம் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

பொலிஸார் இந்தப் பகுதிகளில் பகல் நேரத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டால் இத்தகைய இளைஞர்களின் அடாவடித்தனமான செயல்களை கட்டுப்படுத்த முடியும் என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்.

(த-86)

## ஊக்குவிப்பு...



கல்விக்காக: யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 335பேருக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதியும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான ச.சத்தியசீலன் மாணவர் ஒருவருக்கு புலமைப்பரிசில் வழங்குகிறார். (த-4)

# மீளக்குடியமர்ந்தோருக்கு வைத்திய பரிசோதனை

வடமராட்சி, ஜூன்14

இந்தியாவிலிருந்து பருத்தித்துறை பிரதேச செலயர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோர் வைத்திய பரிசேர்தனை செய்து கொள்ள வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்றவர் தற்போது சொந்த இடங்களில் மீள்குடியேறி வருகின்றனர். அவ்வாறு மீள் குடியமர்வோர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குச் சென்று வைத்திய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-236)

# மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் சின்னங்கள் கந்தரோடையில்

## அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 14

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொல்லியல் அகழ்வாராய்ச்சியின் போது 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குடியிருப்பாளர்களின் தொல்லியல் எச்சங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறையும், இலங்கைத் தொல்லியல் திணைக்களமும் இணைந்தே கந்தரோடையில் கடந்த இரு மாத காலமாக அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அங்கு சுமார் மூன்று மீற்றர் சதுர அடியில் சுமார் 20 அடி ஆழத்துக்கு நிலத்தைத் தோண்டி அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு இரண்டு இடங்களில் அங்கு அகழ்வாராய்ச்சிப் பணிகள் இடம் பெற்று வருகிறன.

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் இந்த அகழ்வாராய்ச்சிப்பணியை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இன்னும் சில தினங்களில் இந்த அகழ்வாராய்ச்சி பணி நிறைவடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்கள் பல சிதைந்தும் சிதையாமலும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1970 ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத் தொல்லியல் துறை அறிஞர் விமல வேக்லி கந்தரோடையில்ஆய்வை மேற்கொண்டு அங்கு தொல்லியல் சின்னங்கள் உள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

அவரது ஆய்வை அடிப்படையாகக் கொண்டே கந்தரோடையில் தற்போது அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (த-14)

# இளைஞருக்கு முறிந்தன இரு கைகளும்

தென்மராட்சி, ஜூன் 14

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இளைஞனுக்கு இரண்டு கைகளும் முறிந்தன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் ராஜ் (வயது -24) என்பவருக்கு இந்தக் கதி ஏற்பட்டது.

பிரஸ்தாப இளைஞர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, சாவகச்சேரிப் பகுதியில் மற்றொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய கே. அருணாசலம் (வயது -77) என்னும் வயோதிபர் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-207)

# தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் முதலாம் திகதி திணைக்களங்களுக்கு

தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி சகல திணைக்களத் தலைவர்களுக் கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இவ்வாறு யாழ். தேர்தல் திணைக்கள உதவித்தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது.

(த-15)

# தபால் மூல வாக்களிப்புக்கு நிராகரிக்கப்பட்டவர் தேர்தல் கடமையில் ஈடுபட முடியாது

## அவ்வாறு இருந்தால் உடன் ரத்துச் செய்க

யாழ்ப்பாணம், ஜூன் 14

2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் தபால் மூல வாக்களிப்புக்கு நிராகரிக்கப்பட்டவர்கள், வாக்களிப்பு நிலையத் தேர்தல் கடமைகளுக்காக (பகல்) தெரிவு செய்யப்பட்டிருந்தால் உடனடியாக அதனை இரத்துச் செய்ய வேண்டும். இவ்வாறு யாழ் தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ. சு. கருணாநிதி தெரிவித்தார்.

அடுத்த மாதம் 23 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட 19 சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் யாழ். தேர்தல் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது. தபால் மூல வாக்களிப்பு தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதற்கு முன்னர் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பின்னர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடுத்த மாதம் 23 ஆம் திகதி தேர்தல் இடம் பெறவுள்ளது.

அடுத்த மாதம் இடம் பெறும் தேர்தல் புதிதாக வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரமே இடம் பெறவுள்ளது. இதனால் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப் பங்களில் சில இரத்துச் செய் யப்பட்டுள்ளன.

அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டவர்கள் தமது வாக்குகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று இடுதல் வேண்டும். அத்துடன் இரத்துச் செய்யப்பட்டவர்களில் யாராவது தேர்தல் கடமைகளுக்காக (பகல்) தெரிவு செய்யப்பட்டிருந்தால் அந்தக் கடமையை யாழ் தேர்தல் திணைக்களத்துக்கு அறிவித்து இரத்துச் செய்தல் வேண்டும் - என்றார்.

(த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஷ்டத்தில் இயங்கும் சங்கங்களை மேம்படுத்த துறைசார் ஆலோசகர்கள்

## வடமாகாண ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 14
நஷ்டத்தில் இயங்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற துறை சார்ந்தோரை அனுப்பி அவற்றை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி,யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நஷ்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டடப் புனரமைப்பு, வாகன வசதிகள், அரிசி ஆலை இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு நிதியுதவிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் ஆளுநர் சந்திரசிறி குறிப்பிட்டார். (த-7)

## குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும்

# ஆயிரக்கணக்கான பக்தர்கள் இம்முறை வற்றாப்பளைக்கு

யாழ்ப்பாணம் யூன் 14
வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக யாழ். குடாநாட்டில் இருந்து இம்முறை ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றுக் காலை முதல் அங்கு சென்றனர்.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து இதற்கென விசேட பஸ் சேவைகள் இடம்பெற்றன. காலையில் இருந்து நண்பகல் வரை இடம் பெற்ற இந்த பஸ் சேவைகள் மூலம் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அங்கு சென்றதைக் காண முடிந்தது.

குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் மக்கள் வாகனங்கள் மூலம் வற்றாப்பளைக்குச் சென்றனர்.

ஆலயச் சூழலில் பக்தர்களின் வசதி கருதி குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

# மட்டுவிலில் வீடுகளுக்கு நள்ளிரவில் கல் வீச்சு

## சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு

வலி.வடக்கு, ஜூன் 14
மட்டுவில் மகாவித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள வீடுகளின் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்டுவரும் கல்வீச்சுக்களால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் இரவு நேரத்தில் நித்திரையிழந்து தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று நாள்களாக நள்ளிரவு வேளையில் மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் நிலையில் இந்தக் கல்வீச்சு இடம்பெற்று வருவதுடன் வீடுகளின் கூரைச் சீற்றுக்களும் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட சிலர் வேண்டும் என்று இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், ஏற்கனவே இந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் திருட்டுகள் இடம்பெற்றதாகவும் அதனைத் தொடர்ந்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தொடர்ந்து தற்போது இத்தகைய கல்வீச்சுக்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸாருக்கும் மற்றும் படைத்தரப்பினருக்கும் அந்தப் பகுதி மக்கள் முறையிட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களினால் தெரிவிக்கப்பட்டது. (த-86)

## கல்விச்சேவை...



வெற்றி பெறட்டும்:- மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வு கடந்த 8ஆம் திகதி மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் நடைபெற்றது. வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன் நாடாவை வெட்டி பாடசாலையைத் திறந்து வைக்கிறார். அருகில் பேராசிரியர் மா.வேதநாதன், தலைவர் ந.சண்முகராஜா, மற்றும் முன்பள்ளி ஆசிரியைகள் உள்ளனர். (த)

# மூன்று தடவை ஒத்திவைக்கப்பட்ட நெல்லியடி ம.வி.அரங்கு திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் கலையரங்குத் திறப்பு விழா மூன்றாவது தடவையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா கடந்த மே மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருந்தது. இதனை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி திறந்து வைக்கவிருந்தார். இந்த சூழ்நிலையில் முதல் நாள் இரவு அனைத்து ஏற்பாடுகளும் முடிவுற்ற நிலையில் அந்த விழா பிற்போடப்பட்டது.

இதன் பின்னர் 9 ஆம் திகதி அது நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.அன்றைய தினமும் அது நடைபெறவில்லை. மீண்டும் அது ஒத்திவைக்கப்பட்டது.

இதன் பின் நேற்று 13 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இதன் திறப்பு விழா நடைபெறவிருந்தது. அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. வடமாண ஆளுர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து அதனைத் திறந்து வைக்க விருந்தனர்.

இந்த நிலையில் இந்தத் திறப்பு விழாவும் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இந்தத் திறப்பு விழா மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. இது மீண்டும் எப்போது திறந்து வைக்கப்படும் என்பது பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-319)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வங்கிக் கிளைகள்

யாழ்ப்பாணம் ஜூன் 14
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொது மக்களின் வங்கிச் சேவையை இலகுபடுத்தும் நோக்கில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் கிளைகள் தற்போது அங்கு திறக்கப்பட்டுள்ளன..

பளை மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வங்கிக் கிளைகளில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச எல்லைக்கு உட்பட்ட பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# இந்தியாவின் கூரைத் தகரங்கள் பச்சிலைப்பள்ளி குடும்பங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14
இந்திய அரசினால் வழங்கப்பட்ட கூரைத் தகரங்கள் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த ஆயிரத்து எழுநூற்று மூன்று குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களின் வீடமைப்புத் திட்டத்துக்காக இந்திய அரசினால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 12 கூரைத்தகரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களில் ஆயிரத்து 703 குடும்பங்களுக்கு 20 ஆயிரத்து 436 கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்தார். (த-313)

# முற்றவெளிப் பிரதேசத்தின் தாழ்ந்த பகுதிகளுக்கு மண்

யாழ்ப்பாணம் ஜூன் 14
யாழ்.முற்றவெளியில் தாழ்ந்த பகுதிகள் மண் கொண்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

தனியார் பஸ்கள் தரித்து நிற்கும் பகுதிக்கு அருகிலுள்ள தாழ்ந்த இடங்கள் இவ்வாறு மண் கொட்டப்பட்டு நிரப்பப்பட்டு சீர்செய்யப்படுகின்றன.

மாரிகாலத்தில் இந்தப் பகுதியில் வெள்ளம் அதிகளவில் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் வாகனச் சாரதிகளும் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதியில் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரிக்கிறது. இதனால் இந்தத் தாழ்ந்த பகுதிகள் மண் கொட்டப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. (த-26)

# வாகனங்களில் கடலுணவு விற்பனை

யாழ்ப்பாணம், ஜூன் 14
வலி.கிழக்குப் பகுதியில் வாகனங்களில் கடலுணவுகள் எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் இவ்வாறு மீன் விற்பனை இடம் பெற்று வருகின்றது.

சிறிய ரக வாகனங்களில் வியாபாரிகளால் எடுத்து வரப்படும் இந்தக் கடலுணவுகள் அந்தப் பகுதி வீதிகளில் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது. (த-26)

# உள்ளூராட்சித் திணைக்களத்தின் வீதிகள், கட்டடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள வீதிகள், கட்டடங்கள் என்பன தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் வடக்கின் துரித மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஜெகூ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: பருத்தித்துறை, வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.கிழக்கு, சாவகச்சேரி ஆகிய 5 பிரதேச சபைகளில் உள்ள கட்டடங்கள், வீதிகள் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறையில் 5.8 மில்லியன் ரூபா செலவில் சந்தைக் கட்டடம் ஒன்றும், 5.5மில்லின் ரூபா செலவில் பிரதேச சபை உப அலுவலகம் ஒன்றும், வலி.கிழக்கில் வளலாயில் 5.3 மில்லியன் ரூபா செலவில் சந்தைக் கட்டடம் ஒன்றும், குடத்தனையில் 5.5 மில்லியன் ரூபா செலவிலும், நாகர் கோயிலில் 5.8 மில்லியன் ரூபா செலவிலும் இரு சந்தைக் கட்டடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டடங்கள் விரைவாகப் பூர்த்தியாக்கப்பட்டு மக்களின் தேவைகளுக்காக திறந்து வைக்கப்படும்- என்றார். (த-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாக்பெட்

## பதவி வெற்றிடம்

விவசாயம், மொத்த மற்றும் சில்லறை விற்பனை, இறக்குமதி, ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பரவலான தொடர்பினைப் பேணிவரும் நாட்டின் முதன்மைக் கூட்டுறவு அமைப்புக்களில் ஒன்றாகிய இச்சம்மேளனத்துக்குரிய யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்காக எரிபொருள் நிரப்புநர் பதவியின் பொருட்டு கீழ் குறித்துரைக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலும் தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர் குழுவின் விண்ணப்பங்கள் அவர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள குறித்த சங்கங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பதவி :- எரிபொருள் நிரப்புநர்**

**சம்பள அளவுத் திட்டம் எண் :- 8-2-1-1-11**

**சம்பளத் திட்டம் :- 13500 - 15525**
**10x130 - 5x145**

மேற்கண்ட சம்பளத்துக்குப் புறம்பாக உணவுப்படி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வாழ்வாதாரப் படிகள் மற்றும் பிற நன்மைகள் இப்பதவிக்கு உரித்தாகும்.

**வயது எல்லை:- 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.**

எனினும் தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லையானது தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது.

**கல்வி மற்றும் பிற தகைமைகள்**

* இரு தடவைகளுக்கு மேற்படாது கணிதம் மற்றும் மொழி உள்ளிட்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி எய்து இருத்தல் மற்றும் குறித்த துறையில் ஓராண்டு கால அனுபவம் இருத்தல்.
* மேற்குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் தாமே தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்கள் மூலம் விவரங்களைக் குறிப்பிட்டு, பிறப்புச் சான்றிதழ் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியுடன் விண்ணப்பங்களை 2011.06.30 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பதிவு அஞ்சலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
* சிங்களம் பேசக்கூடிய மற்றும் எழுதக் கூடிய ஆற்றலானது மேலதிக தகைமையாகும்.

**முகாமையாளர்**
**மாக்பெட் எரிபொருள்**
**நிரப்பு நிலையம்**
**165, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P : 0212226139**
(1929) (28-21)

# ஈழத்தமிழர் பாதுகாப்பான வாழ்வைப் பெற முதல்வர் ஜெயலலிதா உதவவேண்டும்

## உலகத்தமிழ் மாணவர் பேரவை வேண்டுகோள்

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் கரங்களுக்குள் அகப்பட்டு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பான வாழ்வை அமைத்துக் கொடுக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்வரவேண்டும் என்று உலகத்தமிழ் மாணவர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த மாணவர் பேரவை விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் ஈழத்தமிழர்களின் படுகொலை தொடர்பாக தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உலகத் தமிழர்கள் அனைவரின் உள்ளங்களிலும் குமுறிக்கொண்டிருந்த முள்ளிவாய்க்கால் வடுக்களுக்கு ஒத்தடம்கொடுப்பதுபோல் அமைந்திருந்தது.

ஈழத் தமிழர்களின் இதய வேந்தனாகத் திகழும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் தோற்றுவித்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வழிவந்த நீங்கள் தற்போது நிறைவேற்றிய இந்தத் தீர்மானம் அ.தி.மு.க. என்றும் உலகத் தமிழர்களின் நலன் காத்து நிற்கும் என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் நலன்களை புறந்தள்ளி தமது குடும்ப உறுப்பினர்களின் நலன்களுக்காக அரசியல் செய்யும் சில சுயநலக் காரர்களுக்கு மத்தியில் உலகத் தமிழர்கள் அனைவரையும் தமது குடும்பம் போல நினைத்து அவர்களின் நலன்களுக்காக அரசியல் நடத்தும் நீங்கள் தான் உலகத் தமிழினத்திற்கு தலைமையேற்கத் தகுதியானவர் என்பதில் மாற்றுக்கருத்துக்கிடமிருக்காது.

சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து நிற்கும் எம் ஈழத்தமிழ் மக்கள் நீண்டதொரு வரலாற்றுத் துயரை அனுபவித்து வருகிறார்கள். அழிவின் விளிம்பில் இருக்கும் அவர்களுக்குப் பாதுகாப்பான ஒரு தேசத்தை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக பிரிட்டன் நாடாளுமன்றில் மனு சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூன்14

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் சுயாதீன அனைத்துலக விசாரணைப் பொறி முறை அமைக்கப்பட வேண்டும் என்று கோரி பிரிட்டன் நாடாளுமன்றத்தில் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் கொன்சவேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்கொட் லீ இந்த மனுவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சுயாதீன அனைத்துலக விசாரணைக் குழு அமைக்கப் படவேண்டும் என்று ஸ்கொட் லீ இனால் சமர்ப்பிக்கப்பட்ட மனு தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றம் இன்னும் விவாதங்களை ஆரம்பிக்கவில்லை.

இதேவேளை இன்று பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி ஒளிபரப்பும் இலங்கைப் படையினர் மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பான காணொளியை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்துள்ளார்.

சனல் - 4 முன்னர் ஒளிபரப்பிய காணொளி உண்மையானது என்பதை ஐ.நாவின் சுயாதீன நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்காக எதிரணிகளின் கருத்துக்கு சந்தர்ப்பம்

## த ஹிந்து பத்திரிகை தகவல்

கொழும்பு,ஜூன்.14

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு எத்தகைய தீர்வைக் காணலாம் என்ற விடயத்தை இலங்கை அரசு எதிர்க்கட்சிகளின் கருத்துக்கு வாய்ப்பளிக்க விட்டுள்ளதாக த ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது:

இனப்பிரச்சினைக்கான தீர்வு தமது மனதில் உள்ளதாக ஏற்கனவே ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை தீர்வு தொடர்பில் இணக்கத்தைக் காண்பதற்காக அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 6 சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

இதுதொடர்பான அடுத்த பேச்சு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தநிலையில் 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை பின்பற்றியே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும் என்பதை தாம் வலியுறுத்தவில்லை என்று இந்தியாவும் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையும் இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்க்கட்சிகளும் தெரிவிக்கவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம், ஏதேனும் பிழை ஏற்பட்டால், எதிர்க்கட்சிகள் அரசையே குறை காணுகின்றன என்பதனாலாகும்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரச தரப்பை கோடிட்டு த ஹிந்து தகவல் தெரிவித்துள்ளது. (வ)

# வாகன விபத்தில் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்.14

தம்புள்ளவிலுள்ள பன்னம்பிட்டிய என்னுமிடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் தேசிய இராணுவ கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்ட லெப். கேணல் எம்.டி.எம். லெனதோ என்ற படைச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

தன்தெம்பே இராணுவ முகாமில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கும் பயிற்றுநராகப் பணயாற்றிய இவர் பயிற்சிகளை நிறைவு செய்து விட்டு வீடு திரும்பும்போது மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

மேற்படி படைச்சிப்பாய் பயணம் செய்த வாகனம் மீது வாகனமொன்று மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

மின்சார கம்பமொன்றுக்கு அருகில் காயத்துடன் காணப்பட்ட இவர் வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தாமல் எவ்வாறு பகிர்வை மேற்கொள்ள முடியும்?



## கேள்வி எழுப்புகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஜூன் 14

அரசியலமைப்பின் பதின் மூன்றாம் திருத்தச்சட்டத்தையே இன்னும் முழுமையாக அமுல் படுத்தாமல் அதற்கப்பால் சென்று எவ்வாறு அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள முடியும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி யெழுப்பியுள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள இந்தியாவிடம் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. ஆயினும் இன்னும் 13ஆவது திருத் தச்சட்டமே முழுமையாக அமுல் படுத்தப்படாத நிலையில் அதற் கப்பால் சென்று அதிகாரப் பகிர்வை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித் துள்ளார்.

இந்திய - இலங்கை அரசு களுக்கிடையிலான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான இணக்கப்பாடு குறித்து நேற் றைய திவயின சிங்களப் பத் திரிகைக்கு அளித்துள்ள பேட் டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் தொடர்ந்து தெரிவித்த தாவது,

அதிகாரப் பரவலாக்கல் தொடர் பில் இந்தியாவுடன் இணக்கப் பாடொன்றை ஏற்படுத்திக் கொள் வதற்கு முன் நடைமுறையில் இருக்கும் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமை யாக செயற்படுத்த அரசு நட வடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

அரசு இந்தியாவுடன் இரக சியப் பேச்சுக்களை மேற் கொண்டு நாட்டுக்கு தீமை பயக்கும் விதத்திலான தீர்வுத் திட்டங்களை முன்வைத்தால் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு போதும் அதற்கு ஆதரவு வழங் காது. நாடாளுமன்றத்திற்கு உள் ளேயும் வெளியேயும் அதனை எதிர்க்கும்.

அரசியல் தீர்வொன்றை முன் வைப்பதாயின் நாட்டின் அரசிய லமைப்பின் பிரகாரம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் அதனை முன் வைக்க வேண்டும்.

மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாக நாட்டின் பல்லாயிரக் கணக்கான உயிர்களும் பல கோடி ரூபா பெறுமதியான சொத் துக்களும் இழக்கப்பட்ட பின் அன்றைக்கு முன்வைக்கப்பட்ட அதே கோரிக்கையின் பிரகாரம் அரசியல் தீர்வொன்றை வழங்கு வதற்கு முன் அது குறித்து அரசு இன்னொரு தடவை கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.(ச)



நன்றி: டெய்லிமிரர்
13.06.2011

# அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாததால் பயங்கரவாதம் தலைதூக்கியது



## அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14

அஹிம்சை வழியில் போரா டிய போது தமிழ் மக்களுக்கான அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தி ருந்தால் பயங்கரவாதம் தலை தூக்கியிருக்காது என்று அமைச் சர் ராஜித சேனாரத்ன வலியு றுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட் டத்தின் மீனவர் வீடமைப்புக் கிரா மங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து உரையாற் றுகையில் தெரிவித்ததாவது,

தந்தை செல்வநாயகம் அன்று அகிம்சை வழியில் போராடிய போது அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் அதன்பின் ஆயுதக் கிளர்ச்சி யொன்று தோன்ற இடமேற்பட் டிருக்காது. ஆனால் அன்றைய தலைவர்கள் தந்தை செல்வா வின் கோரிக்கைகளைப் புறக் கணித்தனர். அதன் விளைவா கவே இந்த நாட்டில் பயங்கர வாதம் தலைதூக்கியது.

தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கியே ஆக வேண் டும். இல்லாதபோது நாட்டில் மீண்டும் பிரிவினைக் கோசங் கள் தலைதூக்கும். வெளிநாடு களின் அழுத்தங்களும் அதி கரிக்கும் என்றும் குறிப்பிட்டுள் ளார். (ச)

## ஜனாதிபதியின் பிரதம வைத்தியர் வைட் பதிவுபெற்ற வைத்திய அதிகாரி அல்லர்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதியின் பிரதம உடற் தகமை மருத்துவர் எனக் கூறப் படும் எலியந்த வைட் இலங் கையில் வைத்திய அதிகாரியா கப் பதியப்பட்ட ஒருவர் அல் லர் - இவ்வாறு பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

பல் மருத்துவராகவோ அல் லது ஒரு உதவி மருத்துவராகவோ கூட எலியந்த வைட் இலங்கை யில் பதிவு செய்யப்படவில்லை என இலங்கை மருத்துவ மன்றத் தின் பதிவாளர் வைத்தியர் என். ஜே.நோனிஸ் தெரிவித்துள்ளார்.

ஊக்க மருந்துபாவனை கார ணமாகப் போட்டிகளில் தேசிய வீரர்கள் பங்குகொள்ள முடியா மல் போவது தொடர்பில் எழுப் பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கிரிக்கெட் வீரர் உப்புல் தரங்க உட்பட இதுவரை 6 தேசிய வீரர் கள் இவ்வாறு ஊக்க மருந்து பாவனை குற்றச்சாட்டில் சிக்கி யுள்ளனர். பதியப்பெறாத நபரொ ருவர் மருந்து வழங்குவாராயின் அவர் மீது சீடிடி சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கமுடியும் என் றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எலியந்த வைட் டினை இலங்கையணி வீரர்க ளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மஹிந்தானந்த அளுத்கமஹே நியமித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச)

## ஐ.நா. சபையிடம் தொழிற்சங்க ஒன்றியங்கள் முறைப்பாடு

கொழுப்பு,ஜூன் 14

தொழிற்சங்கங்கள் மீது அரசு விதிக்கும் கட்டுபாடுகள் மற்றும் தலையீடுகள் குறித்த விடயங்களை உள்ளடக்கிய முறைப்பாட்டுக் கடிதமொன்றை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆடைத்தொழிற்துறை மற் றும், சுகாதார துறையை பிரதி நிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்கள் அனுப்பியுள்ளன.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கோ, வேலை நிறுத்தம் செய்வதற்கோ உரிய அடிப்படை உரிமைகள் பணியாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுவதாகவும் சர்வ தேச தொழிலாளர் அமைப்பிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள் ளது.

(ச)

# கிழக்கில் ஆசிரியர்கள் இடமாற்றம்; ஆட்சேபித்து மாணவர் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஜூன், 14

கிழக்கு சம்மாந்துறை வல யக் கல்வி அலுவலகப் பிரி வில் இடம்பெற்றுள்ள உள்ளக ஆசிரியர் இடமாற்றத்தை இரத்து செய்யக்கோரி சம்மாந்துறை யில் பாடசாலை மாணவ, மாண விகள் பெரும் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.



ஆசிரியர் இடமாற்றத்தை இரத்து செய்யக் கோரி மாணவர்கள் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று சம்மாந்துறையில் உள்ள வலயக் கல்வி அலுவல கத்தை முற்றுகையிட்ட மாணவ, மாணவிகள் பலமணி நேரம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இதனால் சம்மாந்துறை வல யக் கல்வி அலுவலகச் செயற் பாடுகளும் முடங்கிக் காணப் பட்டன.

இதேவேளை, வலயக் கல்வி அலுவலக முன்றலில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட் டிருந்ததுடன் அலுவலக நுழை வாயிலும் மூடப்பட்டிருந்தது.

ஆனால் நுழைவாயில் முன் பாகத் திரண்ட மாணவர்கள் அலுவலக நுழைவாயிலைத் திறக்க வேண்டும் எனக் கோஷ மிட்டதைத் தொடர்ந்து நுழை வாயில் திறந்துவிடப்பட்டு அவர்கள் வலயக் கல்வி அலு வலக வளாகத்துக்குள் நுழைந்து உரத்த கோஷங்களுடன் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் இந்த முற் றுகையைத் தொடர்ந்து சம் மாந்துறை மத்திய கல்லூரி மாணவர்களும் தாருஸ்ஸலாம் வித்தியாலய மாணவர்களும் தத் தமது பாடசாலைகளில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வல யக் கல்வி அலுவலகக் கட்டட த்தை வந்தடைந்ததுடன் ஆர்ப் பாட்டத்தில் இணைந்து கொண் டனர்.

இதேவேளை வலயக் கல் விப் பணிப்பாளர் கொழும்பு சென் றிருப்பதாகத் தெரிவித்து, வல யக் கல்விப் பிரதிப் பணிப் பாளர் எம்.எச்.அஸீஸ் மெய்டீன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் மத்தியில் வந்து சாந்தப்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்தார்.

இதன்பின் மாணவர்கள் மத்தி யில் உரையாற்றிய அவர் இன்று நடைபெறவிருக்கும் அமைச்சர வைக் கூட்டத்தின் பின்னர் மாணவர் கோரிக் கைக்கு உரிய பதில் தருவதாக உறுதியளித் துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட் டுள்ள ஆசிரியர்கள் புதிய பாட சாலைகளுக்குச் சென்று பதவி யேற்காது பழைய பாடசாலை களிலேயே கடமையாற்றுமாறும் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழியை அடுத்து மாணவர்களின் ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது. (ச-30)

## பாசிக்குடா கடலில் மூழ்கி இளைஞர் பலி

மட்டக்களப்பு, பாசிக்குடா கட லில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் இடம்பெற்ற இந்தச் சம் பவத்தில் வாழைச்சேனையைச் சேர்ந்த மீராலெப்பை நாஸர் (வயது- 21) என்னும் இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த நிலையில் இவர் நீரில் மூழ்கி இறந்ததாக பொலி ஸார் தெரிவித்தனர். (ச)

## தந்திச் சேவை நிறுத்தம்: ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 14

இலங்கை அஞ்சல்கள் தொலைத் தொடர்பு திணைக் களம் தந்திச் சேவையை நிறுத் துவதற்கு எடுத்துள்ள தீர்மானத் துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் அல்லது அரச ஊழியர்கள் அவசர விடுமுறை களை அறிவிப்பதற்குத் தந்திச் சேவை மட்டுமே உள்ளது. தொலைபேசி மூலமாகவோ, குறுஞ்செய்தி மூலமாகவோ அனுப்பப்படுத் தகவல்களுக் குப் பற்றுச்சீட்டுக் கிடையாது.

எனவே தற்சமயம் அரச பணியில் உள்ள சுமார் எட்டு லட்சம் ஊழியர்களின் நன்மை யைக் கருத்தில் கொண்டு தொடர்ந்தும் தந்திச் சேவையை நடத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க கோரிக்கை விடுத் துள்ளார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாததால் மாணவர் பாதிப்பு

கிளிநொச்சி ஜூன் 14

வன்னியில் உள்ள பாடசாலைகளில் ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றமையால் இந்தப் பாடங்களைக் கற்க முடியாது மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றார்கள்.

வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தால் இடப்பெயர்வு, முகாம் வாழ்க்கை என்பவற்றை அனுபவித்த இந்தப் பகுதி மாணவர்கள் 2008, 2009 ஆகிய காலப்பகுதிக்குரிய பாடங்களை முழுமையாக கற்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்க வேதனைக்குரிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாடங்களைக் கற்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமையால் பெரும் பாதிப்பில் உள்ளனர். குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளிலேயே இந்த நிலை காணப்படுகின்றது.

இந்தப் பகுதிப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றுபவர்கள் பலர் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களையும் நீண்ட காலமாகக் கற்பித்து வருகின்றார்கள். ஏனைய பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியது போல வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்குவதன் மூலம் இந்தப் பகுதி மாணவர்கள் பயனடைவார்கள் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக் குறையால் பாடங்களைக் கற்க முடியாது உள்ள அவல நிலையைப் போக்க உரியவர்கள் முன்வந்து உதவ வேண்டும் என மாணவர்கள் கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

(க-426)

# இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை மன்னாரில்

மன்னார், ஜூன் 14

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை ஆலயப் பகுதியிலுள்ள பொதுக் கட்டடத்தில் இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவரான வைத்திய கலாநிதி செல்வ மகேந்திரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சிவசுப்பிரமணியம் கலந்து கொண்டார். திருக்கேதீஸ்வர ஆலய திருச்சபையின் செயலாளர் வைத்தியசாலையைத் திறந்து வைத்தார்.

மேற்படி வைத்தியசாலை தற்காலிகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் திறந்திருக்குமென மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் சித்த வைத்தியர்கள், திருக்கேதீஸ்வர கிராமசேவகர் தங்கராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க-601)

# வினோ எம்.பியின் நிதி ஒதுக்கீட்டில் கிரிக்கெட் வீரர்களுக்குப் பாதணிகள்

மன்னார், ஜூன் 14

வடமாகாணத்திலிருந்து தேசிய மட்டக் கிரிக்கெட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மன்னார் மாவட்ட கிரிக்கெட் அணியினருக்குப் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பாதணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.பி.பர்சுக் தலைமையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

(க-601)

## திறமைக்குப் பாராட்டு...



வடமாகாணத்தில் இருந்து தேசிய மட்டக் கிரிக்கெட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மன்னார் மாவட்ட கிரிக்கெட் அணியினர், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.பி.பர்சுக் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (601)

# மானிய அடிப்படையில் நிலக்கடலை விதைகள்

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் நிலக்கடலை விதைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்திலுள்ள மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கு முகமாக மத்திய விவசாயத் திணைக்களத்தின் விசேட நிதியொதுக்கீட்டில் 13 ஆயிரம் கிலோ நிலக்கடலை விதைகள் இவ்வாறு மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சிறிபாலசுந்தரம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவில் மீள்குடியமர்ந்த மக்களை மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்குமுகமாகவும் நல்லின விதைகளைப் பெறுமுகமாகவும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சமுதாய விதை உற்பத்தித் திட்டத்தின்கீழ் இந்த முறை ஒட்டுசுட்டானில் முத்தையன்கட்டு, புளியங்குளம், தச்சடம்பன், மான் உருவி ஆகிய இடங்களில் 25 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளை மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஊக்குவிக்கு முகமாகப் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(க-500)

# அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 14

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட நிலை தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

**பிரிவு 1 - ஆக்கம்-எழுத்து**

ஜெ.லியான்சிகா (கிளிநொச்சி ம.வி), க.சரணா (முருகானந்தா ஆரம்ப வித்தி), கு.கஜேந்திரன் (ஞானிமடம் அ.த.க.பா).

**பிரிவு 2 - கட்டுரை வரைதல்**

க.அபிஸிகா (முருகானந்தா ம.வி), தி.மைதிலி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), செ.மிதுனா (பளை மத்திய கல்லூரி).

**பிரிவு 3 - கட்டுரை வரைதல்**

ந.சாமந்தி (திருவையாறு ம.வி), அ.டன்சி (பளை மத்திய கல்லூரி), கு.சாகித்தியா (தருமபுரம் ம.வி)

**பிரிவு 4 - கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

பொ.நீலாம்பரி (வட்டக்கச்சி ம.வி), யோ.தர்சனன் (முழங்காவில் ம.வி), ந.அருந்ததி (பிரமந்தனாறு ம.வி)

**பிரிவு 5 தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), தி.விமலச்செல்வி (பளை மத்திய தல்லூரி), பூ.யோகினி (தருமபுரம் ம.வி).

**பிரிவு 4 - இலக்கணப் போட்டி**

ம.சோபிகா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), பா.மேகலா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.), வி.சுஜாதா (பளை மத்திய கல்லூரி)

**பிரிவு 2 - பாவோதல்**

கி.ருஷாந்தி (புனித பற்றிமா றோ.க.த.க.பா.), சி. யசோதா (சோரன்பற்று கணேசா வித்தி), ச.புவிசாளினி (ஞானிமடம் அ.த.க.பா.).

**பிரிவு 3 - பாவோதல்**

சு.றூபிகா (சோரன்பற்று கணேசா வித்தி.), கு.கிருஷ்ரிதிவ்யா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சு.சங்கீர்த்தனா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.).

**பிரிவு 4 - பாவோதல்**

ச.சந்திரயவிதா (அக்கராயன் ம.வி), சு.கருசனா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.), வி.சரண்யா (பூநகரி ம.வி).

**பிரிவு 5 - பாவோதல்**

இ.அனுஷா (முருகானந்தா ம.வி),அ.தர்சனா (உருத்திரபுரம் ம.வி.).

**பிரிவு 1 - இசையும் அசைவும்**

சி.விதுரா (மத்திய ஆரம்ப வித்தி.), ந.பிருந்தா (ஜெயபுரம் ம.வி.), வே.திசோபிகா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.), ம.டிலக்சனா (கோவில் வயல் சி.சி.த.க.பா.)

**பிரிவு 2 - இசை தனி**

வி.சிந்துஜன் (இயக்கச்சி அ.த.க.பா.), சு.அருணன் (முருகானந்தா ம.வி.), வி.தீபிகா (புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி.).

**பிரிவு 3 - இசை தனி**

நா.விதுர்சன் (உருத்திரபுரம் ம.வி), பொ.கயல்விழி (பளை றோ.க.த.க.பா.), வி.கிருஷ்ணகுமரன் (தர்மபுரம் ம.வி.).

**பிரிவு 4 - இசை தனி**

த.யதுஷா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ம.சுவர்ணா (பூநகரி ம.வி.), ம.நிகிதன் (பளை மத்திய கல்லூரி)

**பிரிவு 5 - இசை தனி**

பா.யாணா (தர்மபுரம் ம.வி.), பா.அன்பரசி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), லௌ.தவநேசன் (பளை மத்திய கல்லூரி).

**குழு - இசை குழு 1**

கிளிநெச்சி மத்திய கல்லூரி, ஜெயபுரம் ம.வி, தருமபுரம் ம.வி,

**குழு - இசை குழு 2**

கிளிநொச்சி மத்திய கல்லூரி, பிரமந்தனாறு ம.வி.

**பிரிவு 2 - நடனம் தனி**

கி.வினுஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இ.பதீபா (முழங்காவில் ம.வி.), த.நிவேதிகா (முருகானந்தா ம.வி.)

**பிரிவு 3 - நடனம் தனி**

ம.மிருநிஷா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), கா.கௌசல்யா (முழங்காவில் ம.வி.).

**பிரிவு 4 - நடனம் தனி**

யே.ஜென்சி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), சி.நிரோசனா (முழங்காவில் ம.வி.).

**பிரிவு 5 - நடனம் தனி**

இ.அனுஸ்கா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), உ.தர்சன் (முழங்காவில் ம.வி.).

**குழு 1 - நடனம் குழு**

ஜெயபுரம் ம.வி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, கோவில் வயல் சி.சி.த.க.பா.

**தி.போட்டி - நாட்டிய நாடகம்**

கிளிநொச்சி ம.வி, முழங்காவில் ம.வி.

**தி.போட்டி - நாட்டார் படல்**

முழங்காவில் ம.வி, கண்டாவளை ம.வி, கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**தி.போட்டி - நாடகம்**

கிளிநொச்சி மத்திய கல்லூரி, பிரமந்தனாறு ம.வி.

**தி.போட்டி - வில்லுப்பாட்டு**

திருவையாறு ம.வி, நல்லூர் ம.வி, தருமபுரம் ம.வி.

**தி.போட்டி - விவாதம்**

முருகானந்தா ம.வி, வட்டக்கச்சி ம.வி, பூநகரி ம.வி.

**தி.போட்டி - தமிழ் அறிவு (வினா விடை)**

திருவையாறு ம.வி, தருமபுரம் ம.வி, வேரவில் இந்து ம.வி.

**பிரிவு 5 இலக்கணப் போட்டி**

ச.கிரிசாந்தி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), லி.விஜயதுர்க்கா (தருமபுரம் ம.வி.), அ.நிவேதா (பூநகரி ம.வி.).

**பிரிவு 5 திறனாய்வுப் போட்டி**

தி.நிரோஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), அ.அருள்வாணி (பளை மத்திய கல்லூரி), ந.தர்மீகன் (முழங்காவில் ம.வி.).

**பிரிவு 4 - குறுநாடக ஆக்கம்**

பா.அஜிதா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ப.டினூஜா (முருகானந்தா ம.வி.), கு.நிதர்சனா (ஜெயபுரம் ம.வி.).

**பிரிவு 5 குறுநாடக ஆக்கம்**

ஜெ.கோகிலா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ஆ.சத்தியச்செல்வி (ஜெயபுரம் ம.வி.), க.விமலேஸ்வரி (பிரமந்தனாறு ம.வி.).

**பிரிவு 4 - கவிதை ஆக்கம்**

க.கனிசா (பளை மத்திய கல்லூரி), மோ.பிரயதர்சினி (பாரதி வித்தியாலயம்), சு.துவாரபாலகி (பூநகரி ம.வி.)

**பிரிவு 5 - கவிதை ஆக்கம்**

கு.சக்தீனா (வேரவில் இந்து ம.வி), ச.யாழ்மொழி (தர்மபுரம் ம.வி), வி.விஜயகௌரி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

(க-405)(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகங்களுக்கிடையேயான போட்டிகள் ஒலுமடு பாடசாலையில் வியாழனன்று

வவுனியா, ஜூன் 14

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஒலுமடு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் என்.திருஞானசம்பந்தர், 561 ஆவது படையணியின் பிரிகேடியர் டி.ஏ.ஆர். இரணவக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.ஸ்ரீவர்த்தன, பிரதேச இராணுவக் கொமாண்டர் ஐ.டபிள்யூ. எம்.ஏ.பி. இலங்கக்கோன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ராஜா ரணசிங்க, நெடுங்கேணிப் பிரிவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அனுர நிகபிட்டிய ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் 100 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர் ஆண், பெண்களுக்கான ஓட்ட நிகழ்வுகள், பெண்களுக்கான இறுதி உதைபந்தாட்டப் போட்டி, விநோத உடைப் போட்டி, உடற்பயிற்சிக் கண்காட்சி நிகழ்வுகள், அஞ்சலோட்ட நிகழ்வுகள் என்பன நடைபெற்றுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுக்கழகங்களின் வீர, வீராங்கனைகள் அனைவரையும் 16 ஆம் திகதி காலை சமுகம் தருமாறும் காலை 6.40 மணிக்கு 5000 மீற்றர் ஆண், பெண்களுக்கான ஓட்டமும் அதனைத் தொடர்ந்து ஏனைய போட்டிகளும் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-501)

# வீட்டுத்தோட்டப் போட்டி

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்தினால் வீட்டுத் தோட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகளை இந்த ஆண்டு ஆவணி மாதத்தில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டப் போட்டிகள்; கிராம வீட்டுத் தோட்டம், மாணவர்களிடையான வீட்டுத் தோட்டம், அலுவலக வீட்டுத் தோட்டம், அலுவலர்களுக்கான வீட்டுத்தோட்டம், பாடசாலை வீட்டுத் தோட்டம் என ஐந்து வகையான பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு வகையான வீட்டுத் தோட்டங்களுக்கும் போட்டியாளர்கள் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாகத் தனித்தனியாகத் தெரிவு செய்யப்பட்டு முதலிடத்தை வகிக்கும் போட்டியாளர்கள் மாவட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி மதிப்பளிக்கப்படுவர்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் அனைவரும் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களையோ அல்லது கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்துடனோ நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க-6)

## மாகாண மட்டத்தில் முதலிடம்

வடமாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இசை நாடகப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-405)

**எங்கள் சொத்துக்கு இந்த நிலையா...?**



இன்னும் எத்தனை காலம்?: புதுக்குடியிருப்புப் பகுதியில் போரின்போது பொது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் வெயில், மழையில் பாதிக்கப்பட்டு துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன. (20)

# கருங்குளவிகள் கொட்டியவர் முல்லைத்தீவு வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, ஜூன் 14

கருங்குளவிகளால் கொட்டப்பட்ட ஒருவர் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேசம், கற்சிலைமடுவைச் சேர்ந்த 60 வயது நிரம்பிய இ. வல்லிபுரம் என்பவரே இவ்வாறு கருங்குளவிகளால் கொட்டப்பட்டவர் ஆவார். இவர் தமது நிலத்தில் நின்ற சிறுபனையொன்றில் ஓலையொன்றை வெட்டும்போது அதில் கூடு கட்டியிருந்த கருங்குளவிகள் கலைந்து இவரைக் கொட்டியுள்ளன.

அநேகமான குளவிகள் கொட்டியதால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இவர் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

இவர் தற்போது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (க-500)

## மன்னாரில் நெல்சிப் கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 14

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சிப் பிரதேசங்களுக்கான வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் 'நெல்சிப்' கூட்டம் மன்னார் முசலிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியூதின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் வவுனியாவிலும் - மன்னாரிலும் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் வேலையை ஆரம்பிப்பதற்கான அதிகாரக் கையளிப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன், மாந்தை மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சாம்சன் ஜெனிவ்ஸ், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவுப் பிரதேச சபைச் செயலாளர் இ.அறிவரசன் மற்றும் சபைத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபைக்கும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்கும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேச சபைகள், நகர சபைகளுக்கான நிதி விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷ் தெரிவித்துள்ளார். (க-302)

# மன்னார் பிரதேச சபைக்கு 33 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

மன்னார், ஜூன் 14

மன்னார்ப் பிரதேச சபையில் நான்கு உப கருத்திட்டங்களுக்கு நெல்சிப் திட்டத்தின் கீழ் 33 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மன்னார்ப் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன் தெரிவித்தார். 2010 இல் முன்வைத்த மக்களின் முன்னுரிமைத் திட்டங்களின் கீழான உபகருத்திட்டங்களில் முதல் நான்கு திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நான்கு கருத்திட்டங்களுக்கும் 33 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நான்கு உபகருத்திட்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு முன்நிறுத்தப்படவுள்ளன. (க-302)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகள் வருமாறு:

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - முருகானந்த ம.வி, 2ஆம் இடம் - கிளிநொச்சி ம.வி, 3 ஆம் இடம் - வட்டக்கச்சி ம.வி.

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம் - வட்டக்கச்சி ம.வி, 3 ஆம் இடம் - முருகானந்த ம.வி.

**15 வயது பெண்கள்**

முதலாமிடம் - கிளிநொச்சி ம.வி, 2 ஆம் இடம் - வட்டக்கச்சி ம.வி.

**19 வயது பெண்கள்**

முதலாமிடம் - வட்டக்கச்சி ம.வி, 2 ஆம் இடம் - கிளிநொச்சி ம.வி, 3 ஆம் இடம் - முருகானந்த ம.வி

இந்த அணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள வடமாகாண மட்டப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன. (க-405)

# பரந்தன் பேருந்து நிலையம் புனரமைக்கப்படாத நிலையில்

கிளிநொச்சி, ஜூன் 14

பரந்தன் பேருந்து நிலையம் புனரமைக்கப்படாமையால் பயணிகள் சிரமப்படுகின்றார்கள். பரந்தன் சந்தியில் உள்ள பேருந்து நிலையம் கடந்த காலயுத்தத்தால் சேதமடைந்து இடிந்த நிலையில் காணப்படுகின்றது.

ஏ-9 வீதியின் யாழ்ப்பாணம், வவுனியா வீதிகளும் முல்லைத்தீவு வீதியும், பூநகரி மன்னார் வீதிகளும் சந்திக்கும் நாற்சந்தியில் பரந்தன் சந்திப் பேருந்து நிலையம் காணப்படுகின்றது.

இந்தப் பேருந்து நிலையம் இன்னமும் திருத்தியமைக்கப்படாது மிகமோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பேருந்து நிலையத்தின் ஊடாகப் பயணிக்கும் பயணிகள் தரித்து நின்று பேருந்தில் செல்வதற்கு நிழற் கூடாரங்களோ நிழல் மரங்களோ இன்றிச் சிரமப்படுகின்றார்கள்.

பரந்தன் பேருந்து நிலையத்தைப் பெருமளவு பயணிகள் பயன்படுத்துவதைக் கருத்தில் கொண்டு இதனை உரியவர்கள் கவனமெடுத்துப் புனரமைக்க வேண்டுமென பயணிகள் கேட்டுக்கொள்கின்றார்கள். (க-428)

# கொல்லப்பட்ட நிலையில் முதலைக்குட்டி





மன்னார், ஜூன் 14

மன்னார் உப்பளம் பிரதான வீதி குமரன் தியேட்டருக்கு அருகில் உள்ள வீட்டுக்கு முன்பாகக் கொல்லப்பட்ட நிலையில் முதலைக்குட்டி ஒன்றை அந்தப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் நகரப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் இருந்து இது பிடிக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரில் முதலை பிடிக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறித்த முதலை தலையில் வெட்டுக் காயங்கள் காணப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது. இந்த முதலையினை மக்கள் அதிகளவில் பார்வையிட்டனர். (க-601)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'இமேஜ்' கோப்பை மாற்றுவதற்கு

எம்முடைய சான்றிதழ்களையோ அல்லது முக்கியமான ஆவணங்களையே ஸ்கான் செய்து படக்கோப்புகளாக மாற்றி வைத்திருப்போம்.

அவற்றில் எதாவது மாற்றம் செய்ய வேண்டுமெனில் நாம் போட்டோ சொப் அல்லது எதாவது ஒரு போட்டோ எடிட்டிங் மென்பொருளின் உதவியை நாடிச் செல்ல வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் பட ஆவணங்களை எழுத்துக் கோப்பாக மாற்றியும் அதில் தேவையான மாற்றங்களை செய்ய முடியும். இதற்கு ஓபிஸ் 2007 வழிவகை செய்கிறது.

இதன் மூலம் எந்த வித மூன்றாம் தர மென்பொருளின் உதவியும் இல்லாமல் படப் பைல்களை எழுத்துப் பைல்க ளாக மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு உங்களுடைய கணினியில் ஓபிஸ் 2007 நிறுவியிருக்க வேண்டும்.

ஓபிஸ் 2007ஐ கணினியில் நிறுவிய பின் Start Control Panel Programs and Features என்பதை தேர்வு செய்யவும். தேர்வு செய்தவுடன் தோன்றும் விண்டோவானது கணினியில் நிறுவியிருக்கும் அப்ளிகேஷன்களை மாற்றம் செய்வதற்கான விண்டோ ஆகும்.

அதில் Microsoft Office Professional Plus 2007 என்ற தேர்வின் மீது வலது கிளிக் செய்து தோன்றும் விண்டோவில் Change என்னும் பொத்தானை அழுத்தவும்.

அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் Add or Remove Features என்னும் ஒப்ஷனை தேர்வு செய்து Continue என்னும் பொத்தானை அழுத்தவும்.

அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் தேர்வு ஆகாமல் உள்ள ஓபிஸ் பயன்பாடுகளைத் தேர்வு செய்யவும். அதற்கு தேர்வு ஆகாமல் உள்ள ஓபிஸ் பயன்பாடுகளின் மீது கிளிக் செய்து Run from my Computer என்பதை தேர்வு செய்யவும். பின் Continue பொத்தானை அழுத்தவும்.

சிறிது நேரத்தில் ஓபிஸ் பயன்பாடுகள் உங்கள் கணினியில் நிறுவப்படும். பின் Start All Programs Microsoft Office Office Microsoft Office office Tools Microsoft Office Document Imaging என்பதைத் தேர்வு செய்யவும்.

பின்னர் உங்களுடைய படத்தினை திறக்கவும். சாதாரண படங்களை திறக்க முடியாது. tif பைல் போர்மட்டுடைய படங்களை மட்டுமே திறந்து செய்ய முடியும். வேறொரு பைல் போர்மட்டில் உள்ள படங்களை விண்டோஸ் பெயிண்ட் உதவியுடன் tif பைல் படமாக மாற்றிக் கொள்ளவும். பின் படத்தை திறக்கவும்.

அடுத்து Tools என்னும் தேர்வு மெனுவினைத் தேர்வு செய்து தோன்றும் தேர்வு வரிசையில் Recognize Text Using OCR என்பதைத் தேர்வு செய்யவும். பின் உங்களுடைய படமானது எழுத்தாக மாற்றப்படும்.

பின் Send Text to Word என்னும் தேர்வினை அழுத்தி வேர்ட் கோப்பாக மாற்றி கொள்ளவும். இவ்வாறு படப் பைலை வேர்ட் பைலாக எளிமையாக மாற்றிக் கொள்ள முடியும்.

# தமிழில் அறிமுகமாகும் இன்டர்நெற் எக்ஸ்புளோரர் 9

மைக்ரோசாப்ட் நிறுவனம் தன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9ஐ தமிழ் மொழியில் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இந்தி மொழியில் வெளியிட்டிருந்த நிலையில் அண்மையில் மேலும் 53 மொழிகளில் தன் பிரவுசரை வடிவமைத்துத் தந்துள்ளது.

இவற்றில் தமிழ், அசாமீஸ், வங்காள மொழி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி மற்றும் தெலுங்கு ஆகிய இந்திய மொழிகள் அடங்கும்.

பல்வேறான மொழிகளில் தன் பிரவுசரை வெளியிட்டதன் மூலம் அனைத்து தரப்பு மக்களிடம் தன் சாதனங்களை மைக்ரோசாப்ட் கொண்டு செல்லும் முயற்சியில் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகரிக்கிறது.

பிரவுசர் போட்டியில் மற்ற பிரவுசர்களை முந்திச் செல்ல இது கை கொடுக்கும் என மைக்ரோசாப்ட் எண்ணுகிறது. இந்த பிரவுசர் வெளியானபோது மைக்ரோசாப்ட் இந்தியாவில் பிரபலமான 29 இணைய தளங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9ஐ பிரபலப்படுத்த இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது.

தமிழ் மற்றும் பிற மொழிகளில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரை உங்கள் கணினியில் இயக்க http://windows.microsoft.com/en&US/internet&explorer/downloads/ie&9/worldwide&languages என்ற முகவரிக்குச் சென்று அங்கிருந்து இலவசமாகத் தர விறக்கம் செய்து கொள்ளலாம்.

உங்கள் கணினியில் இயங்கும் ஓபரேட்டிங் சிஸ்டம்(விஸ்டா/விண் டோஸ் 7 x 32 / 64 பிட்) எது என அறிந்து அதற்கேற்ற பதிப்பினை தரவிறக்கம் செய்திடவும்.

விண்டோஸ் எக்ஸ்பியில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9 இயங்காது என்பது உங்களுக்கு ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது.

# விண்வெளியில் வாழும் இரட்டையர்கள்

நட்சத்திரங்கள் அவற்றுக்கு இடையே உள்ள ஈர்ப்பு விசையின் காரணமாக ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டு சுற்றிக் கொண்டு இருக்கும். இத்தகைய நட்சத்திரங்களை இரட்டை நட்சத்திரங்கள் என அழைப்பர்.

குழந்தைகளில் இரட்டைக் குழந்தைகள் போன்று விண்வெளியில் இந்த இரட்டை நட்சத்திரங்கள் உள்ளன. பெரும்பாலான இரட்டை நட்சத்திரங்களை நாம் வெறும் கண்ணால் பார்க்கும் போது ஒரே நட்சத்திரமாகத் தெரியும்.

இரட்டை நட்சத்திரங்களைத் தனியே காண வேண்டுமெனில் அதிக திறன் கொண்ட தொலைநோக்கிகள் தேவையாகும். விண்வெளி விஞ்ஞானிகளுக்கு இந்த இரட்டை நட்சத்திரங்கள் அதிகளவில் பயன்படுகின்றன.

இரட்டை நட்சத்திரங்களின் உதவியோடு நட்சத்திரங்களின் எடையை எளிதில் கண்டறியலாம். எத்தனையோ தொடர் ஆராய்ச்சிகள் நடைபெற்றாலும் விஞ்ஞானிகளுக்கு விண்வெளி மிகப் பெரிய புதிராகவே உள்ளது. இந்த புதிருக்கு மேலும் வலுச் சேர்ப்பது போல இரட்டை நட்சத்திரங்கள் உள்ளன.

# ஒரே நேரத்தில் பல ஸ்கைப் கணக்குகளைப் பயன்படுத்த....

ஸ்கைப் சேவையை உலகெங்கும் பலர் வீடியோ அழைப்புச் செய்வதற்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த சேவை Voive Over IP என்ற தொழில்நுட்பத்தில் செயற்படுகிறது. இதன் மூலம் ஸ்கைப் பயனாளர்கள் ஏனைய ஸ்கைப் பயனாளர்களுடன் இலவசமாகப் பேச முடியும்.

தொலைபேசி மற்றும் வேறு அழைப்புகளுக்கு கணக்கிலிருந்து பிடித்துக் கொள்வார்கள். தற்போது இந்த சேவையை மைக்ரோசாப்ட் 8.5 பில்லியன் டொலர்களுக்கு வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை தற்போது 663 மில்லியன் பயனாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆனால் இந்த சேவையில் ஒரு நேரத்தில் ஒரு பயனாளர் கணக்கைத் தான் பயன்படுத்த முடியும். உங்களுக்கு ஒரே நேரத்தில் பல ஸ்கைப் கணக்குகளில் நுழைய வேண்டும் என ஆசைப்பட்டால் ஒரு இலவச மென்பொருள் உதவுகிறது. அதன் பெயர் Multi Skype Launcher.

இந்த மென்பொருள் மூலம் ஒரே கணினியில் பல ஸ்கைப் கணக்குகளில் நுழைந்து பல நண்பர்களிடம் பேச முடியும். இந்த மென்பொருளைத் தரவிறக்கியதும் நிறுவி விட்டு உங்களது கணக்கில் முதலில் நுழையவும்.

பின்னர் ADD என்பதைக் கிளிக் செய்து தங்களின் பல கணக்குகளைச் சேர்த்துக் கொண்டு பயன்படுத்தலாம். வெறும் 1.7 Mb அளவே உடைய இலவச மென்பொருளாகும். http://multi-skype-launcher.com/ என்னும் இணையத்தளத்துக்குச் செல்வதனூடாக மேற்கண்ட பயனைப் பெறலாம்.

# புதிய வசதிகளுடன் கூடிய CCleaner v3.07

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தொழில்நுட்பதிற்கு ஏற்ப நாம் பாவிக்கும் கணினியையும் பாதுகாப்பாக வைத்து கொள்வது நல்லது.

எமது கணினியில் உள்ள தேவையில்லாத கோப்புக்களை அழிக்க எம்மில் பெரும்பாலானோர் CCleaner என்ற இலவச மென்பொருளை உபயோகித்து கொண்டு இருக்கிறோம்.

உலகளவில் கணினியில் வேண்டாத கோப்புக்கள், குக்கீஸ்களை மற்றும் இதர தேவையில்லாத கோப்புக்களை கணினியில் இருந்து முற்றிலுமாக நீக்க அனைவரும் விரும்பி உபயோகப்படுத்துவது இந்த CClea ner என்ற இலவச மென்பொருளாகும்.

இது உபயோகிப்பதற்கும் மிகவும் இலகுவானது. இப்பொழுது மேலும் மேம்படுத்தப்பட்டு புதிய பதிப்பை வெளியிட்டுள்ளனர்.

புதிய பதிப்பில் உள்ள பயன்கள் சில:

1) ப்ளாஷ் பிளேயரினால் உருவாகும் தேவையில்லாத கோப்புக்களை நீக்குகிறது.

2) சபாரி உலவியில் ஐகொன் ஹிஸ்டரியை நீக்குகிறது.

3) மீடியா பிளேயர்களினால் உருவாகும் தேவையில்லாத கோப்புக்களை நீக்குகிறது.

4) கணினியில் உள்ள Recent Documents பகுதியைச்சுத்தம் செய்கிறது.

5) கூகுள் குரோம் மூலம் உருவாகும் downloded history கோப்புக்களை நீக்குகிறது.

6) இது போன்று மேலும் பல தேவையில்லாத கோப்புக்களை எமது கணினியில் இருந்து நீக்கி கணினியைச் சுத்தமாக வைத்து கொள்கிறது.

7) விண்டோஸ் 7/Vista/XP/2000 போன்ற இயங்குதளங்களில் இயங்குகிறது. 32bit&64bit ஆகிய இரண்டிலும் வேலை செய்யும்.

**உபயோகிக்கும் முறை:**

1) தரவிறக்கம் செய்தவுடன் அந்த மென்பொருளை திறந்தால் ஒரு விண்டோ வரும். அதில் உள்ள Analyze என்ற பட்டனை அழுத்தவும்.

2) இப்பொழுது உங்கள் கணினியில் உள்ள நீக்க வேண்டிய கோப்புக்கள் அனைத்தும் உங்களுக்கு ஸ்கேன் ஆகி வரும். அதற்கு அருகில் உள்ள கீதண Cleaner என்ற பட்டனை அழுத்தியவுடன் உங்கள் கணினியில் உள்ள தேவையில்லாத கோப்புக்களும் அழிந்து விடும்.

3. உங்களுக்கு Cleaning Complete என்ற செய்தி வரும். அவ்வளவுதான் உங்கள் கணினி சுத்தம் செய்யப்பட்டு விட்டது. http://ccleaner-portable. en. softonic.com/ என்ற இணையத் தளத்துக்குச் செல்வதன் மூலம் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

# கணினியில் அனைத்து வகையான கோப்புக்களையும் திறப்பதற்கு

நாம் பாவிக்கும் கணினியில் ஒரு சில கோப்புக்களை திறக்க முடியாது. அதாவது குறிப்பிட்ட கோப்புக்களை மட்டுமே திறக்க முடியும்.

சில போர்மட் கோப்புக்களை திறக்க வேண்டுமானால் அதற்கான மென்பொருள் கட்டாயம் எமது கணினியில் இருந்தால் மட்டுமே நாம் அதை திறக்க முடியும்.

இதற்காக நாம் ஒவ்வொரு கோப்புக்களைத் திறப்பதற்கும் அந்தந்த மென்பொருள் இணைப்பது தேவையில்லாத வேலை.

இதனை நீக்கவே ஓர் அருமையான இலவச மென்பொருள் உள்ளது.

மென்பொருளின் பயன்கள்:

1) இந்த மென்பொருள் மூலம் 70+ வகை கோப்புக்களை சுலபமாகத் திறந்து கொள்ளலாம்.

2) vcf, .srt, .sql போன்ற அறிய வகை கோப்புக்களையும் இதில் திறக்க முடியும். டோரென்ட் கோப்புக்களையும் இதன் மூலம் திறந்து கொள்ள முடியும்.

3) இதன் மூலம் படிஎப் கோப்புக்களை பிரிண்ட் எடுக்கவும் முடியும்.

4) zip, .rar வகை பைல்களை Extract செய்யும் வசதியும் இந்த மென்பொருளில் உள்ளது.

5) மைக்ரோசாப்டின் வேர்ட் கோப்புக்களையும், பவர் பொய்ன்ட் கோப்புக்களையும் கூட இந்த மென்பொருள் மூல திறந்து கொள்ளலாம்.

6) இந்த மென்பொருள் மூலம் இந்த வகை கோப்புக்களை திறந்து பார்க்க மட்டும் தான் முடியும்.

இதில் எந்த மாற் றங்களும் செய்ய முடியாது. http://www.freeopener.com/ இந்த இணையத்தளத்துக்குச் செல்வதன் மூலம் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சுகாதாரத்துறையை வளர்க்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறேன்

## கிழக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் கூறுகிறார்

அம்பாறை, ஜூன் 14

'எனது பதவிக்காலத்துள் கிழக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை சேவைகளை உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற இலட்சிய நோக்குடன் சேவைகளைத் தொடர்ந்து வருகின்றேன்'.

இவ்வாறு கிழக்குமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் தெரிவித்துள்ளார்.

கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான மீளாய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கிழக்கின் சுகாதாரத்துறை பல சவால்களை எதிர்கொண்டு வந்த போதிலும், நாம் அத்தகைய சவால்களை முறியடித்து சுகாதாரத்துறை அபிவிருத்தியில் பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றோம்.

கிழக்கில் இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் விவசாயத்துறை, மீன்பிடித்துறை என்பவற்றிலெல்லாம் முன்னேற்றம் காணப்பட்டு வருவதுபோல் சுகாதாரத்துறையிலும் நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

நோய்வாய்ப்பட்ட பின்னர் சிகிச்சை அளிக்கும் நிலைமாறி வருமுன் கட்டுப்படுத்தும் நிலைமையையே கிழக்கில் தோற்றுவிக்க வேண்டும்.

சமூக சீரழிவை ஏற்படுத்தத் தக்க நோய்களை நாமாகத் தேடிக்கொள்ளாது விழிப்புடன் செயற்படத்தக்க வகையில் அறிவுரைகள் வழங்கப்பட்டு விழிப்புணர்வுகளும் மக்கள் மத்தியில் ஏற்பட வைத்திய அதிகாரிகள் தமது கடமைகளை விரிவுபடுத்த முன்வரவேண்டும்.

டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதிலும் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் இதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்து கட்டுப்பாட்டு நிலமையைத் தொடர்ந்தும் பேண வேண்டும் - என்றார். (ச -30)

# இலவச பசுப்பால் விநியோகம்; சிறார்களுக்கு வழங்கப்படவில்லை

## நிர்வாகிகள், பெற்றோர் முறையீடு

மட்டக்களப்பு, ஜூன் 14

அரசினால் முன்பள்ளி சிறார்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச பசுப்பால் ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள 26 முன்பள்ளி நிலையங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் போஷாக்குக் குறைபாட்டை இல்லாதொழிக்கும் முகமாக இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் 9 மாதங்களுக்கு சகல முன்பள்ளி சிறார்களுக்கும் மாதமொன்றில் 20 நாள்களுக்கு ஒரு பிள்ளைக்கு 150 ரூபா பெறுமதியான 3 லீற்றர் சுத்தமான பசுப்பாலை பிரதேச செயலகங்கள் ஊடாக சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சு வழங்கி வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள 26 முன்பள்ளி நிலையங்களில் 906 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் பசுப்பால் கடந்த 6 மாதகாலமாக பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவில்லையென முன்பள்ளி நிர்வாகிகளும் பெற்றோர்களும் தெரிவித்துள்ளனர். இது சிறுவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் எனவும் முன்பள்ளி நிர்வாகிகளும், பெற்றோர்களும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறுவர் தேசிய பாதுகாப்புச் சபை, கல்வி அமைச்சு ஆகியவற்றிடம் தாங்கள் முறைப்பாடு செய்யவுள்ளனர் என முன்பள்ளி நிர்வாகிகளும், பெற்றோர்களும் தெரிவித்துள்ளனர். (ச)

# இரத்தினபுரியில் ஓரே இரவில் நான்கு கடைகளில் திருட்டு

இரத்தினபுரி நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவுவேளையில் நான்கு கடைகள் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, குடுகல்வத்தையிலுள்ள நவீன சந்தைக் கடையொன்றின் கூரையை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பஸ்நிலையத்திலுள்ள கடையொன்றிலும் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அங்கமுவ, எலப்பாத்த பகுதிகளிலும் இரு வர்த்தக நிலையங்களில் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## துப்புரவு....



மட்டக்களப்பு,செம்மண்ணோடை கிராம சேவகர் பிரிவில் வடிகான்களை துப்புரவு செய்யும் வேலைத் திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,கோறளைப்பற்று மத்தி பிரதேச சுகாதார வைத்திய அலுவலக அதிகாரிகள், வாழைச்சேனை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

# நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

பதுளை, ஜூன் 14

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட ஏழு வர்த்தகர்களுக்கு பதுளை நீதிவான் வை.பீ.நெலும்தெனிய தலா மூவாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

காலாவதியான உணவுப் பொருள்களையும், பானங்களையும் வைத்திருந்தமை, விற்றமை, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்குப் பொருள்களை விற்றமை, விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. பதுளை மாவட்டச் செயலாளரின் உத்தரவுக்கமைய பதுளை நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் வர்த்தக நிலையங்கள் மீதான முற்றுகையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாணிக்கக்கல் அகழ்ந்த ஏழு பேர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கத்தில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் ஏழு பேரை விசேட அதிரடிப்படையினர் சுற்றி வளைத்து கைது செய்து நோர்வூட் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்களை நோர்வூட் பொலிஸார் ஹற்றன் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இரு குழுவினர் மோதல் 4 வீடுகள் சேதம்

நோர்வூட்,ஜூன் 14

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியாவத்தை ஒட்ரி தோட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றை அடுத்து அந்தப் பகுதியிலுள்ள நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களை நோர்வூட் பொலிஸார் கைது செய்து ஹற்றன் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து இந்தச் சந்தேக நபர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# பாடசாலையின் தரம் பெறுபேறுகளால் நிர்ணயம்

## கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 14

ஒரு பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை வெறுமனே அந்தப் பாடசாலைகளுக்கான பௌதிக வளங்களை மட்டும் வைத்து அளவிட முடியாது. பாடசாலை முதன்நிலை பாடசாலையாகத் திகழ வேண்டுமானால் பரீட்சைப் பெறுபேறுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டே பாடசாலைகளின் நிலை தீர்மானிகப்படுகின்றது.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு விநாயகர் வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள்,பெற்றோர்கள் என அனைத்துத் தரப்பினரும் முக்கிய பங்காற்ற வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்த்த கல்வி அபிவிருத்தியை எம்மால் எட்ட முடியும் - என்றார். (ச)

# கிழக்கில் 3,118 மேலதிக ஆசிரியர்கள்; வருடாந்தம் 45 மில்லியன் நஷ்டம்

மட்டக்களப்பு,ஜூன் 14

கிழக்கு மாகாணத்தில் 3,118 ஆசிரியர்கள் மேலதிகமாகக் காணப்படுவதால் மாதமொன்றுக்கு 45.64 மில்லியன் நஷ்டம் ஏற்படுவதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.நிசாம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களில் 2,443 பேர் தமிழ்மொழி மூல ஆசிரியர்களும் 675 பேர் சிங்கள மொழி மூல ஆசிரியர்களுமாவர் என அவர் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் பல பாடங்களுக்கான தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 1,702 பேருக்கும், சிங்கள மொழி மூலமான ஆசிரியர்கள் 321 பேருக்கும் வெற்றிடம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் ,சிங்களம், கணிதம், ஆங்கிலம் போன்ற பல பாடங்களுக்கான ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட வேண்டியுள்ளதாக எம்.ரீ.நிசாம் தெரிவித்தார்.மேலதிகமாக உள்ளவர்களில் 400 தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களும் 56 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டு ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள பாடங்களை கற்பிக்க பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சமமின்மையை நிவர்த்தி செய்வதற்காக வலயங்களுக்குட்பட்ட மற்றும் வலயங்களுக்கு அப்பால் என்ற இரண்டு அடிப்படைகளில் ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

564 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களும் 110 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் வலயங்களுக்கு அப்பால் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் நேற்று திங்கட்கிழமை அனுப்பவைக்கப்பட்டன என தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஜூன் 2011 செவ்

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சில பொருள்களை வாங்கச் செல்லும் சிலருடன், நீங்களும் துணைக்குச் செல்லலாம். உடன் பிறப்புகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**இடபம்:**
முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும் நாள். உடல் ஆரோக்கியத்திற்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். ஆடம்பர விஷயங்களில் நாட்டம் செல்லும். போட்டி போட்டவர்கள் அன்பாக நடந்து கொள்வர். மனைவி, குழந்தைகளின் சந்தோஷத்தில் அக்கறை காட்டுவீர்கள். சிலர் உங்களை பாராட்டிப் பேசி காரியம் சாதிக்கலாம்.

**மிதுனம்:**
சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். மாற்று மொழி பேசுவோர் தொடர்பான விஷயங்களில் எச்சரிக்கை அவசியம். பெண்கள் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியான சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையைக் காட்ட முற்படுவீர்கள்.

**கடகம்:**
மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில் லாபத்தை கூட்ட முற்படுவீர்கள். அயலார் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சில காரியங்களுக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காக செலவாகும். உறவுகளால் ஆதாயம் பெறலாம். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி அது நடக்காமல் போகலாம்.

**சிங்கம்:**
பண விவகாரங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கும். சோர்வின்றி காலை முதல் மாலை வரை சுறுசுறுப் பாகச் செயற்படுவீர்கள். புதிய விடயங்களில் அக்கறை காட்டு வீர்கள். நண்பர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். நீங்கள் செய்த உதவிக்கு ஒருவர் பதில் உதவி செய்யலாம். ஆதாயமான நாள்

**கன்னி:**
மனதில் இனம் புரியாத கவலை குடிகொள்ளும். சில பிரச்சினைகளை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கடன் வாங்கலாம். மற்றவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**துலாம்:**
பெரிய மனிதர்கள் சந்திப்பு நிகழும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். காலை நேரத்தில் சில நல்ல செய்திகளைக் கேட்கலாம். எடுத்த காரியத்தை முடிக்க நண்பர்கள் சிலர் உதவி செய்யலாம். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்:**
சிலரிடம் கடிந்து பேச நேரிடலாம். சுயதொழில் புரிவோர் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். நீண்ட நாள்களாகச் செல்லாத ஆலயம் ஒன்றுக்குச் சென்று வழிபடலாம். உங்கள் வகையிலோ அல்லது குடும்பத்தினர் வகையிலோ மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படுவர்.

**தனுசு:**
நண்பர்களின் உதவியால் தொடங்கிய சில வேலைகளைத் துரிதமாக முடிப்பீர்கள். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கு பெறுவீர்கள். மனக்குழப்பங்களைத் தவிர்க்க எந்த விடயத்திலும் நிதானமாக முடிவெடுப்பது நல்லது. நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**மகரம்:**
தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக வராத கடன் மிகுதி ஒன்று வரலாம்.

**கும்பம்:**
தொழில் ரீதியான குழப்பங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட ஒரு காரியத்தைச் செய்ய முடியாமல் மற்றொரு காரியத்தைச் செய்யலாம். குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சக ஊழியர்கள் இடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**மீனம்:**
ஆரமிபத்த சில வேலைகளில் பல முறை தடை ஏற்பட்டு, பின்னர் முடிவுக்கு வரும். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். சில விடயங்களில் பிடிவாதமாகச் செயற்பட்டு மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். சபலங்களைத் தவிர்க்க வேண்டும்.

---

# கைதுக் … வெளிநா… முயலும் …

கடந்த தி.மு.க. ஆட்சியில் முன்னாள் அமைச்சர்கள் பொதுமக்களிடமிருந்து அபகரித்த சொத்துக்களைப் பட்டியலிட்டால், அது ஸ்பெக்ரம் ஊழல் தொகையை விட அதிகமாக இருக்கும் என சொல்லப்படுகிறது. அந்தளவிற்கு பொதுமக்களின் சொத்துக்களை குண்டர்களும், முன்னாள் அமைச்சர்களும் அபகரித்துள்ளனர்.

சொத்துப்பறிப்பு, கட்டப்பஞ்சாயத்து, ஆள் கடத்தல், கொலை, கொள்ளை என முன்னாள் அமைச்சர்கள் பலரும் தனி ராஜாங்கமே நடத்தியது இப்போது மெல்ல மெல்ல வெளிசத்துக்கு வர, குண்டர்களும், அமைச்சர்களும் கைது பயத்தில் வெளி நாடுகளுக்கு தப்பி ஓட திட்டமிட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது.

திருச்சியில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் கூடவே இருந்த மூன்று பேர்கள். பெயரைச் சொன்னாலே போதும் தரம் எளிதில் விளங்கிவிடும் என்பதை போன்றவர்கள். ஒருவர் குடமுருட்டி பெயர் கொண்டவர். திருச்சி மாநகராட்சியின் அங்கீகரிக்கப் பட்ட கட்டப்பஞ்சாயத்துப் பேர்வழி. இவர் இன்றி அங்கே ஓர் அணுவும் அசையாது.

மற்றொருவர் ஆறுமுகக் கடவுளின் பெயர் கொண்ட நபர். திருச்சியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் அவர் வைத்ததுதான் சட்டம். எந்த வேலையை யார் தொட்டாலும், அல்லது எந்த தொழிலை யார் தொடங்கினாலும் இவருக்கு கப்பம் கட்டிவிட வேண்டும். மீறினால் தொழிலும் நடக்காது. உயிருக்கும் ஆபத்து

### நடுங்கும் தாதாக்கள்

அதேபோன்று காஜாமலைக்காரர் ஒருவர். திருச்சி மாவட்டங்களில் எங்கே எந்த கட்டப்பஞ்சாயத்து என்றாலும் இந்த மூவரின் ஆதிக்கம்தான். கோடிகளிலும் லட்சங்களிலும்தான் இவர்கள் மிரட்டல் சாம்ராஜ்யம் நடந்தது. சம்பந்தப்பட்ட வீட்டிற்கு செல்வார்கள். இவ்வளவு தொகையை வைத்தாக வேண்டும் என்பார்கள். கொடுக்கவில்லை என்றால் அசிங்கமான அரங்கேற்றம் கூட நடத்துவார்கள். இதற்கு நடுங்கியே பலரும் பணிந்தார்கள்.

சரி, இப்போது இந்த மூன்று பேர்களும் எங்கே எப்படி இருக்கிறார்கள்? அதுதான் யாருக்கும் தெரியவில்லை என்கிறது திருச்சி மாநகரம்.

மதுரை சாம்ராஜ்யத்தில் எடுத்துக்கொண்டால், இங்கு தி.மு.க. அதிகார மையம்தான்.

தா.கிருஷ்ணன் கொலை வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் மூன்று பேர், மாநகர அதிகாரத்தில் இருக்கக்கூடிய அம்மணியின் கணவர் ஒருவர், அந்த கணவரின் கண் அசைவுக்கு ஏற்ப ஆள்களை தூக்கக்கூடிய மேலமாசி வீதி சரவணபகவான். இவர்கள் ஐந்து பேரின் ஆதிக்கம்தான் மதுரை மாநகருக்குள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு ரவுடி அணி. வீட்டை ஆக்கிரமிப்பது, காலி செய்வது, விற்பவரிடமும் வாங்குபவர்களிடமும் கட்டாய கப்பம் வாங்குவது.. இல்லை என்றால் கடத்தி வந்து வசூலிப்பது, யாராவது பெரிய அளவில் நிலம் வைத்திருந்தால் அவர்களை மிரட்டி விற்கச்சொல்லி சாதிப்பது, இவர்களின் கட்டப்பஞ்சாயத்துக்கு மறுப்பவர்களைத் தாக்கவும் செய்திருக்கின்றனர்.

இந்த தேர்தலில் மதுரை மாவட்ட தொகுதிகள் எதையும் தி.மு.கவுக்கு விட்டு வைக்கமால் துடைத்தெறிந்து, அ.தி.மு.கவின் கோட்டையாக மாற்றியது.

முதல்வர் ஜெயலலிதா எந்த ஊர் பிரசார கூட்டத்திலும் அப்படி பெயரை குறிப்பிட்டு தாதாக்களை எச்சரித்துப் பேசியதில்லை. ஆனால், மதுரையில் பேசினார். தான் அதிகாரத்திற்கு வந்த அடுத்த நிமிடமே அந்தக் குப்பைகள் துடைத்தெறியப்படும். மதுரை மாநகரம் சுத்தமாகும் என்றார்.

இப்போது அந்த நடுக்கம் மேற்சொன்ன கட்டப் பஞ்சாயத்துப் பேர்வழிகளுக்கு பற்றிக்கொண்டிருக்கிறது. நடுநடுங்கிப் போய் இருக்கிறார்கள். பக்கத்தில் பட்டாசு வெடித்தால்கூட துப்பாக்கி வெடிக்கும் பயத்தில் கிடுகிடுத்துப் போகிறார்கள். எப்படியாவது பிழைத்துக்கொள்ள வேண்டி அ.தி.மு.கவுடன் சேர்ந்து கொள்ள ஆலாய் பறக்கிறார்கள். ஆள்களின் மூலம் தூது விடுகிறார்கள்.

### சென்னையிலும் சண்டித்தனம்

தலைநகர் சென்னையை எடுத்துக் கொண்டால் கட்டப்பஞ்சாயத்து நிறுவனம் ஒன்று அதிகாரப் பூர்வமாகவே இருந்தது. கடந்த முறை ஜெயலலிதா ஆட்சி இருந்த போது இவர் செய்து விட்ட குற்றத்திற்காக ஆந்திரா பக்கமே இருந்தார். பிடித்து வந்து உள்ளே வைத்தார் ஜெயலலிதா. பிரபலமான கோயிலில் நடந்த கொலை அது. தமிழகத்தை உலுக்கிய கொலை என்றும் கூறலாம். ஆனால் தி.மு.க ஆட்சியில் மின்சார சக்தியோடு வெளியில் வந்தார். வழக்கில் இருந்து விடுபட்டார்.

சேலத்தில் சிறுதொழில்கள் புரிவோர் பலரும் ரவுடி களால் பெருமளவில் பாதிக்கப்பட்டனர் என்பது இப் போது வெளிச்சத்துக்கு வருகிறது. வெள்ளிப்பட்டறை வைத்திருக்கும் சிறு தொழி லாளர்கள் பலரும் கடந்த ஆட்சியில் ரவுடிகளால் கடுமையாக



பாதிக்கப்பட் டனர். குடும்பங்கள் வசிக்கும் வீடுகளுக்கு சென்று குடித்து விட்டு உடம்பில் ஒட்டு துணிக்கூட இல்லாமல் நிர்வாணமாக புகுந்து அந்த குடும்பங்களை மிரட்டியுள்ளனர். இந்த ரவுடிகள் தி.மு.க. ஆதரவு பெற்றவர்கள் என்பதால் அப்பொழுது போலீஸ் புகாரை வாங்க மறுத்தது. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் மேற்கண்ட ரவுடி கள் வேறு மாநிலங்களுக்கு சென்று தலை மறைவு ஆகி விட்டதாகவும், இது ஆட்சியா அல்லது கருணாநிதி தலைமையில் நடந்தது ஆட்சியா என்று சேலம் மக்கள் நிம்மதியுடன் கூறுகிறார்கள்.

### ஊழல் புகாரில் சிக்கியுள்ள அமைச்சர்களின் பட்டியல்

முன்னாள் உணவுத்துறை அமைச்சர் எ.வ. வேலு தி.மு.க.வின் திருவண்ணாமலையில் சாதாரண தொண்டராக இருந்து, அரசியல் சடுகுடு மூலம் முன்னுக்கு வந்தவர். கட்சியில் உள்ள சீனியர்களை போட்டுக் கொடுத்து 2006இல் எம்.எல்.ஏ சீட்டு வாங்கி, பின் உணவுத்துறை அமைச்சர் ஆனார்.


ஒரு ரூபா அரிசி வழங்கும் திட்டத்தில் கோடிக்கணக்கான ரூபா மானியம் வழங்குவதில், அரிசியில் பெரும் பங்கு ஆந்திரா, கேரளா, கர்நாடகாவிற்கு கடத்தப்பட் டது, தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து மாலைதீவு, குஜராத் ஆகிய இடங்களுக்கு 7 லட்சம் கிலோ அரிசி கடத்தல் உட்பட எத்தனையோ அரிசி கடத்தல்கள் இவருடைய கவனத்திற்கு வந்தும், அப்பொழுது இருந்த ஆளுங்கட்சியின் மேலிடத்திற்கு நெருக்கமான நபர்கள் என்பதால் கோடிக்கணக்கான ரூபா ஊழல்கள் மூடி மறைக்கப்பட்டன.

இந்த ஊழலில் வேலுவிற்கும் தொடர்பிருக்கலாம் என்பதால் அ.தி.மு.க. அரசின் ஆழ்ந்த சந்தேக பார்வை இவர் மீது படிந்துள்ளது. எந்த அளவிற்கு வேலு கருணாநிதிக்கு நம்பகமானவர் என்றால், பொன்னாகரம் இடைத் தேர்தலில் தி.மு.க.வின் வெற்றி உன் கையில்தான் உள்ளது என்று கருணாநிதி கூறும் அள விற்கு வலிமை வாய்ந்த நபர். இவருக்கு சொந்தமாக நான்கு கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. இவருடைய மொத்த சொத்து மதிப்பு பல நூறு கோடி ரூபாயைத் தாண்டும்.

பொன்முடி முன்னாள் கல்வித்துறை அமைச்சர் விழுப்புரம் தொகுதியில் இருந்து கடந்த தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சர் பதவியை எட்டிப் பிடித்தவர். முன்னாள் துணை முதல்வர் ஸ்ராலினின் வலது கரம் போன்றவர். கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதில் உட்பட பல்வேறு முறைகேடுகள் அணிவகுத்து நிற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க் கலக்கத்தில் நாடுகளுக்கு ஓட ம் தி.மு.கவினர்



தால் அ.தி.மு.க.வின் விசாரணைக் குழு இவர் மீது பாய லாம். எ.வ.வேலு போலவே இவரும் பல கல்லூரிகளுக்கு சொந்தக்காரர்.

கே.என்.நேரு முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் கடந்த ஆட்சியில் தமிழக போக்கு வரத்து துறைக்கு 45 ஆயிரம் சொகுசு பேருந்து வாங்கப்பட்டதில், அதிகப்படியான முறைகேடு கள் அணிவகுத்து நிற்பதால் நேருவின் பெயரும் விசாரணை குழு பட்டியலில் இடம்பெற்றுள்ளது. சென்னையில் அண்ணா அறிவாலயம் உள்ளது போல் திருச்சியில் கலைஞர் அறிவாலயம் கட்டி உடன் பிறப்புகளின் உள்ளம் குளிர செய்து கருணாநிதியின் அபிமானி என பெயர் எடுத்தவர்.

போக்குவரத்துத்துறை நட்டத்தில் இருக்கும் போது தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக பல கோடி ரூபா மதிப்புள்ள 10 பஜிரோ ஆடம்பர சொகுசு கார்களை அரசு பணத்தில் இருந்து முன்னாள் அமைச்சர் நேரு வாங்கியதும் விசாரணைக்கு உள்ளாக இருக்கின்றது.

என்.கே.கே.பி.ராஜா முன்னாள் புடைவைத்துறை அமைச்சர். ஈரோடு மாவட்டத்தில் அடாவடி அமைச்சர். நில அபகரிப்பு ஆள் கடத்தல் என்று அணிவகுக்கும் புகார்கள் ஏராளம். ராஜாவால் சொத்துக்களை இழந்தவர்கள் ஈரோடு பொலிஸில் புகார் கொடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் ராஜா மீது பொலிஸாரின் பார்வை திரும்பியுள்ளது.

வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் முன்னாள் வேளாண் துறை அமைச்சர். மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை தமிழகத்தில் அனுமதிக்க கூடாது என்று விவசாய சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அவற்றை கண்டுகொள்ளாமல் மரபணு மாற்ற விதைகளை அனுமதிக்கப்படும் என்று அறிவித்து விவசாயிகளின் வயிற்றெரிச்சலை வாங்கி கட்டிக் கொண்டவர்.

வீரபாண்டி ஆறுமுகம் வேளாண்துறை அமைச்சராக பொறுப்பேற்றபோது ஜப்பான் நாட்டின் 1100 கோடி ரூபா ஜப்பான் காடு வளர்ப்பு திட்டத்தில் முறைகேடுகள் நடந்ததாக சந்தேகம் எழுந்துள்ளதால் வீரபாண்டி ஆறுமுகம் விசாரணை அவஸ்தையில் சிக்கியுள்ளார். ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் குப்புராஜ் குடும்பத்தினர் 6 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் அவருடைய தம்பி மகன் பாறைப்பட்டி சுரேஷ்குமாருக்கு வக்காலத்து வாங்கிதால், சி.பி.சி.ஐ.டி பொலீஸாரின் விசாரணை வளையம் முன்னாள் அமைச்சரை வளைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் முன்னாள் பிற்படுத்தபட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். விருதுநகர் மாவட்டத்தில் அரசியல் கலத்தில் ராமச்சந்திரன் 33 வருடங்களுக்கு முன்னால் கால் பதித்த போது ஒரு சாதாரண நபர். இன்று இவருக்கு சொந்தமாக சினிமா தியேட்டர்கள், ராஜபாளையம், விருதுநகர், அருப்புக் கோட்டை ஆகிய இடங்களில் பிரமாண்ட நூர்ப்பாலைகள், ஆயத்த ஆடை தயாரிப்பு மையமும் உள்ளன இவருக்கு. இவருடைய மகன் ரமேஷ் பிரமாண்ட புடைவைக் கடைக்குச் சொந்தக்காரர்.

அ.தி.மு.க.வின் நிழலில் அரசியல் பாடம் பயின்ற இவர், தி.மு.க.வில் இணைந்து அ.தி.மு.க.வை விருதுநகர் மாவட்டத்தில் காலி செய்யும் பணியில் சுறுசுறுப்பு காட்டினார். வருமானத்திற்கு மிஞ்சிய சொத்துக்கணக்கு என்பது இவரிடம் ஏராளம். தன் தம்பி சுப்புராஜ் பெயரில் சொத்துக்களை ஏராளமாக வளைத்துள்ளார் என்பது மீதான குற்றச்சாட்டு

கே.பி.பி.சாமி முன்னாள் மீன்வளத்துறை அமைச்சர். திருவள்ளூர் மாவட்டத்தில் சாதாரண வட்டச் செயலாளராக இருந்து எம்.எல்.ஏ பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மீன்வளத்துறை அமைச்சர் பதவியை எட்டிப் பிடித்தார். மீன்பிடி உபகரணங்கள் வழங்குவது, நில அபகரிப்பு, சொத்துக்களை அடாவடியாக பறிப்பது என்று அமைச்சரும் அவரது தம்பி கே.பி.பி.சங்கரும் நடத்திய அரங்கேற்றங்கள் அதிகம். இதனால் மீனவர்கள் ஓட்டு வங்கி இவரின் காலை வாரியது. சாமி மற்றும் அவரது தம்பி சங்கரால் பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுக்கலாம் என்று பொலீஸார் வெகுவிரைவில் அறிவிப்பு வெளியிட உள்ளனர்.

மூத்த அமைச்சர்கள் எல்லோருமே குறைந்த பட்சம் ஐந்தாயிரம் கோடி சம்பாதித்திருப்பதாக அவர்களது நெருங்கிய வட்டாரங்களே சொல்கின்றர். கட்சியின் தலைமைக்கு பினாமிகளாக இருப்பவர்கள் இருபதாயிரம் கோடிகளுக்கு அதிகமா கவே சொத்து சேர்த்திருக்கின்றனர். அந்த பணத்தையெல்லாம் வெளிநாடுகளில் நிலக்கரி சுரங்கங்கள், ஹோட்டல்கள், தீவுகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள் போன்ற வகைகளில் பல நாடுகளில் முதலீடு செய்து, பல தலைமுறை உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு செட்டில் ஆகி விட்டதாகவும், மூத்த அமைச்சர்களின் வாரிசுகள் சிரமத்திற்கு உள்ளாகாமல் வெளிநாடுகளுக்கு சென்று பாதுகாப்பாக தற்காலிகமாக தப்பிக்கப் போவதாகவும் செய்திகள் வருகின்றன.

இவையெல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல கடலில் கலந்த சிறு நீர்த் துளிகள்தான். பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான் என்பது அனைவருக்கும் பொருந் தக் கூடிய பழமொழி தி.மு.க.வினருக்கு மட்டும் இன்று சொந்தமாகி இருக்கிறது.

தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறை, நிதி நெருக்கடியை சீர் செய்யும் பணியில் புதிய அரசு களம் இறங்கியுள்ளது. இதை சீர்செய்த பிறகே, அதிகாரம் மற்றும் பதவியை தவறாக் பயன்படுத்தி சொத்துக்களைக் குவித்த முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட விருக்கிறது. அதேபோல் முன்னாள் அமைச்சர்களிடம் சொத்துக்களை பறிகொடுத்தவர்கள் தங்கள் முறைப்பாடுகளை தெரிவிக்க, மாவட்ட வாரியாக முறைப்பாட்டு மையங்களை அமைக்க தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக சொல்லப்படுகிறது.

(நன்றி - சூரியக்கதிர்)

## கிரிக்கெட் சொல்லும் கீதோபதேசம்



கிரிக்கெட் என்றால் ஏதோ பொழுதுபோக்கவிரும்பு வார்கள். ஆடுகின்ற, பொழுதே போகாதவர்கள்பார்க்கிற மட்டையடி என்று. பலரும் கருதுகின்றோம். ஆனால் அதற்குள் எத்தனை பெரிய வாழ்க்கை இரகசியம் பொதிந்திருக்கிறது என்பது தெரியுமா?

கிரிக்கெட்டில் ஆடுகிறவர் ஒருவர். அவருக்கு ஓடிவந்து ஓட்டம் எடுக்க உதவுகிறவர் ஒருவர். சரியான உதவி இல்லாமல் யாரும் ஜெயிக்க முடியாது இதன்மூலம் புரிகிறதா வாழ்க்கையின் இரகசியம். அடுத்து ஆடுகிறவர் ஒருவர் என்றால் அவரை வீழ்த்துகிறவர் ஒருவர் இருக்கலாம். ஆனால் கிரிக்கெட்டில் அப்படியா? ஆடுகிறவரை வீழ்த்த, அழிக்க, அவரை வெளியேற்ற அடுத்த அணியே மைதானத்தில் தயாராக நிற்கிறது. அதுதான் உலகம். நல்லது செய்ய இரண்டு பேர் தயாராகப் புறப்பட்டால் அவர்களை வெளியேற்ற பதினொரு பேர் தயாராக இருக்கிறார்கள். இதுதான் வாழ்க்கை.

அதைவிட இந்த மக்கள் கூட்டம் கொள்கின்ற ஆரவாரிப்பு அடேயப்பா! நான்கு அல்லது ஆறு என்று ஓட்டம் எடுத்தாலும் கைதட்டும்; ஆர்ப்பரிக்கும்; வெளியேறினாலும் ஆர்ப்பரிக்கும். மக்கள் யார் பக்கம் எப்போது சாய்வார்கள் என்று புரிந்து கொள்ளமுடியாது.

மக்களுக்கென்ன? வெற்றியானாலும் ஆர்ப்பாட்டம். தோற்றாலும் ஆர்ப்பாட்டம். இதுதான் மக்கள் இயல்பு. ''வாழ்ந்தாலும் பேசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா........'' என்கிற சினிமாப்பாட்டுச் சரிதான்.

பாதிரியார் ஒருவர் தேவாலயம் ஒன்றுக்குப் பேசப் போயிந்தார். அவர் பேச்சைக்கேட்க மக்கள் கூட்டம் அலைமோதியது. ''உங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவு பெரிய கூட்டம் கூடுகிறது பார்த்தீர்களா? என்று உதவியாளர் பெருமையாகச் சொன்னார். உதட்டைக் கடித்துவிட்டு ''இதென்ன கூட்டம் என்னைத் தூக்கில் போடுவதாக இருந்தால் இதைவிடப் பெரிய கூட்டம் வரும்'' என்றார் பாதிரியார். மக்களைச் சரியாகவே எடை போட்டிருக்கிறார்.

கிரிக்கெட் சொல்லும் கீதோபதேசம் இன்னும் இருக்கிறது. சில சமயங்களில் கூட்டம் எழுந்து 'தோல்வி' 'தோல்வி' என்று ஆர்ப்பரிக்கும். கோஷம் போடும். ஏன்? கிரிக்கெட் மட்டையில் பட்டதா இல்லையா என்று சட்டென்று தீர்மானிக்க முடியாத குழப்பம். பந்து கோலில் படுமுன்னர் ஓடிவந்து மட்டையால் கோட்டைத் தொட்டாரா இல்லையா என்கிற சந்தேகம். இந்த மாதிரி நேரத்தில் கூட்டம் எழுந்து பேயாகக் குதிக்கும். ஆட்டக்காரன் தன் நியாயத்தை நிரூபிக்கமுடியாதபடி மட்டையை மண்ணில் ஊன்றியபடி பரிதாபமாக பலியாடு மாதிரி விழிப்பார்.

ஆனால் கண்காணிப்பாளர் ஒருவர் 'ஆட்டமிழக்கவில்லை' என்று அறிவித்ததும் பேயாட்டம் ஆடிய ரசிகர்கள் அடங்கி ஒடுங்குவார்கள். ஆச்சரியமாக இல்லையா? பத்தாயிரம் பேர் முடிவுக்கு எதிராக ஒற்றை மனிதர் தீர்ப்புச் சொன்னதும் பேயாட்டம் சட்டென்று காற்று போன பலூன் மாதிரி படிகிறதே எப்படி! அதுதான் தர்மத்தின் வலிமை. அதர்மம், அநீதி, அக்கிரமம் எத்தனை பெருங்கூட்டம் கூடி காதுகிழியக் கத்தினாலும் தர்மத்தின் குரல் மெல்லியகுரல் வலிமையானது. அதர்மத்தின் குரலை அடக்கக் கூடியது. கிரிக்கெட்டில் இத்தனை தத்துவமா? இன்னும் ஒன்று. முக்கியமானது.

ஆடுகளத்தில் தர்மத்திற்காக ஆடுபவன் ஒருவன் என்றால் அவனை வெளியேற்றுவதற்குப் பதினொருபேர் என்று பார்த்தோம். சமயத்தில் பதினொருபேர் வெளியேற்றமாட்டார்கள். கூட ஒத்துழைப்பவர் தேவையில்லாமல் எம்மை ஓடவிட்டு சிக்கலில் மாட்டிவிடுவார்கள். உத்தமர். யேசுவையே அவ ரது சீடரில் ஒருவர்தானே காட்டிக்கொடுத்தார். சமயத்தில் எதிரிகள் அல்லர். எம்மவர்களே எம் வீழ்ச்சிக்குக் காரணம் ஆகக் கூடும்.

கிரிக்கெட் கூட கீதோபதேசம் தான். கவனித்தால் புரியும்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாரந்தனை சரவணை – கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த் திருவிழாச் சிறப்பு மலரும் மலர் வெளியீடும் – 14.06.2011



## நல்லைக் குருமணியின் ஆசி



முருகன் அடியார்களுக்கு!

நாரந்தனை - சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த இந்த ஆலயம் நாரந்தனை- சரவணை மக்களின் தனித்துவத்தைப் பேணுவதாகவும் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு இந்த ஆலயத்தின் எல்லாவற்றுக்கும் காரண காரியராக விளங்கும் முருகப்பெருமான் சிவசுப்பிரமணிய சுவாமியாக எழுந்தருளியுள்ளார். ஆலய விழாக்கள் இறைவனுடைய சிறப்பை எமக்கு உணர்த்துகின்றன. இந்த வகையில் சிற்பக் கலைஞர் சி. அமரசிங்கம் அவர்களால் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய தேர் இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்தேர் இந்த ஆலயத்துக்கும் இந்த ஊருக்கும் பெருமை தேடித்தருவதாகவும் இந்தப் புனித காரியத்தை செய்த தேர்த் திருப்பணி சபையினரையும், ஊர் மக்களையும் வாழ்த்திப் பாராட்டுவதுடன் இதனையொட்டி வெளிவரும் புதிய சித்திரத் திருத்தேர் மலருக்கு எனது ஆசியுமையினை வழங்கி மகிழ்வடைகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## சித்திரத் திருத்தேர் ஏறும் சிங்கார முருகன்



நாரந்தனை- சரவணை கர்ணந்தோட்டத்தில் உருவத் திருமேனி கொண்டு வீற்றிருந்து வேண்டுவாருக்கு வேண்டியதை வாரி வழங்கும் வள்ளலாக கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக கருதப்படும் கந்தனுக்கு புதிதாகச் சித்திரத் திருத்தேர் உருவாக்கப்பட்டு எம்பெருமான் ஆரோகணித்து வரும் இரதோற்சவம் 14.06.2011இல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது என்பதை அறியும் போது மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது.

ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் மஹோற்சவ காலத்தில் நடைபெறும் இரதோற்சவம் உன்னத இடத்தை வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. ஆலய வழிபாட்டில் தனித்தன்மை மிக்க தேர்த்திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட பல லட்சம் ரூபா செலவில் புதியதொரு சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தேரை உருவாக்கிய ஸ்தபதி அராலி ஊர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரலிங்கம் அவர்களுக்கும் அவருடன் இணைந்த சிற்பக் கலைஞர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினர், ஆலய தேர்த் திருப்பணிச் சபை யினர் நிதி வழங்கியோர் அனைத்து அடியவர்களுக்கும் பெருமான் திருவருள் கடாட்சம் கிட்டுவதாக.

சிவஸ்ரீ கா. புவனேஸ்வரக் குருக்கள், ஆலய பிரதம குருக்கள்

## அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி



நாராந்தனை - சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு புதிய சித்திரத் திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சுமார் நூற்றி ஐம்பது ஆண்டு காலத்துக்கு முற்பட்ட பழமைமிக்கது ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயமாகும். ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் நாரந்தனை கிராமத்தில் அழகுற இந்த ஆலயம் கடலாலும் நிலப்பரப்பினாலும் சூழப்பட்டு இவ்வூர் மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றது.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்குத் தேரொன்றை உருவாக்குவதற்கு 1990 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு நாட்டுச் சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தும் மீண்டும் மீள்குடியேறியவுடன் 2002 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற்றப்பட்டமை இப்பிரதேச மக்களின் மத ஈடுபாட்டையும் இந்த ஆலயத்தில் அவர்கள் கொண்டுள்ள பற்றையும் வெளிப்படுத்துகின்றது. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு புதிய சித்திரத்திருத் தேர் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அம் முயற்சியின் பலனாக 2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் பன்னிரண்டாம் திகதி புதிய சித்திரத்திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அவ்வூர் மக்களின் சுகவாழ்வுக்கும் கிராமத்தின் வளர்ச்சிக்கும் ஸ்ரீ சிவசுப் பிரமணிய சுவாமிகள் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி இ.மெல்டா சுகுமார், அரச அதிபர், மாவட்ட செயலாளர், யாழ்.மாவட்டம்.

## திருப்பணிச் சபைத் தலைவர் வாழ்த்து



ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள தீவகத்தின் தமிழ்ப் புலமையும் சைவ கலாசாரமும் இறைபக்தியும் கொண்ட பெரியார்கள் வாழ்ந்து சிறப்புப்பெற்ற கர்ணந்தோட்டப்பதியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் தீவகத்திலுள்ள பழமை வாய்ந்த ஆலயமாகும். 110 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் பாவனையிலிருந்த தேர் பழுதடைந்த காரணத்தால் புதியதேர் அமைக்க அச்சேற்றப்பட்டது.

போர்ச்சூழல் காரணமாக நிறைவேற்றத் தாமதம் ஏற்பட்டு மீண்டும் 2007 இல் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு இன்று புதிய சித்திரத்தேர் பவனி வருவதையிட்டு மிக மகிழ்வடைவதுடன் இந்த வேளையில் நாரந்தனை- சரவரணை முருகன் அடியார்களுக்கும் வெளிநாட்டிலுள்ள முருகன் பக்தர்களுக்கும் நிதி வழங்கி ஒத்துழைத்தமைக்காக வள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப்பெருமான் அருள் பாலிக்க இறைவனை வேண்டுவதுடன் விழா சிறப்புறவும் மலர் சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

க. நடராஜா,
தலைவர், தேர்த்திருப்பணிச்சபை.

## உள்ளத்திலிருந்து



தீவகத்தில் உள்ள ஆலயங்களில் மிகவும் பழமை வாய்ந்த எமது மூதாதையர்களாலே வழிபட்டு வந்த ஆலயம் கர்ணந்தோட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து கொண்டிருக்கின்ற கலியுகவரதன் கந்தப் பெருமான் கந்தசாமி கோயில் என்று அடியார்களால் அழைக்கப்படுகின்ற ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயமாகும். ஊர் கூடி தேர் இழுத்தல் வேண்டும் என்று சொல்வார்கள்.

இது எங்களை ஏற்றத்தாழ்வற்ற கூடி வாழ்தலை குறித்து நிற்கின்றது. எமது ஒற்றுமையை, புரிந்துணர்வை, காலத்தின் தேவையை வலியுறுத்தி இருக்கிறது. இத்தேர்த் திருப்பணி நிறைவு பெறுவதற்கு முருகன் அருளாட்சியுடன் உழைத்த தேர்த் திருப்பணிச் சபையினர், ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள், உள்ளூர் வெளியூர் அடியார்கள், சிற்பக் கலைஞர்கள் ஆகியோரது கூட்டு முயற்சியாகும். இவர்கள் அனைவருக்கும் முருகன் திருவருள் கிடைக்கவேண்டும் என்று வேண்டுவதுடன் இத்திருத்தேர் பெருவிழா சிறப்புறவும் மலர் வெளியீடு சிறக்க வேண்டும் என முருகனின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

தி. சுந்தரலிங்கம்,
தலைவர், பரிபாலனசபை.

## ஆலயத்தின் வரலாறும் வளர்ச்சியும்



ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள ஊர்காவற்றுறையின் மையப்பகுதியில் அமைந்துள்ள நாராந்தனைக் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் சரவணைக் கிராமத்தின் மேற்கு எல்லையிலும் அமைந்துள்ள கர்ணந்தோட்டப் பகுதியில் அமையப்பெற்றுள்ளதுதான் இந்த ஆலயம்.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் பல இந்துக் கோயில்கள் இடித்து அழிக்கப்பட்டதாகவும் 1796 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த பின்னர் நாகரிகமாக நடந்து இந்துக் கோயில்களை மீள அமைக்க அனுமதித்ததாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

1875 காலப்பகுதியில் வாழ்ந்த எமது மூதாதையர் தெரிவித்த தகவல்களின்படி அக்காலப்பகுதியில் நாரந்தனைக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த வசதியான நிலவளங்கள், பசுமாடுகள் நிறைய வைத்திருந்த இரு குடும்பங்களுக்கிடையே (கட்டையர், நெட்டையர்) ஏற்பட்டிருந்த பகை உணர்வு முற்றி ஒரு பகுதியினருக்குச் சொந்தமான பசுமாடுகளை மற்றைய பகுதியினர் தொலையாகக் காட்டுப் பகுதியில் வதை செய்தமைக்குப் பிரயாச்சித்தமாக தவ சிரேஷ்டரின் வாக்குக்கும் பெரியோர்களின் ஆலோசனைக்கும் இணங்க மேற்படி தீயசெயலை செய்தவர் இந்த ஆலயத்தை கர்ணந்தோட்டப் பகுதியில் அமைத்தார்.

ஓலைக் கொட்டில் வடிவில அமைந்த இந்த ஆலயம் பின்பு வளர்ச்சி பெற்று அவர்களின் பரம்பரையில் தோன்றிய சிதம்பர உடையார், கந்தையா உடையார் வழித்தோன்றலில் 1930 ஆம் ஆண்டுகளில் ஆலய அமைப்புக்களில் உருவாக்கம்பெற்றது. 1940 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆலயத்தை பொதுமக்களுக்கு வழங்கி நிர்வாக சபையை உருவாக்கினார்.

1950 ஆம் ஆண்டளவில் ஆலயம் இரட்டைப் பஞ்சாங்க முறைப்படி மாற்றம் செய்யப்பட்டு 1954இல் மகாகும்பாபிஷேகம் நடை பெற்றது. தொடர்ந்து நிர்வாக அமைப்புக்கள் மாற்றம் செய்யப்பட்டு 1984, 2002 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது புதிய தேருக்குரிய பெருவிழா நடை பெறுகிறது.

த.கபிலநாதன்,
செயலாளர், ஆலயபரிபாலனசபை.

## வாழ்த்துச் செய்தி



வரலாற்றுப் பெருமைமிக்க ஊர்காவற்றுறை மண்ணில் நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் எனும் பதியில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமையப் பெற்றுள்ளது.

இங்கு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் இற் றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய பழமையான ஆலயமாகும். இங்கு அமையப்பெற்ற தேர் பழமையானதன் காரணத்தால் இங்கு புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் 12.06.2011 இல் வெள்ளோட்டம் நடை பெற்றதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். ஊர் கூடி தேர் இழுத்தல் என்ற கருத்திற்கமைய வேற்றுமைகள், பகைமைகள் கொண்ட மனிதர்கள் தமது சுயநிலை மறந்து ஒன்றாகச் சேர்ந்து இன்று புதிய தேரை வடம்பிடிப்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன், இன்று நடைபெறும் சித்திரத்தேர் பெருவிழாவில் பங்குபெறும் அடியார்களுக்கு சிவசுப்பிரமணிய சுவாமியின் அருள் கிடைக்கவும் அதையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

க. ஸ்ரீமோகனன்,
உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை.

## ஸ்தபதியின் வாழ்த்துச் செய்தி



எம்மை இவ்வழிக்கு ஆளாக்கி பெருவாழ்வு தந்த அராலி வடக்கு இலந்தைத்தாழ்வு முருகப்பெருமான் துணை முன்னிற்க நாரந்தனை - சரவணை கர்ணந் தோட்டம் சிவசுப்பிரமணியசுவாமி திருவருளோடு இந்த ஆலயத்துக்கு தேர்த் திருப்பணியைச் செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின் றேன்.

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணியானது கால சூழ்நிலை காரணமாக தாமதம் அடைந்து தற்போது நிறைவு பெற்றுள்ளது. இப்புனித திருப்பணிக்கு பல வகையிலும் உதவிகள் புரிந்த தேர்த் திருப்பணிச் சபையினருக்கும் ஆலய பரிபாலன சபையினர், இவ்வூர் மக்களுக்கும் மற்றும் என்னுடன் இணைந்து இப்பணி சிறப்புற அமைவதற்கு உதவிய எனதருமை உறவினர்கள், இந்திய சிற்பிகள், இரும்புவேலை, வர்ண வேலை, மரஅரிவு போன்ற தொழில் உதவி புரிந்தோர்க்கும் சித்திரத்தேர் பெரு விழாவில் பங்கு பற்றிய அடியார்கள், கலைஞர்கள் யாவருக்கும் எம்பெருமானுடைய திருவருள் கடாட்சம் கிடைத்தது சிறப்புடன் வாழ வாழ்த்தி என்னாலான வகையில் மேற்படி திருப்பணி சிறப்புற நிறைவடைந்ததையிட்டு உவகை யடைகின்றேன்.


விஸ்வப் பிரம்ம ஸ்ரீஸ்தபதி அமரசிங்கம்.

## செயலாளரின் செய்தி



எல்லாம் வல்ல கர்ணந்தோட்டக் கந்தனின் பெருங் கருணையை மனதார வேண்டிக்கொண்டு புதிய சித்திரத்தேர் பெருவிழா நடைபெறும் இந்நாளில் இந்த அழகிய தேரை உருவாக்கிய கலைஞர் விஸ்வப் பிரமஸ்ரீ சி.அமரசிங்கம் அவர்களுக்கும் அவர் குழுவினருக்கும் தேர் அமைவுக்குப் பெரும் நிதி உதவி வழங்கிய நாரந்தனை- சரவணை வாழ் மக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் முருகன் அடியார்கள் ஏனைய அன்பர்களுக்கும், தேர்த் திருப்பணிச் சபையினருக்கும் பரிபாலனசபையினருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் பெருவிழாவை முன்னிட்டு வெளியிடப் படும் மலருக்கும் ஆசியுரை, வாழ்த்துரை, சமய ஆக்கங்களை வழங்கிய பெருமதிப்புக்குரிய பெரியார்களுக்கு மலர் வெளியீட்டின் போது முதற்பிரதி மற்றும் சிறப்பு பிரதியியைப் பெற்றவகளுக்கும் மலர் வெளியீட்டினை நடத்தியவர்களுக்கும் சிறப்புரை வழங்கியவர்களுக்கும் மலர் வெளியீட்டை குழுவினர்களுக்கும் 2011 மகோற்சவ காலத்தில் சிறப்பு சொற் பொழிவாற்றிய ஆசிரியர் இரா. செல்வ வடிவேல் அவர்களுக்கும் சேவையாற்றிய அந்தணப் பெருமக்கள் ஏனைய சேவையாளர்கள், விழா உபயகாரர்கள், முருகன் அடியார்கள் அனைவருக்கும் மற்றும் கணபதி பதிப்பகத்தினருக்கும் எனது மனப் பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

க. சகாதேவன்,
செயலாளர், தேர்த்திருப்பணிச்சபை.



விளம்பர அனுசரணை:

நர்மதா கோல்ட் சென்ரர்
151, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பே.: 0112389282,
0112332948

நர்மதா நகை மாடம்
169, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காப்போர் கௌரவிப்பு

**குருதிக் கொடையாளர் தினம் இன்றாகும்**

உலகில் பல்வேறுபட்ட நிகழ்வுகள், பல்வேறுபட்ட நாள்களில் நினைவுகூரப்படுகின்றன. அதனால் தான் அந்தநாள் மற்றவர்களால் மதிப்பளித்து அறியப்படுகிறது. அவற்றுள் சில உலகளாவிய ரீதியாக அனுஷ்டிக்கப்படுகிறது. அவ்வாறான தினங்களில் ஒன்றே ''குருதிக் கொடையாளர் தினம்''.

வைத்திய ரீதியாக உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் உயிர்களுக்காகவும் தன்னலம் கருதாது தங்கள் உதிரத்தைத் தானம் செய்து பல உயிர்களைக் காக்கும் பணியில் ஈடுபடும் அந்த உன்னதமானவர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் இந்தக் குருதிக் கொடையின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவுமே இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த சேவையில் ஈடுபடுபவர்களை மதிப்பளிக்கும் எண்ணக்கருவுடன் உலக சுகாதார நிறுவனத்தால் முதன் முதலில் 2004 ஆம் ஆண்டு A,B,O குருதி வகைகளைக் கண்டறிந்த விஞ்ஞானி 'லான்ஸ்ரைனர்'' பிறந்த நாளாகிய ஜூன் 14 ஆம் திகதி உலகக் குருதிக் கொடையாளர் தினமாக அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இந்தத் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையிலும் 2004 ஆம் ஆண்டுகொழும்புபண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் குருதிக் கொடையில் சாதனை படைத்த குருதிக் கொடையாளர்களும் நடமாடும் இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் மற்றும் இது தொடர்பாக பல தரப்பட்டவர்கள் மதிப்பளிக்கப்பட்டு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். போர்க் காலச் சூழ்நிலையில் யாழ்ப்பாண இரத்த வங்கி சிறப்பாகச் செயற்பட்டமைக்காக அன்று சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் 2005 ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியால் வீரசிங்கம் மண்டபத்தில் முதல் முதலில் குருதிக் கொடையாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு சிறந்த முறையில் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

குருதியை ஒருவர் நான்கு மாதத்துக்கு ஒரு தடவை தானமாக வழங்கலாம். குருதிச் சிறுதட்டும் தற்போது தேவை ஏற்படும் போது வழங்குநரில் இருந்து தனியாகப் பிரித்தெடுக்கப் படுகிறது. அவ்வாறு குருதிச் சிறுதட்டு மட்டும் தானமாக வழங்குவதாயின் 16 நாள்களுக்கு ஒரு தடவை தானம் செய்யலாம். குருதிச் சிறுதட்டு பிரித்தெடுப்புத் தொழில்நுட்பம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒருவர் இரத்ததானம் செய்யும் போது அவருக்கு இரத்த வங்கியால் இலவசமாக ஒரு புத்தகம் வழங்கப்படும் அதில் அவரது இரத்த வகை, பெயர், முகவரி என்பவற்றுடன் எப்போது எங்கே வழங்கப்பட்டது போன்ற விவரங்களுடன் வைத்திய அதிகாரியின் ஒப்பமிட்டு வழங்கப்படும். அவர் ஒவ்வொரு தடவையும் இரத்ததானம் செய்யும் போதும் இந்தப் புத்தகத்திலும் இரத்த வங்கியின் பதிவேட்டிலும் பதியப்படும்.

இரத்ததான முகாமில் அதிகளவானோர் பங்குபற்றித் தேசிய ரீதியில் சாதனை படைத்த வெற்றி யாழ்ப்பாணத்தையே சாருகின்றது. முதலாம் இடத்தை யாழ். பற்றிக்ஸ் கல்லூரியும், இரண்டாம் இடத்தை வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியும் அகில இலங்கை ரீதியில் இவ்விரு இடங்களையும் பிடித்திருக்கின்றன.

இலங்கையில் பொஸன் தினத்தில் தெஹிவளை ஹரம்பிட்டியவில் நடமாடும் இரத்ததான முகாமில் அதிகளவானோர் இரத்ததானம் செய்வதும் குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு 3025 பேர் அங்கு இரத்ததானம் செய்தமை (ஒரே இடத்தில் ஒரே நாளில்) உலகளாவிய ரீதியில் சாதனையாகக் கொள்ளப்படுகிறது. இது ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

*10-20 இற்கு இடைப்பட்ட தடவைகள் இரத்ததானம் செய்தவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் அன்பளிப்பும் பொருள்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

*20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்பவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இதுவரை யாழ். இரத்த வங்கியில் 281 குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

*இவை தவிர குடும்பமாக இரத்ததானம் செய்பவர்கள், கணவன், மனைவியாக இரத்ததானம் செய்பவர்கள், சகோதரர்களாக இரத்ததானம் செய்பவர்கள், இரத்ததான முகாமுக்காக சிறப்பாக ஒழுங்கமைக்கும் நிறுவனங்கள், ஒழுங்கமைப்பாளர்கள், இதற்கான சிறந்த அனுசரணையாளர்கள், இரத்த வங்கியில் நீண்ட காலமாகச் சேவையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும் விசேட விருதுகளும் சான்றிதழ்களும் இந்த நாளில் இரத்த வங்கியால் வழங்கி அவர்களும் கௌரவிக்கப்படுகின்றனர்.

அதுமட்டுமல்லாது ஒருவர் 10 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்தால் கொழும்பு, தேசிய குருதி மாற்று பிரயோக சேவையால் அரச திணைக்களச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந் தச் சான்றிதழ் நேர்முகப் பரீட்சைகளில் பலருக்கு உதவி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பலர் குருதி பல உயிர்களுக்காக

பஞ்சவர்ணன்



**டாக்டர் தாரணி குருபரன்,**
வைத்திய பொறுப்பதிகாரி,
பிராந்திய இரத்த நிலையம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

தன்பாட்டில் செல்லும் சூரியனின் ஒளியும், வெப்பமும் கிடைத்ததற்கே விழாக் கொண்டாடுபவர்கள் தமிழர். அவ்வாறு இருக்க குருதி வழங்குமிடம் தேடி வந்து, தம் குருதியில் ஒரு பகுதியைப் பலனை எதிர்பாராது, வழங்கும் குருதிக் கொடையாளிக்கு ஏது செய்வோம்? அதற்கு ஈடாகச் செய்ய ஒன்றும் இல்லை. ஆனால், உயிர்காக்க, உறுதியுடன் உதிரம் கொடுக்கும் உத்தமர்கள் தம் பணிக்கு நன்றி சொல்வோம், உளம் நிறைய.

இவ்வருடம் பலர் குருதி, பல உயிர்களுக்காக என்ற தொனிப்பொருளுடன் இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. பாதுகாப்பான, தரமான குருதி யைப் போதியளவில் வழங்கும் சேவை என்ற இலக்கை நோக்கிக் குருதிக் கொடையாளிகளின் பணியை அடிப்படையாக பற்றுக்கோடாகக் கொண்டு இலங்கைத் தேசிய குருதி மாற்றீட்டு பிரயோக சேவை முன்னேறிக்கொண்டு இருக்கின்றது.

மாவட்ட ரீதியில் வருடாந்தம் சனத்தொகையில் 2 வீதம் என்ற எண்ணிக்கையில் குருதிக்கொடை செய்தால் அப்பிரதேசத் தேவையைப் பூர்த்திசெய்யப் போதும். ஆனால் யாழ்ப்பாணத்தில் குருதிக்கொடை ஒருவீதமாகவே உள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

**குருதிக் கொடையாளிக்கு வேண்டிய தகுதி**

ஆணோ, பெண்ணோ 18 வயதில் இருந்து 60 வயது வரை, நிறை 50 கிலோவுக்கு மேலிருந்தால் நோய் ஏதும் இல்லாத சுகதேகி எனில் இந்தப் பணியில் இணைந்து கொள்ளலாம். தகுதி இருந்தும் குருதிக்கொடை செய்ய இன்னும் ஆரம்பிக்காதவர்களுக்குக் குருதிக் கொடையாளிக்குத் தீங்கு ஏற்படும் வகையில் குருதியைப் பெற்று நோயாளிக்கு வழங்குவது இல்லை. குருதி வழங்குநர் நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்னரே குருதி வழங்க அனுமதிக்கப்படுவார்கள். குருதி வழங்கும் போதும் வழங்கிய பின்னரும் தீங்கு ஏதும் ஏற்படுமோ என்பது பற்றி உங்கள் உறவினராக, நண்பராக அல்லது அயலவராக உள்ள குருதிக் கொடையாளி ஒருவரைக் கேட்டறிந்து கொள்ளலாம்.




**இரா. ரமணன்**

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியரான இவர் 22 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார். இரத்ததானம் மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் படிப்படியாக இரத்ததானம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மக்களிடம் குருதிக்கொடை தொடர்பான தவறான அறியாமை நீங்கி வருவதே இக்குருதிக் கொடையாளர்களின் அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவித்தார். தற்போது இவர் நான்கு மாதங்களுக்கு ஒருதடவை இரத்ததானம் செய்து வருவதோடு மற்றவர்களையும் இரத்ததானம் செய்ய ஊக்குவிக்கின்றார்.

இரத்ததானம் செய் வதன் மூலம் உடலுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாது என்பதோடு எமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாவதை மக்களுக்கு அறியப்படுத்துவதன் மூலம் இன்னும் பலரைக் குருதிக் கொடையாளர்கள் ஆக்கலாம் என்றார்.



**த.தவராசா**
(வயது-30, சிவலிங்கப் புளியடி)

வன்னியில் சந்தித்த பாதிப்புக்கள், மற்றும் மக்களின் வறுமை போன்ற காரணங்கள் இவரை ஒரு குருதிக் கொடையாளியாக மாற்றியது.

இவர் யாழ். போதனா வைத்தியசாலைக் குருதி வங்கியில் இதுவரை 20 தடவைகளும், வன்னியில் 5 தடவைகளும், இந்தியாவில் 10 தடவைகளும் இரத்ததானம் செய் துள்ளார். 18 வயதில் குருதிக்கொடை யாளியாக மாறிய இவர் தனக்குள் தானே சந்தோசப்படுவதாகக் கூறுகிறார்.

இவரது குடும்பமே குருதிக் கொடைக் குடும்பமெனலாம். இவரது அம்மா 8 தடவைகளும், சகோதரி 6 தடவைகளும் குருதிக்கொரடை செய்துள்ளார்கள்.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி 'கேடயமும்' வழங்கி இவரைக் கௌரவித்துள்ளது. அதுமட்டுமல்லாது தன்னுடைய பணியாற்றும் தொழிலாளர்களையும் குருதிக் கொடையாற்ற ஊக்குவித்தும் வருகிறார்.



**செல்வி சிவசக்தி கந்தசாமி**
(வயது-24, நவாலி.)

2004 ஆம் ஆண்டு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றபொழுது 50 மாணவிகள், இரத்த தானத்துக்குத் தயாரான போது அதில் தானும் ஒருவராகக் கலந்துகொண்டதில் இருந்து குருதிக் கொடையாளியாக மாறியுள்ளேன். அன்றிலிருந்து வருடத்துக்கு மூன்று அல்லது இரண்டு தடவைகளாக இதுவரை 15 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார். இரத்ததானம் செய்வதால் ஏந்தவொரு இழப்பையுமே, சோர்வையோ உணரவில்லை என்பதோடு இரத்ததானம் செய்த பின்னர் சைக்கிள்களில் வீடு சென்ற அனுபவ மும் உண்டு என்கி றார்.

வீட்டில் அம்மா வின் ஒத்துழைப்பும், வேலைத்தளத்தில் நல்ல உதவிகளும் இரத்ததானம் செய்ய உதவுகிறது என்கிறார். இவர் தனது வாழ்நாள் முழுவதும் இரத்த தானம் செய்ய வேண்டும் என்றே எண்ணியும் உள்ளாராம்.



**முடியப்பு அன்ரன் செபதாஸ்**
(வயது-34, கிளிநொச்சி)

வன்னியில் கரித்தாஸ் கியூடெக் பணியாளரான இவர் 17 வயதில் ஆரம்பித்த குருதிக் கொடையில் இதுவரை 21 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார்.

இவரது தங்கை குண்டுத்தாக்குதலில் சிக்கி காயமடைந்து உயிருக்காகப் போராடியபோது யாரோ ஒருவர் செய்த இரத்ததானம் தங்கை உயிரைக் காப்பாற்றியது. அது இவர் மனதில் குருதிக் கொடைக்கான உந்துதலை ஏற்படுத்தியதாகக் கூறுகிறார்.

இவர் தடுப்பு முகாமில் இருந்த போதும் 3 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார். இதற்கு அப்போது பொறுப்பாக இருந்த மேஜர் சில்வா உதவிய தாகவும் கூறுகிறார்.

உயிர்காக்க உதவி செய்தல் புரிந்துணர்வை ஏற்படுத்துவ தாகவும் குருதி எடுக்கும்போது எமது குருதியைப் பரிசோதித்து ஆரோக்கிய மான நிலையை உறுதிப்படுத்தி குருதி யைப் பெறுவதால், உடல்ரீதியாக எந்தப் பாதிப்பும் தனக்கு இல்லை என்பது மற்றுமொரு மகிழ்ச்சியைத் தருவ தாகவும் குறிப்பிடுகிறார்.

குருதி இன்மை யால் ஒருவர் இறந்ததாக இருக்கக் கூடாது என்பது இவரது குறிக்கோள்.



**திருமதி வத்சலா துரைசிங்கம்**
(வயது-43, பன்னாலை)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் 21 வயதில் குருதிக்கொடையை ஆரம்பித்த இவர் இதுவரை 18 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார். இது உணர்வுபூர்வமான, உயிரைக்காக்கும் உன்னத நோக்கு எனக் குறிப்பிடுகிறார்.

தமது குடும்பமே தியாக நோக்கோடு, சமூக சேவையில் ஈடுபடுவதாகவும், தான் மனித உரிமைகள் சமூக சேவைகள் செயல்திட்ட உழைப்பாளி எனவும் குறிப்பிட்டு இரத்ததானம் தனக்கு உடல் உறுதியை தரும் என்று தனக்கு இதுவரை எந்த ஒரு தொற்று நோயும் ஏற்படவில்லை என்றும் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APSS இஞ்சினியறிங் இப்போது யாழ்ப்பாணத்தில்

APSS International 1994 ஆம் ஆண்டு கொழும்பில் நிறுவப்பட்டு பேராசிரியர் கதிரவேலு சந்திரபோஸின் வழி நடத்தலில் City & Guilds (U.K) பொறியியல் கற்கை நெறிகளை நடத்தி வருவது பெரும்பாலான பொறியியலாளர்கள் தொழில் நுட்பவியலாளர்கள் அனைவருக்கும் தெரிந்ததொன்றே. கடந்த 06.06.2011 இல் APSS இன் கிளை நிறுவனமான APSS Engineering (PVT) Limited தமது சேவையை யாழில் சுன்னாகத்தில் ஆரம்பித்துள்ளது.

ஆரம்ப விழாவில் பேராசிரியரும் முன்னாள் பொ.பால சுந்தரம்பிள்ளை, தொழில்நுட்ப கல்லூரி பணிப் பாளர் பேராசிரியர் கலாநிதி என் யோகராஜன், திறந்த பல்கலைக்கழக யாழ். நகர ஒருங் கிணைப்பாளர் வே.கந்தவேள் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

APSS International ஆனது City & Guilds (U.K)/Engineering Council (U.K) பாடநெறிகளை நடத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் சர்வதேச நாடுகளில் இயங்கிவரும் Centresக்கு சவாலாக விளங்கி Telecommunication & Electronics Engineering, Electrical& Electronic Engineerning, Civil Engineering துறைகளில் World Gold Medal பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**O/L, A/L மாணவர்களின் கவனத்துக்கு**

மாணவன் ஒருவன் O/L பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் திறமைச் சித்தி பெற்றவர் அல்லது A/L சித்தியடைந்தவர் Diploma தராதரத்தை ஆறுமாத காலத்திலும் HNDE/NDES/NDT/NCT/Open Univercity மாணவர்கள் Advanced Diplomaவை ஆறு மாத காலத்திலும் பயிலலாம்.

Diploma தராதரம் National Diplomaவுக்கும் Advanced Diploma தராதரம்HNDக்கும் சமப்படுத்தப்பட்டுள்ளதால் Advance Diploma தராதரம் பெறும் ஒருவர் U.K பல்கலைக் கழகங்களில்B.Eng/B.Sc பட்டப்படிப்புக்கான இறுதி ஆண்டுக்கான அனுமதிகளைப் பெற முடியும்.

City&Guilds Advanced Diploma/HNDE/ BTEC-HND(Edexcel/Iesl part-II/(B.Sc) Degree with mathematics தகுதியுடைய மாணவர்கள் Engineering council (U.K) Graduate Diploma (B.Eng.(Hons)) பட்டப் படிப்பைப் படிக்க தகுதியுடையவர்களாவர். B.Eng./B.Sc/ அல்லதுGraduate Diploma தகுதியுடையோர் Post Graduate Diploma (M.Eng.) கற்கைநெறிகளை தொடர முடியும்.

**பட்டதாரிகள் கவனத்துக்கு**

பல்கலைக்கழகத்தில் Physical Science கற்கும் மாணவன் அல்லது பட்டப்படிப்பை முடித்த மாணவன் ஒருவன் பொறியியல் துறைக்கு மாறவேண்டுமானால் City& Guilds Advanced Diploma பயின்று ஏதாவது ஒரு துறையில் பொறியியலாளர் ஆகலாம். (த)




கிளிநொச்சி மக்களின் தகவல் தொழில்நுட்பத்துக்கு உதவும் வகையில் மைக்றோ பி.சி, சிஸ்ரம் தனது 8ஆவது கிளையை கிளிநொச்சி ஏ-9 வீதி தொண்டமான் நகரில் அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது. (த)

# தென்மேற்கு ஆசியாவில் முதலிடம் பெறும் இலக்குடன் Samsung

தென்மேற்கு ஆசியாவின் தமது வெற்றியுடனான வளர்ச்சியை கொண்டாடும் Samsung Electronics நிறுவனம் தனது தென்மேற்கு ஆசிய பிராந்திய ஒன்று கூடலில் நிறுவனத்தின் பிராந்திய மூலோபாயம் மற்றும் 2011 ஆம் ஆண்டு உற்பத்தி வரிசைகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளது.

இன்ரநெட் இணைக்கப்பட்ட தொலைக் காட்சிகளின் புத்தாக்கங்கள், நுகர்வோரை ஊக்குவிக்கின்ற டிஜிற்றல் கமராக்கள், நவீன மொபைல் தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் இணைந்த Samsung இனது பிராந்திய சந்தைப் பிரசன்ன அபிவிருத்திக்கான திட்டங்கள் Samsung இனது ஒன்றுபட்ட தத்துவமான கம்பீரமான வாழ்வு என்பதன் பின்னணியில் தோற்று விக்கப்பட்டுள்ளன.

Samsung Electronics நிறுவனத்தின் தென் மேற்கு பிராந்தியத்திற்கான தலைவ ரான JS ஷின் அவர்கள் கம்பீரமான வடிவமைப்பு, கம்பீரமான அனுபவங்கள் மற்றும் கம்பீரமான இணைப்புகள் ஆகியனவே Samsung இனது கம்பீரமான வாழ்வு என்ற தத்துவத்தின் தூண்களாக உள்ளன எனக் குறிப்பிட்டார்.

✱ கம்பீரமான வடிவமைப்பு - நுகர்வோருக்கு அதிகரித்த தொழிற்பாட்டுத்திறனை வழங்குகின்ற இயல்பான வடிவமைப்புகளை உருவாக்குதல்.

✱ கம்பீரமான அனுபவங்கள் - பிரகாசம் மற்றும் வலிமை பொருந்திய முகத்திரைகளினூடாக பரந்த வகைப்பட்ட தளமேடைகளில் பரந்துபட்ட பிரயோகங்கள், விளையாட்டுக்கள் மற்றும் புரோகிராமிங் விநியோகத்தை வழங்குதல்

✱ கம்பீரமான இணைப்புக்கள்- உள்ளடக்கங்களைப் பகிர்ந்து பாவனையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்தி மற்றவர்களுடன் தன்னியக்கமாகவேஇணைப்பினை ஏற்படுத்துவதற்கு Samsung சாதனங்கள் இடமளிக்கின்றன.

2010 ஆம் ஆண்டில் Samsung நிறுவனம் தென்மேற்கு ஆசிய பிராந்தியத் தொழிற்பாடு கள் மூலம் குறிப்பிடத்தக்க வகையில் 60 சதவீத வளர்ச்சியை (3.5 பில்லியன் அமெரிக்க டெலர்கள்) எய்தி Samsung நிறுவனத்தின் வரலாற்றி லேயே மிகவும் வெற்றிகரமான பெறுபேறுகளாக அமையப்பெற்றிருந்த 135.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற சர்வதேச வருமா னங்களுக்கு பங்களிப்பு வழங்கி யிருந்தது.

பிராந்தியத்தில் LED மற்றும் LCD தொலைக் காட்சிகளை விநியோகிப்பதில் தற்போது முதல்நிலை வகிப்பவர் என்ற வகையில் ஏனைய முக்கிய பிரிவுகளான மொபைல் தொலைபேசிகள், பனிக்கட்டி உறையாத குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்கள் போன்றவற்றிலும் முன்னிலை வகிக்கும் சவாலை Samsung நிறுவனம் சந்தையில் ஏற்படுத்தியுள்ளது என்று கூறினார்.

# சுசூக்கி மாருதி வாடிக்கையாளர்களுக்கு புதிய விலைகளில் வரிச்சலுகை

மோட்டார் வாகனங்களுக்கான இறக்கு மதித் தீர்வை 2011 ஏப்ரல் 24ஆம் திகதி அதிகரிக்கப்பட்டமை, வாகனங்களைக் கொள்வனவு செய்ய உத்தேசித்திருந்த இலங்கையர் பலருக்கு ஒரு கசப்பான செய்தியும் பலத்த அடியுமாகும்.

இத்தீர்வை அதிகரிப்பு குறைந்த பெறுமதியுள்ள கார்களின் விலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால், சுசூக்கி மாருதியின் புதிய கவர்ச்சிகரமான வாகனங்களில் ஒன்றை வாங்குவதற்கு எண்ணியிருந்தவர்கள் ஏமாற்றமடைந்து கவலைப்பட்டனர்.

எனினும், அவர்களின் முகங்களில் மீண்டும் புன்னகையை வரவழைக்கக்கூடிய ஒரு நற்செய்தியை அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (AMW) இப்பொழுது வெளியிட்டுள்ளது. கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட அதிகரித்த தீர்வையின் ஒரு பகுதியை நிறுவனம் பொறுப்பேற்றுக்கொள்ளும் என்பதே இந்தச் செய்தியாகும்.

சமீபத்திய தீர்வை அதிகரிப்புக்கு முன்னர் சுசூக்கி மாருதி வாகனத்துக்கான கொள்வனவுக் கட்டளையைச் சமர்ப்பித்துவிட்டு, வாகனத்தின் விநியோகத்துக்காகக் காத்திருப்பவர்கள் கொள்விலையின் அதிகரிப்பில் ஒரு பகுதியை மட்டுமே செலுத்தவேண்டியிருக்கும். அதாவது, ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களுக்கான அதிகரித்த தீர்வையில் ஒரு கணிசமான தொகையை AMW பொறுப்பேற்றுக்கொள்ளும்.

2011 ஜூன் 15ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படும் புதிய கொள்வனவுக் கட்டளைகள் தொடர்பாகவும் விசேட சலுகை வழங்கப்படுமென AMW அறிவித்துள்ளது.

புதிய சுசூக்கி மாருதி வாகனங்கள் யாவும் அதிசக்திவாய்ந்த மற்றும் எரிபொருள் சிக்கனமான K தொடர் என்ஜின்களைக் கொண்டுள்ளன. உலகில் ஆகக் கூடுதலாக விற்பனையாகும் சிறிய கார்களான Alto மற்றும் Alto K10 என்பனவும் இந்த வாகனங்களுள் அடங்கும்.

1994ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்னேறி வரும் சுசூக்கி மாருதி நிறுவனத்தின் வாகனங்களுக்குப் பெரும் கிராக்கி நிலவுகின்றது. விற்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையில் 10 லட்சத்தை 2011 மார்ச் மாதம் தாண்டியதன் மூலம் சுசூக்கி மாருதி, உலகின் பிரபல கார் உற்பத்தி நிறுவனங்களின் பட்டியலில் பிரவேசித்துள்ளது.

எமது பிராந்தியத்தில் 10 இலட்சம் கார்களை விற்பனை செய்த முதலாவது நிறுவனம் என்ற பெருமையும் அதற்குக் கிடைத்துள்ளது.

# 2010இல் 16,000 பேருக்கு உதவியுள்ள செலிங்கோ

ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமை தாங்கும் நிறுவனமான செலிங்கோ லைப் 2010 இல் அமுல் செய்த கூட்டாண்மை சமூக பொறுப்புத் திட்டங்களின் கீழ் அமுல்படுத்திய சுகாதாரம் மற்றும் கல்வியோடு தொடர்புடைய பன்முக தொடர்த் திட்டங்களால் 16,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களின் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கம்பனிக்கே உரிய சிறப்புத் திட்டமான ''வைத்திய ஹமுவ'' (வைத்தியரைச் சந்திப்போம் ) வேலைத்திட்டத்தின் மூலம் ஏழாவது வருடகாலமாக தொடர்ந்து இடம்பெற்றது. இம்முறை மட்டக்களப்பு, திஸ்ஸமகாராம, அநுராதபுரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட 40 வைத்திய முகாம்கள் மூலம் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உட்பட 11,411 பேர் நன்மை அடைந்துள்ளனர். இலவச உடல் பரிசோதனை, மருத்துவ வசதி என்பன இங்கு வழங்கப்பட்டன. இந்த முகாம்களில் விரிவான மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்கு வைத்தியரின் அவதானங்கள் மற்றும் சிபாரிசுகள் உள்ளடங்கிய வைத்திய அறிக்கை ஒன்றும் வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாகக் கம்பனியின் இன்னொரு திட்டமான ''செனஹசக உதானய'' (பிறப்பை நேசிப்போம்) வேலைத் திட்டத்தின் மூலம் பிரசவத்திற்கு முந்திய மற்றும் பிந்திய சுகாதார பராமரிப்புகள் குறித்து 1,721 பேருக்கு அறிவூட்டப்பட்டது. ஒரு பிள்ளை பிறப்பதற்கு முன்பே ஒரு கர்ப்பிணித் தாயின் நலனும், சுகாதாரச் செயற்பாடும் அந்தக் குழந்தையின் மீது எந்தளவு தாக்கம் செலுத்துகின்றன என்பதை கர்ப்பிணித் தாய்மாருக்கு உணர்த்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். முடிவடைந்த நிதியாண்டில் செலிங்கோ லைப் 8 ''செனஹசக உதானய'' வேலைத் திட்டங்களை நடத்தியுள்ளது. இதனிடையே இரத்த பரிமாற்று சேவை நிலையத்தின் ஊடாக இந்த ஆண்டில் ஆயிரம் பைந்துக்கும் அதிகமான இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது. கம்பனி ஒழுங்கு செய்த 12 இரத்ததான நிகழ்வுகளின் மூலம் இந்த இரத்த சேகரிப்பு இடம்பெற்றது. பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேம்படுத்தும் திட்டத்தையும் கம்பனி தொடர்ந்து ஈடுபாட்டுடன் முன்னெடுத்து வருகின்றது. 2010 ஆம் ஆண்டில் கஹட்டகஸ்திஹிலிய ,யாழ்ப்பாணம், மொனராகலை, எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களில் உள்ள பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் 11 பாடசாலைகளை புனரமைப்பு செய்வதற்காக 4.1 மில்லியனுக்கும் அதிகமான ரூபாவை செலவிட்டுள்ளது.

10 வகுப்பறைகளைக் கட்டி கொடுத்தல் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதில் [illegible] வகுப்பறைகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்படும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் ஓர் ஆலயம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

மக்கள் சேவையில் பார்ப்போற்றத் தலை நிமிர்ந்து நிற்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் தன்னலமற்ற பணிகளைப் பற்றி விதந்து பேசாதவர்கள் யாருமே இல்லை. நாடளாவிய நீதியில் ஏற்பட்ட பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கெல்லாம் முகங்கொடுத்து முந்நிலைக்கு வந்துள்ளது.

இவற்றின் சூட்சுமம் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது.

அவர் ஒரு காரியத்தை நினைத்துவிட்டால் அது நிறைவேறும்வரை ஓயமாட்டார், விட்டுக் கொடுக்கவும் மாட்டார். அவரது சுபாவத்தில், வெற்றியில் ஆயுதங்களாக நான் கண்டது இயல்பான கனிவும் பணிவும் தான். அவரைச் சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பெற்றது யாழ்ப்பாணம் செய்த பெருந்தவம் என்றுதான் கூற வேண்டும்.

அடுத்து பாராட்டை அதிகம் பெற்றிருப்பவர்கள் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர்தான். அவர்கள்தான் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தாலும் அவர்களின் முயற்சிகள் மிகவும் கடினமானவையாகவே இருந்துள்ளன.விழா முடிந்து வீட்டுக்கு வந்துவிட்டாலும் அதன் தாக்கங்களில் இருந்து விடுபட இயலவில்லை. நான் பிறந்த இடம் இந்த உலகினில் நான் முதன் முதலில் கண் விழித்த பூமி எவ்வாறு இந்தப் பெருமையைத் தேடிக் கொண்டது என்பதை ஆராய வேண்டும் என்கின்ற அவா மேலிட்டது.


ஒரு நோயாளியாக அல்லது ஒரு நோயா ளியைப் பார்ப்பவராகப் பல தடவைகள் இந்த வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த நான் அன்றைய விழாவைத் தொடர்ந்து ஒருநாள் அதை ஆராயும் நோக்குடன் ஒரு புதிய கோணத்தில் எனது பார்வையைச் செலுத்தியபடி உள்ளே நுழைந்தேன். அன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் அதுவும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படும் நேரம்.

அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த நோயா ளர்களிடமும் சில தாதியர்களிடமும் சிற்றூழியர்களிடமும் பேசிக் கொண் டேன். வைத்தியசாலைக்குக் கிடைத்திருந்த விருது பற்றிப் பாராட்டினேன். அதைப் பெற அவர்கள் எடுத்துக் கொண்ட அடிமட்ட முயற் சிகள் பற்றி வினாவிக் கொண்டேன்.

அன்று நான் தர நிர்ணயப் போட்டியை நோக்கி அவர்கள் எடுத்துவைத்த பல அடிகள், படிப்படியான முன்னேற்றங்கள் பற்றியெல்லாம் ஆராய்ந்து அறிந்து கொண்டேன். வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் நடவடிக்கைகள் பற்றியும் அவர்களுடைய உதவி ஒத் தாசைகள் பற்றியும் கூடத் தெரிந்து கொண்டேன். தற்செயலாக அபிவிருத்திச் சபை உறுப்பினர் ஒருவரும் அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடன் இணைந்து கொண்டார்.

அவருடன் இணைந்து பல்வேறு விடுதிகளையும் செயற்பாடுகளையும் சுற்றிவர வாய்ப்புக் கிட்டியது. முக்கியமாக அவர்கள் வைத்தியசாலையின் பல்வேறு நடவடிக்கைகளை அன்றும் இன்றும் என்கின்ற பாணியில் எனக்கு ஆர்வமுடன் விளக்க முயன்று கொண்டிருந்தார்கள். சிற்றூழியர் முதல் வைத்திய அதிகாரிகள்வரை ஒவ்வொருவரும் முன்னேற்றம் பற்றியும் 5S பற்றியும் விளக்கமான அறிவைக் கொண்டிருந்ததை நான் கண்டேன்.

> பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக வெள்ளி விருது கிடைத்தமையை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.




வைத்தியசாலையின் முகப்புத் தோற்றம் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. பார்த்தாலே ஒரு நம்பிக்கை மனதினில் துளிர் விடுகிறது. அதுவே வரும் நோயாளியை அரைப் பங்கு தெம்பு பெற வைத்து விடும். தம்பப்பிள்ளையார் போலும், வாசலில் வலது பக்கமாக ஒரு நம்பிக்கை விக்கிரகம் காட்சி தருகிறது.

வாகனங்களில் அல்லது அம்புலன்ஸ்களில் வருகின்ற நோயாளர்கள் மழை, வெயில் படாமல் வசதியாக மாற்றப்பட ஏதுவான பெரிய மண்டபம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அகலமான நுழைவாயில் பலரும் ஒரே வேளையில் தங்கு தடையின்றி உள்ளேயோ, வெளியேயோ போகவர வாய்ப்பாக அமைந்துள்ளது.

உள் நுழைய முன்னரே வைத்தியசாலையின் மாதிரி வரைபடம் கண்ணில் படுகிறது. பல கட்டடத் தொகுதிகளுக்குள் அலுவலாகச் சென்றுவிட்டு வெளியேற வழி தெரியாமல் சுற்றிய அனுபவங்கள் எனக்கும் உண்டு. தெளிவாக வைத்தியசாலையின் பாதைகளும் தொகுதிகளும் பாமர மக்களுக்கும் சுலபமாக விளங்கத்தக்க வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மக்களின் அலைச்சலை கணிசமாக மீதப்படுத்தும்.

சற்றே திரும்பினால் கண்ணில்படுவது அவசர சிகிச்சைப் பிரிவுதான். இக்கட்டான நிலைமையில் வைத்தியசாலைக்கு வந்துவிட்டால் சற்றும் தாமதமின்றி நோயாளி உடனடியாகக் கவனிக்கப்பட இது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வலது புறமாக வரவேற்புக் கருமபீடமும் வெளி நோயாளர்கள் காத்திருக்கும் இடமும் கண்ணில் தெரிகின்றன. வெளிநோயாளர் பிரிவில் தரமான இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே எவருக்கும் அசௌகரிய உணர்வு ஏற்பட வாய்ப்பு இல்லை. காத்திருக்கும் நோயாளர்களுக்கு தொலைக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமை மேலும் ஒரு சிறப்பு அம்சமாகும்.

தொலைக்காட்சியில் சுகாதாரத் தரத்தைப் பற்றி மக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் அறிவு புகட்டும் பயனுள்ள விடயங்கள் காட்டப்படுகின்றன. நோயாளர் தங்கும் விடுதிகளிலும் தொலைக் காட்சி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**மு.சிவ்நேசன்**

(தொடரும்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் இராமநாதன் லோகநாதன்

தோற்றம் : 1960.05.24

மறைவு 2011.05.18

(செயலாளர் , காரைநகர் பிரதேச சபை )



எமது குடும்பக் குலவிளக்கு இராமநாதன் லோகநாதனின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் இறுதி மரணச்சடங்கில் கலந்து அஞ்சலி உரை நிகழ்த்திய மதிப்புக்குரிய யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்களுக்கும் உள்ளூராட்சி, நகரசபை, பிரதேச சபை பிரதேச செயலாளர்களுக்கும் குறிப்பாக வவுனியா நகரசபை, செயலாளர், உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்ட அனைத்து உள்ளங்களுக்கும் மலர்வளையம் சார்த்தியோருக்கும் இணையத்தளம், தொலைபேசி, தந்தி, பத்திரிகை, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (2011.06.15) புதன்கிழமை காலை 6 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் கங்காதரணித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மு.ப 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி லோகநாதன் ரதீஸ்வரி,குடும்பத்தினர்.
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

தொ.பே: 021 2130887

(40-19-21)(1938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிங்குராணை சீனித் தொழிற்சாலையின் காணிப் பிரச்சினைக்கு ஒரு மாதத்தில் தீர்வு

## அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூன் 14

ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட காணிப் பிரச்சினைக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்படி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை நிர்வாகத்துக்கும், அரசுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் நீண்டகாலமாக காணிப் பிரச்சினை இருந்து வருகிறது. இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ரீ. ஹஸன் அலி மற்றும் எம். எஸ்.எம். அஸ்லம் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

சீனித் தொழிற்சாலை முன்பு மூடப்பட்டதன் பின்னர் சீனிக் கூட்டுத்தாபனத்தால் பாவனைக்குட்படுத்தப்படாத காணிகளை அவற்றின் சொந்தக்காரர்களுக்கு மீளளிக்கவும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நஷ்டஈடுகளை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நீண்டகாலமாக அம்பாறை அரச அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று ஹசன் அலி எடுத்துரைத்தார். இதனை அங்கு பிரசன்னமாகியிருந்த சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டனர்.

நீதிமன்றம் சென்று தங்களது காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வாதாடி சாதகமான தீர்ப்புகளைப் பெற்றுக் கொண்ட காணிச் சொந்தக்காரர்களும் கூட வேண்டுமென்றே உயர் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவது வேதனையைத் தருகின்றது என்று அவர் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் தயாசிறித்த திஸ்ஸேரா, ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட சகல காணிப் பிரச்சினைகளையும் இனம் கண்டு உரிய நிவாரணத்தை விவசாயிகளுக்கு வழங்கும் நோக்குடன் ஒரு குழுவை அமைத்து செயற்பட வேண்டும் என அம்பாறை அரச அதிபருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் இதுவரை ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பது பற்றி உடனடியாகத் தனக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலாளரைப் பணித்தார்.

இந்தக் குழுவை ஒரு மாத காலத்துக்குள் அமைத்து உடனடியாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கினார். (சி)

# கோட்டக்கல்வி அதிகாரியாக சுபைர் நியமனம்

மட்டக்களப்பு,ஜூன்14

காத்தான்குடி கல்வி கோட்டத்திற்கான கோட்டக் கல்வி அதிகாரியாக காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலயத்தின் அதிபர் எஸ். எம்.எம்.சுபைர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக காத்தான்குடி கல்வி கோட்டத்துக்கான கோட்டக்கல்வி அதிகாரியொருவர் நியமிக்கப்படாமல் இருந்து வந்த நிலையிலேயே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி கோட்டகல்வி அதிகாரியொருவரை மிக விரைவாக நியமிக்குமாறு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கட்டுநாயக்க விமான நிலையக் கழிவறைக்குள் பெருந்தொகை வெளிநாட்டு நாணயத் தாள்கள்

## சுத்திகரிப்பாளர் கைது

கொழும்பு, ஜூன் 14

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள கழிவறையொன்றிலிருந்து இலங்கைப் பெறுமதியின்படி சுமார் 71 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயத்தாள்கள் அடங்கிய பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விமான நிலையத்தின் சுத்திகரிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யூரோ, யென், ஆஸ்திரேலிய டொலர் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்கள் மீட்கப்பட்டன .

அதன் இலங்கைப் பெறுமதி சுமார் 71 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்றும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் நிறுவனமொன்றின் சுத்திகரிப்புப் பிரிவில் கடமையாற்றும் சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

# காசல்ரீயில் எண்ணெய்க் கழிவு ஏராளமான மீன்கள் இறந்துவிட்டன!

கொழும்பு, ஜூன் 14

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து எண்ணெய்க்கழிவு திருப்பிவிடப்பட்டதால் லட்சக்கணக்கான மீன்கள் இறந்துபோயுள்ளன.

எனவே, இன்னும் இரண்டு வருடங்களில் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் உள்ள மீன்கள் பேரழிவை சந்திக்கும் என நுவரெலியா மாவட்ட நீர்வாழ் உயிரினங்கள் திட்டத்தின் அதிகாரி சந்தன ஜயகுமார தெரிவித்தார்.

மத்திய மாகாண சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினரும், நீர்வாழ் உயிரினங்கள் திட்ட அதிகாரிகளும் ஒன்றிணைந்து காசல்ரீ நீர்த்தேக்கத்தில் கடந்த வியாழக்கிழமை பரிசோதனை நடத்தியபோதே மீன்கள் இறந்தமைக்கான காரணம் கண்டறியப்பட்டது. நுவரெலியா மாவட்டச் செய லாளர் டீ.பீ.ஜீ.குமாரசிரியின் விசேட பணிப்பின் பேரிலேயே இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

தற்சமயம் சுமார் இரண்டு ஏக்கர் விஸ்தீரணத்துக்கு எண்ணெய்ப் படலம் பரவியுள்ளது. தடாகத்தின் மேற்குக் கரையை நோக்கி வீசுகின்ற காற்றால் கிழக்குக் கரையில் எண்ணெய்ப் படிவம் ஒதுங்குகிறது.

இவ்வாறு நீரின்மீது தட்டுப்போல படியும் எண்ணெய் களனி கங்கையில் கலக்கும் அபாயம் தோன்றியுள்ளது என மத்திய மாகாணத்தின் சுற்றாடல் அதிகார சபையின் நுவரெலியா பிரதேச அதிகாரி ஆர்.எச்.கே.பண்டார தெரிவித்தார். (ச-5)

# சட்டவிரோத மதுபான தயாரிப்பு; சீனப் பிரஜை கைது

கொழும்பு,ஜூன்14

புசல்லாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசமொன்றில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சீன நாட்டு பிரஜை ஒருவரை புசல்லாவை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சீனாவிலிருந்த கொண்டுவரப்பட்டுள்ள கருவிகள் மூலமே சட்டவிரோதமாக மதுபான தயாரிப்பில் இவர் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புசல்லாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல்
வளர்ச்சியடையக்கூடிய
No.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள்
15.06.2011 விநியோகிக்கப்படும்.

* றாஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* துர்க்கா பாம்- சுன்னாகம். (0779346599)
* ஜென்ஸி பாம்- பருத்தித்துறை. (0773541771)
* P. ரவி- தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* கோல்டன் பாம்- கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 0776090926.

## காணி விற்பனைக்கு

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு அண்மையாக ஏழு பரப்பு நிலம் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல:
0213206316, 0750418267

## தவறிவிட்டது

கைதடி மத்தி, வளர்மதி வீதி, கைதடி, கந்தன் மோகனதாஸ் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அட்டை இல. (763493342V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை என்பன கடந்த (08.06.2011) புதன்கிழமை திருநெல்வேலிச் சந்தைக்குள் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.
தொடர்புகளுக்கு: 0779877301

## வேலையாள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை. விருப்பம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
தொடர்பு: வீனஸ் பாம்
(பழைய நல்லூர் A.G.A அலுவலகம் முன்பாக)
பலாலி வீதி, திருநெல்வேலி.

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.
06, கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ்.றோட்.
தொ.பே: 0212228680, 0775925088

## வீடு விற்பனைக்கு

புதிய செம்மணி வீதி, வேளா தோப்பில் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777040214

## German, Swiss மொழிகள்

German, Swiss மொழிகள் தமிழ்மொழி
[illegible]
தொடர்புக்கு: 10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823

## நீங்காத நினைவில்
## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் அறிமுகம்:
26.03.1964

தெய்வத்துள் சங்கமம்:
07.06.1990

திதி: சதுர்த்தசி (14.06.2011)

**செல்வி நர்மதா கனகரட்ணராஜா**
(நடன ஆசிரியை,
யா/மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை)

எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே!!
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!!
குடும்பத்தின் ஒளிவிளக்கே எங்கள் குடும்பத்தில்
முதல் சொத்தாகப் பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில் விட்டு விட்டு
மீளாத் துயில் கொண்ட எம் அன்புச் செல்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
'அம்மா' என்று சொல்ல உன் உயிர் இல்லையம்மா
ஆண்டுகள் இருபத்தொன்று சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, மாமாமார்,
மாமிமார், சித்திமார்,
சித்தப்பா, தம்பி,
தங்கைமார்.
சந்தையடி, மானிப்பாய்.

(48,21,22)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
01.01.1954

இறப்பு:
07.06.1993

**திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி**

திதி : சதுர்த்தசி (14.06.2011)

பதினெண் ஆண்டுகள் சென்றாலும்
உயிரோடு ஒட்டியிருந்த உந்தன் நினைவுகள்
ஏக்கங்களின் மூச்சுக்களால் தினமும் வெந்து நிற்கின்றன
சாய்ந்து போனவை மரங்கள் அல்ல மனிதம்
சாவுக்கு வழிசமைக்க ஒன்றில்லை ஒன்றோ?

நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,
அம்பன்,குடத்தனை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க உலக நாடுகளில் ஆதரவு திரட்ட வேண்டும்

## முதல்வரிடம் பழ.நெடுமாறன் வேண்டுகோள்



தஞ்சாவூர்,ஜூன்14
இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்புக் கொள்கைக்கு எதிராக அந்த நாட்டின் மீது பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உலக நாடுகளிடையே இந்தியா ஆதரவு திரட்ட வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை மேற்கொள்வதன் மூலம் இலங்கையில் வாழும் தமிழர்களும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்ற கருத்தும், அதேபோல், சீனா இலங்கைக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் என்ற கருத்தும் ஏற்கத்தக்கவையல்ல.

அமெரிக்க அரசின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக தென்னாபிரிக்க ஐ.நா பேரவையில் இந்தியா கொண்டு வந்த பொருளாதாரத் தடை தீர்மானம் பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையினராக வாழும் கறுப்பின மக்களுக்கும், இந்தியர்களுக்கும் அதனால் பாதகம் ஏற்படும் என்று யாரும் வாதாடவில்லை. அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்கு நாடுகள் சில இந்தத் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டன. எனினும், பெரும்பாலான உலக நாடுகளின் ஆதரவு நடவடிக்கையின் விளைவாக தென்னாபிரிக்க அரசு இறுதியில் பணிய நேர்ந்தது.

எனவே, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க உலக நாடுகளின் ஆதரவை இந்தியா திரட்டவேண்டும் என பதைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் கூறியுள்ளார். (வ)

# இலங்கை இனப்படுகொலையில் காங்கிரஸ் கட்சிக்கும் பங்குண்டு



சென்னை,ஜூன் 14
இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவால் மேற் கொள்ளப்பட்ட இனப் படுகொலை குற்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் பங்கு உண்டு என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு அவர் பேசுகையில்:

ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி என்று சொல்கின்றனர். ஆனால் அவர் போர்க் குற்றவாளி இல்லை. இனக்கொலை செய்தவர். அவருடைய குற்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் பங்கும் உண்டு. அதனுடன் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்தவர் களுக்கும் உண்டு.

இந்திரா காந்தி தொலைநோக்குப் பார்வையோடு செயற்பட்டவர். ஆனால் சோனியா காந்தி அப்படிப்பட்டவராக இல்லை. சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கியது முதல் விமானப் பாதைகள் அமைத்துக் கொடுத்தமை வரை எல்லாமே இந்திய அரசுதான்.

சிவசங்கர் மேனனைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கைக்குச் செல்ல உள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. யார் சென்றாலும் ராஜபக்ஷவிடமிருந்து தமிழர்களுக்கு உரிய அதிகாரத்தை எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு அவர் பேசினார். (வ)

# சமச்சீர் கல்வியை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஜெயலலிதாவின் போஸ்டர்கள் எரிப்பு



திருச்சி,ஜூன் 14
திருச்சி மக்கள் கலை இலக்கிய கழகம் சமச்சீர் கல்வியை இந்த வருடமே அமுல்படுத்த வேண்டும். அதனை விடுத்து மக்கள் நலனை மீறி சுய நலத்திற்காக உச்சநீதிமன்றம் செல்லும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உருவப் பொம்மை எரிப்பு திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே நடைபெறும் என்று அறிவித்திருந்தது.

அதனடிப்படையில் அந்தக் கழகத்தைச் சேர்ந்த 3 பேர் திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்துக்கு அருகில் நேற்று ஜெயலலிதாவின் உருவபொம்மையை எடுத்து வந்தபோது பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

இதனைக் கண்டித்து திருச்சி மத்திய பேருந்துநிலையத்தில் உள்ள பெரியார் சிலைக்கு அருகே மக்கள் இலக்கிய கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மாவட்ட தலைவர் சீனிவாசன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சமச்சீர் கல்வியை இந்த ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். சமச்சீர் கல்வியைத் தடை செய்ய உச்சநீதிமன்றம் சென்ற தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது முதலமைச்சர் ஜெயலலிதாவின் போஸ்டர்களுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தீ வைத்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 10 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதனையடுத்து அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது. (வ)

# ரஹ்மானின் ஒஸ்கார் விருது சர்ச்சைக்கு ஒஸ்கார் குழு பதில்



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு ஸ்லம்டாக் மில்லியனர் படத்திற்காக வழங்கப்பட்ட 2 ஒஸ்கார் விருதுகளும் அவர் பணம் கொடுத்து வாங்கியதாக இசையமைப்பாளர் இஸ்மாயில் தர்பாரின் குற்றச்சாட்டை ஒஸ்கார் குழு மறுத்துள்ளது.

இது குறித்து அந்த குழு கூறியதாவது:

ஒஸ்கார் விருதுக்கு தவறான நபரை குழு தேர்ந்தெடுத்துள்ளது என்று ஒருவர் குறை கூறுவது புதிதான விடயமல்ல. ஆனால் ஒருவர் தவறான வழியில் விருதை வாங்கியுள்ளார் என்று கூறுவது ஆதாரமற்றது, நம்ப முடியாதது.

இஸ்மாயில் தர்பார் பற்றி எதுவுமே எமக்குத் தெரியாது. அவர் எந்த ஆதாரத்தை வைத்து ரஹ்மான் லஞ்சம் கொடுத்து விருதை வாங்கியதாகக் கூறுகிறார் என்று தெரியவில்லை என்று அகாடமி பத்திரிக்கையாளர் டெனி மெலிடோனியன் தெரிவித்தார். கடந்த வாரம் இந்தக் குற்றச்சாட்டு எழுந்தபோது அதை கேலியான விடயம் என்று எடுத்துக் கொண்டதால் அதிகாரபூர்வமாக பதிலளிக்கவில்லை என்றார்.

இதுகுறித்து ஒஸ்கார் குழு மேலும் கூறுகையில்:

வாக்கெடுப்பு முறையில் தான் விருது வழங்கப்படுகிறது. அகாடமி அதிகாரி யாராவது குளறுபடி செய்ய வேண்டும் என்று நினைத்தால் கூட முடியாத அளவுக்கு பாதுகாப்பாகத் தான் நடத்தப்படுகிறது. பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் அலுவலகம் தான் இசைப் பிரிவுக்கான வாக்கெடுப்பைக் கவனித்து வருகிறது என்று தர்பாருக்குத் தெரியாது.

விருது பெறுபவர்களின் பெயர்கள் இருக்கும் கவர்களை 2 அதிகாரிகள் தயார் செய்வார்கள். மேடையில் அந்தக் கவர்களைத் திறக்கும் வரை அது அவர்கள் பாதுகாப்பில் தான் இருக்கும் என்று அவர் கூறினார்.

# இணையத்தில் தவறான இந்திய வரைபடம் அவுஸ்திரேலிய அரசு மீது கடும் கண்டனம்

இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகளான அருணாச்சல பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் இல்லாத வரைபடம் ஒன்று அவுஸ்திரேலிய அரசின் இணையத் தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பாக அந்த நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தியர்களுக்கு எதிரான இன ரீதியான வன்முறை உலகின் எந்தப் பகுதியையும் விட அவுஸ்திரேலியாவில் தான் அதிகரித்துள்ளது. இந்தியர்கள் என்றில் ... வரைபடம் இந்தியாவை வேண்டுமென்றே அவமதிக்கும் வகையில் வெளியிடப்படுத்து வதை ஒரு கலசாரமாகவே கொண்டுள்ளனர் அவுஸ்திரேலியர்கள்.

இதற்கு அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய சமுதாயத்தினர் கடும் கண்டனம் தெரிவித்து அவுஸ்திரேலிய அரசுக்கும் இதுதொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து டில்லியில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் வெளியிட்ட ஒரு அறிக்கையில், இந்த வரைபடம் தவறானது. அதை இணையத்தளத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விளக்கியுள்ளது. (வ)

# கனிமொழியின் பிணை மனு விசாரணை ஒத்திவைப்பு

டில்லி,ஜூன்14
2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பான வழக்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பி., கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குனர் சரத்குமார் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கைதாகி திகார் சிறையில் உள்ளனர். அவர்கள் பிணை கோரி டில்லி மேல் நீதிமன்றத்தில் கடந்த 23 ஆம் திகதி மனு தாக்கல் செய்தனர்.

பிணை மனுவை நிராகரிப்பு செய்து கடந்த 8ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 10 ஆம் திகதி கனிமொழி மற்றும் சரத்குமார் சார்பாக உயர் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது அந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ)

# தனியார் பாடசாலைகளுக்கு கட்டணங்கள் அறவீடு

தனியார் பாடசாலைகளுக்கு திருத்தப்பட்ட கல்விக் கட்டணத்தை நீதிபதி ரவிராஜா பாண்டியன்குழு வெளியிட்டது. இதனையடுத்து 6400 பாடசாலைகளுக்கு கட்டண விவரம் மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழக அரசின் அங்கீகாரம் பெற்ற அனைத்துப் பாடசாலைகளுக்கும் மேற்படி கட்டணம் பொருந்தும் எனவும் அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்களுக்கு ஏற்கனவே அறிவித்த கட்டண விகிதம் பொருந்தாது என்றும் அங்கீகாரம் பெற்ற பின்னர் புதிய கட்டணம் பொருந்தும் எனவும் அந்தக் குழு அறிவித்துள்ளது.

# சிங்கள மொழிப் படத்தில் நடிக்க பூஜாவுக்கு எதிர்ப்பு

சிங்கள மொழியில் தயாராகும் 'குசபபா' என்ற படத்தில் நடிக்க நடிகை பூஜா ஒப்பந்தமாகி படப்பிடிப்புக்காக இலங்கை வரவுள்ள நிலையில் சிங்கள மொழியில் பூஜா நடிப்பதற்கு இந்து மக்கள் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளிட்டுள்ளன.

அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி உள்ளதாவது:

இலங்கையில் ஈழத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கானோர் கொன்று அழிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அந்த நாட்டுக்கு நடிகர், நடிகைகள் போவதையே தவிர்க்கின்றனர்.

இந்த நிலையில் அங்கு தயாராகும் சிங்கள மொழிப் படத்தில் நடிக்கப் போவதாக அறிவித்து இருப்பது தமிழர்கள் மனதை புண்படுத்துவதாக உள்ளது. சிங்கள மொழி படத்தில் பூஜா நடிக்கக் கூடாது. அதற்கும் மீறி நடித்தால் தமிழ் படங்களில் அவரை ஒப்பந்தம் செய்வதை எதிர்ப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவறிழைத்தவர்களை இனங்காண்பது அல்லது தண்டிப்பது குறித்து அரசுக்கு கவலை இல்லை

## பொறுப்புக்கூறல் பற்றிய அரசின் கருத்து சர்வதேச தரங்களுக்கு ஒத்ததாக இல்லை

பொறுப்புக்கூறலுக்குப் பொருத்தமானதொரு சுற்றாடலை ஏற்படுத்துவதற்கு வன்முறை மற்றும் அதனைத் தொடரும் அச்சுறுத்தும் சூழல் அகற்றப்படவேண்டும். பல தசாப்தங்களாக, மற்றும் இன்றும் கூடத் தொடரும், வலுக்கட்டாயமாகக் காணாமற் போதல்கள் பற்றிய இலங்கையின் தரக்குறைவான கடந்தகால நடத்தை பற்றி சர்வதேச நிறுவனங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளதோடு, அது தொடர்பாக உடனடி மற்றும் பெரிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

### 5. சர்வதேச தரங்களின் அடிப்படையிலான பொறுப்புக்கூறல்

429.சர்வதேச தரங்களுக்கேற்ப பொறுப்புக்கூறல் பெரிய குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்வது மற்றும் சட்ட நடவடிக்கை எடுப்பது ஆகியவற்றை உள்ளடக்குவதோடு அதற்கு அப்பாலும் செல்கிறது. மனித உரிமைகள் மற்றும் மதிப்பு ஆகியவற்றின் மீறல்களுக்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் அரசியல் சட்ட மற்றும் நல்லொழுக்கப் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்கான பரந்தொரு செயற்பாடாக அது உள்ளது. சகல மனித உரிமைகளையும் மதித்தல் மற்றும் சமூகத்தின் சகல உறுப்பினர்களினதும் முழுமையான பிரஜாவுரிமையை திருப்பிக் கொடுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு நிலைத்தகவுள்ள சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்ட மேலும் பெரியதொரு பேராற்றல் மிக்கவொன்றுக்கு இன்றியமையாததாகப் பொறுப்புக்கூறல் உள்ளது. சர்வதேச தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இயைவாக, உண்மை, நீதி மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடு ஆகியவற்றை அடைவதைப் பொறுப்புக்கூறல் கொண்டுள்ளது. அதன் பிரஜைகளின் உரிமைகள் மீறப்பட்டிருந்தால், அதற்காக உத்தியோகபூர்வமான அதன் பாத்திரத்தையும் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்வதையும் பொறுப்புக்கூறல் தேவைப்படுத்துகிறது. ஐ.நா. கொள்கைக்கேற்ப, 'எல்லோருக்கும் ஒரே அளவே சரியானது' என்ற வாய்ப்பாட்டை அல்லது பொறுப்புக்கூறலுக்கு வெளிநாட்டு மாதிரிகளை இறக்குமதி செய்வதை குழு பரிந்துரைக்காது; மாறாக பரந்த மக்கள் பங்கேற்பு, தேவைகள் மற்றும் அபிலாஷைகள் ஆகியவற்றைக் கொண்ட தேசிய மதிப்பீடுகளின் அடிப்படையில் விளக்கப்படும்பொறுப்புக்கூறல் செயற்பாடுகளைஅது இனங்காண்கிறது. இருந்தபோதிலும், ஏதும் தேசிய செயற்பாடு சர்வதேச தரங்களுக்கு ஏற்றதா கவே இருக்க வேண்டும். (144)

430. பொறுப்புக்கூறல் பற்றிய அதன் ஆலோசனையைத் தொகுப்பதில், இலங்கையின் நீண்ட கால யுத்தத்தின் போது இரு தரப்பினரிடமும் சிக்கி துன்பத்தை அனுபவித்த ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டோரின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு குழு முன்னுரிமை வழங்கியுள்ளது. யுத்தங்களின் போது பொதுவாக அதிக துன்பத்தையும் இழப்புகளையும் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயோதிபர்களே அனுபவிக்க நேர்கிறது என்பதோடு குறிப்பாக இறுதிக்கட்டங்களின்- போது இலங்கை அதற்கு விதிவிலக்கல்ல.

### 6. பொறுப்புக்கூறல் பற்றிய அரசின் மனவுரு

431. மீளளிக்கும் நீதிக்கு அழுத்தம் கொடுத்து, மீளிணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுக்கிடையே ஒரு சமநிலையை எய்த அது நாடுகிறது என அரசு கூறியுள்ளது. மீளளிக்கும் மற்றும் தண்டனை வழங்கும் நீதி ஆகியவற்றுக்கிடையிலான தெரிவை வலியுறுத்துவது தவறான இரு பிரிவுகளை முன்வைப்பதாகவுள்ளது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி -40**

இரண்டுமே தேவையானவையாகும். மேலும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு மீது கவனம்செலுத்தும் பாதிக்கப்பட்டோரை மையமாகக்கொண்ட உண்மையான பொறுப்புக் கூறலுக்குமாறாக தெளிவற்ற முன்னைய அரசுகளின் கொள்கைகள் காரணமான அரசியல் பொறுப்பு மற்றும் பயங்கரவாதத்தில் இருந்து தம் பிரஜைகளைப் பாதுகாக்கத் தவறியமை என்ற கருத்தை அது முன்வைப்பதால் அரசின் மீளளிக்கும் நீதி பற்றிய கருத்து குறைபாடுள்ளதாகவே இருக்கிறது என்பது குழுவின் கருத்தாகும்.

432. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களைக் செயற்படுத்தல் அல்லது அதன் பின்னரான அதன் தீர்மானங்கள் மற்றும் நடத்தை பற்றியதொரு மற்றும் அதன் விளைவாக நேர்ந்திருக்கக் கூடிய சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் பற்றிய பரிசீலனையை அரசின் பொறுப்புக்கூறலுக்கான அணுகுமுறை கருதவில்லை. தவறுக்குப் பொறுப்பானவர்களை இனங்காண்பதையோ அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதையோ அது எதிர்பார்க்கவில்லை. இராணுவத்தினர் மற்றும் காவல் துறையினரின் அளவு கடந்த நடவடிக்கைகள் நேர்ந்திருக்கலாம் என்பதையும் சில வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், இவ்வாறான எந்தவொரு விடயமும் அரசு நடந்து கொண்ட விதம் பற்றி இந்த அறிக்கையில் உள்ள பெரிய குற்றச்சாட்டுக்களுக்கு அவை நேரிடையாக உள்ளனவா என்பது தெளிவற்றதாக உள்ளது. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் பொறுப்புப் பற்றி குறுகிய அளவில் அரசு கவனம் செலுத்தி, அவர்களில் அநேகமானவர்களுக்கு புனர்வாழ்வைத் தேர்ந்தெடுத்து 'கடும் போக்குடையவர்களுக்கு 'மீளளிப்பு நீதியின் மாதிரியாக இலேசான தண்டனையை விதிக்கிறது. எனவே, பொறுப்புக்கூறல் பற்றிய அரசின் கருத்து சர்வதேச தரங்களுக்கு ஒத்ததாக இல்லை எனக் குழு தீர்மானித் துள்ளது. இரு தரப்பினரும் புரிந்த குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள் பற்றி அரசு நடவடிக்கை எடுத்து யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமை மற்றும் மரியாதையை அதன் பொறுப்புக் கூறல் அணுகுமுறையின் மையமாகக் கொள்ளாதவரை, அதன் நடவடிக்கைகள் சர்வதேச எதிர்பார்ப்புக்களை விட மிகத் தாழ்வாகவே இருக்கும்.

*(வளரும்)*

---

# அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயம் (குருக்கட்டு)

## தேர்த்திருவிழாச் சிறப்புமலர் – 14.06.2011





### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

ஆலயம் என்பது ஆன்மாக் கள் லயிக்கும் இடமாகும். கோயி லில்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது முதுவாக்கு. ஆதலினால் எங்கெங்கெல்லாம் இறைசக்தி இருந்தாலும் நாம் எல்லோரும் ஒன்று கூடி சமத்துவ வழிபாடு செய்ய ஆலயமே சிறந்த இடமாகும்.

அந்த வகையில் பருத்தித்துறை, அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்று வருகின்ற மஹோற்சவ விழாவின் தேர் உற்சவம் இன்று எம்பெருமானின் பெரும் கருணையாலே மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்த உற்சவத்தின் நற்பலன்களெல்லாம் எல்லோருக்கும் கிடைத்து எல்லோரும் சீர்பெற்று வாழ விநாயகப் பெரு மானை பிரார்த்திக்கின்றேன்.

சிவாகம கிரியா பூசணம் சிவஸ்ரீ மா.குகனேச சர்மா
ஆலய பிரதம குரு (அல்லாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயம்)

### மகோற்சவ கால பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



சகல வளங்களும் பொழிந்து விளங்கும் இந்த இலங்கா புரியிலே வடபால் பருத்தித்துறை பகுதியிலே அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகப் பெருமானுக்கு வைகாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு நடைபெற்று வருகின்ற மகோற்சவ விழாவிலே இன்று தேர் உற்சவம் மிகவும் விமர்சையாக நடைபெறுகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களையும் மனிதர்களிடம் இருந்து அழித்து ஞானத்தை உணர்த்துகின்ற இந்த தேர் உற்சவத்தினுடைய எல்லா விதமான நற்பலன்களும், எல்லோருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் புரியவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

ஆகம கிரியா பாவனர்
சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக் குருக்கள்
(மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம்)

### தேர் உபயகாரர் ஆசிச்செய்தி



எமது முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயத்தின் திருப்பணி வேலைகள் நடைபெற்று 1988 இல் கும்பாஷேகம் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வருடாந்த உற்சவத்தின் போது என் மனதில் சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு விரைவாக வீதி வலம் வரவேண்டும் என்ற ஆதங்கம் மேலிட்டதனால், எனது குடும்பத்தவரின் உந்துதல் காரணமாகவும் 1994ஆம் ஆண்டு சித்திரத் தேர் நிர்மாணித்து தர அரசடி விநாயகர் அருள் பாலித்தார். இந்தச் சித்திரதேரானது வருடாவருடம் புதுப் பொலிவுடன் காட்சி தருவதற்கு இப்பணியினை நிறைவேற்ற காரணியாக இருந்த எல்லாம் வல்ல அரசடி விநாயகனை பிரார்த்தித்து, தேர்த் திருவிழா நன்னாளில் அடியவர்கள் குறை நீங்க தேரேறி அருள் புரிய வேண்டுகின்றேன்.

க.கதிரவேல் (பவளம்), தேர் உபயகாரர்.

### அருள்புரிவாய் அல்வாய் அரசடி விநாயகனே



வடமராட்சியின் வடக்கே அல்வாய் வடக்கு எனும் கிராமத்தில் அரசடி விநாயகன் வீற்றிருந்து எம்மூர் மக்களையும் அயலூர் மக்களையும் அருள் பாலித்து வருகின்றார்.

எமது சமயத்தில் எந்தவொரு நற்காரியங்களையும் பிள்ளையார் சுழி போட்டு விநாயகனை வணங்கி ஆரம்பிப்பது வழமை. இவ்வழமையானது எமது நற்காரியங்கள் யாவும் எவ்வித தடையுமின்றி செவ்வனே நிறைவு பெற வழிகோலும் என்பது திண்ணம். எமது ஆலயத்தின் பரிபாலன சபையானது 03.01.1941ஆம் ஆண்டு பிள்ளையார் சுழி போடப்பட்டு எமது முன்னோரால் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி திகதியிலிருந்து இன்று வரையான பரிபாலன சபையின் கூட்ட அறிக்கைகள், ஆவணங்கள், பாதுகாக்கப்பட்டு வருகின்றமை எமது ஆலயத்தின் பெருமைகளில் ஒன்று.

இந்த ஆவணங்களினூடாக எமது ஆலயத்தின் கடந்த எழுபத்தொரு ஆண்டு கால வரலாறு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவற்றினூடாக நாம் பல தரவுகளையும் பெறக்கூடியதாக உள்ளது. எமது ஆலயமானது குருக்கட்டுப் பிள்ளையார் எனும் பெயருடன் 1790ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எமது முன்னோர்களின் சமயப்பற்றும் விடாமுயற்சியும், மடாலயமாக இருந்த எமது ஆலயத்தினை, பொழிகற்களால் கர்ப்பக் கிருகம், முருகன் ஆலயம் என்பவற்றுடன் பரிவார மூர்த்திகளான அம்மன், வைரவர், முருகன், சண்டேஸ்வரர் ஆலயங்களும் நிர்மாணிக்கப்பட்டு 1988ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து லக்சுமி கணபதி, சந்தான கோபாலர், நவக்கிரக மண்டபம் ஆகிய நிர்மாணப் பணிகளுடன் சகல பரிவார மூர்த்திகளின் தூபி வேலைகளும் இந்திய சிற்ப ஆச்சாரியர்களினால் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு, 2006ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேக நிகழ்வினை கண்டது. எமது வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னோர்கள், ஆலய அங்கத்தவர்கள் புலம்பெயர் அங்கத்தவர்கள் (குறிப்பாக சுவிஸ், லண்டன்) ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது ஆலய மஹோற்சவமானது 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் தேர்த்திருவிழாவின் போது அலங்கரிக்கப்பட்ட கட்டுத் தேரிலேயே விநாயகர் வலம் வந்தார். தேர்திரு விழா தலைமை உபயகாரரான திரு.க.கதிரவேல் (பவளம்) அவர்களின் தலைமையில் அவரும் அவர் சார்ந்த குடும்பங்களின் சமயப் பற்றும், விநாயகர் மேல் கொண்ட பக்தியும் மேலோங்கி நின்றதன் நிமித்தம் அடுத்த வருடமே 1994ஆம் ஆண்டு சித்திரத் தேரினை திரு க.கதிரவேல் நிர்மாணம் செய்ததன் பேறாக மஹோற்சவத்தின் போது எம் பெருமான் சித்திரத் தேரில் பவனி வந்த காட்சியானது அடியார்கள் அனைவரையும் பரவசமூட்டியது. இச்சித்திரதேரானது திரு க.கதிரவேல் அவர்களால் மேன்மேலும் வருடாவருடம் மெருகூட்டப்பட்டுவருவது தேர் உற்சவம் சிறப்புமிக்கதாக அமைய வழிகோலி நிற்கின்றது. ஐந்தொழில் தத்துவத்தினை விளக்கும் இத்தேர் உற்சவமானது இன்று(14.06.2011) வெகு விமர்சையாக நடைபெற வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல பஞ்சமுக அரசடி ஐங்கரன் தேரேறி அடியவர்களுக்கு அருள் பாலிக்க பிரார்த்திப்போமாக.

வே.சிவயோகன்,
தலைவர், அரசடி விநாயகர் ஆலய பரிபாலனசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தது பாக். ராணுவம் வெறுங்கையுடன் திரும்பினார் சி.ஐ.ஏ. இயக்குநர் லியோன்

## இரு நாடுகளின் உறவில் விரிசல்

இஸ்லாமாபாத், ஜூன் 14

பாகிஸ்தானில் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ., யின் சில அதிகாரிகள், தன்னிச்சையாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, பாகிஸ்தான், ராணுவம் நிராகரித்துவிட்டது. இதனால் பேச்சு நடத்தி வந்த சி.ஐ.ஏ., இயக்குநர் லியோன் பனெட்டா வெறுங்கையுடன் அமெரிக்கா திரும்பினார்.

சி.ஐ.ஏ., இயக்குநர் லியோன் பனெட்டா, கடந்த 10ஆம் திகதி இஸ்லாமாபாத்துக்கு வந்தார். பாகிஸ்தான், ராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வேஸ் கயானி மற்றும், ஐ.எஸ்.ஐ., தலைவர் அகமது சுஜா பாஷா இருவரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதன்போது, அவர்களிடம், ஒரு வீடியோவை போட்டுக் காட்டினார். அதில், வடக்கு வஜிரிஸ்தான் மற்றும் தெற்கு வஜிரிஸ்தானில் வெடி பொருள்கள், குண்டுகள் தயாரிக்கும் இரு தொழிற்சாலைகளை நீக்கி விட்டு தீவிரவாதிகள் வெளியேறுவது பதிவு செய்யப்பட்டிருந்தது. இவர்கள், பகதூர் மற்றும் ஹக்கானி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இதன் பின் பேசிய பனெட்டா, ''பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை, ஐ.எஸ். ஐ.,க்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்பு உள்ளது. அதனால் தான், அந்த வெடிபொருள்கள் தொழிற்சாலைகளை பாகிஸ்தான் ராணுவம் முற்றுகையிடுவதற்கு முன் தீவிரவாதிகள் எளிதில் தப்பித்து விட்டனர்'' என்று குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, ''பாகிஸ்தானில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை வேருடன் அறுக்க வேண்டுமானால், சி.ஐ.ஏ., பாகிஸ்தானில் சில தன்னிச்சையான காரியங்களை மேற்கொள்ள வேண்டும்; அதற்கு ஏதுவாக, சி.ஐ.ஏ., அதிகாரிகள் சிலருக்கு அந்த நாட்டில் விசா வழங்கப்பட வேண்டும்; அவர்கள் யாரையும் சாராமல் சுயேச்சையாக சில நடவடிக்கைகளில் ஈடுபடுவர்'' என்று பனெட்டா தன் கோரிக்கையை முன்வைத்தார்.

ஆனால், ''சி.ஐ.ஏ., யுடனான கூட்டு நடவடிக்கைகள் மற்றும் உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல் தொடர்ந்து நடக்கும்; சி.ஐ.ஏ., அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்படமட்டும் அனுமதி அளிக்கமாட்டோம். சமீபத்தில் அமைக்கப்பட்ட, உளவு ஒத்துழைப்புக்கான கூட்டு அதிரடிப்படைதான், எதிர்காலத்தில் சி.ஐ.ஏ., மற்றும் ஐ.எஸ்.ஐ., இடையிலான உறவு மையமாகச் செயற்படும்'' என்று கயானியும், பாஷாவும் வலியுறுத்தினர்.

இதனால் எரிச்சல் அடைந்த பனெட்டா, அதிபர் சர்தாரியையோ, பிரதமர் கிலானியையோ சந்திக்காமல் சனிக்கிழமை, அதாவது வந்த மறுநாளே அமெரிக்கா திரும்பி விட்டார்.

பாகிஸ்தான்- அமெரிக்கா உறவு மோசமான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதற்கு இந்தச் சம்பவம் முக்கிய புள்ளியாக அமைந்து விட்டதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

# சிரிய ராணுவத்தின் தாக்குதலால் துருக்கிக்குத் தப்பி ஓடும் மக்கள்

டமாஸ்கஸ்,ஜூன்14

சிரியா ராணுவம் நடத்தும் தாக்குதல்களில் மனிதம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதில் உயிர்பிழைக்க வடக்கு சிரியாப் பகுதியில் இருந்து 4 ஆயிரம் பேர் துருக்கிக்கு தப்பி ஓடி உள்ளனர். இதனையடுத்து அந்தத் தாக்குதல்களை உடனே நிறுத்துங்கள் என சிரிய அரசுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் மீது நடத்தும் வன்முறைத் தாக்குதலை நிறுத்துவதற்காக அமெரிக்க வெள்ளை மாளிகை நிர்வாகப் பிரதிநிதிகள் சிரிய அரசுக்கு அழைப்பு விடுத்தனர்.

சிரிய அரசுக்கு எதிரான போராட்டத்தை ஒடுக்குவதற்கு சிரியா ராணுவம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. எல்லைப் பகுதியில் நிலைமை மிக மோசமாகவே உள்ளது என நிவாரண உதவியாளர்கள் தெரிவித்தனர்.

ராணுவம் நடத்தும் தாக்குதலில் ஏராளமான பொது மக்கள் காயம் அடைந்து உள்ளதால் உரிய மருத்துவ வசதிகள் இல்லாமல் தவிக்கின்றனர். குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் போதிய மருத்துவமனைகள் வசதியும் இல்லை என ஐ.நா அகதி முகமையின் மான்ஸ் நைபெர்க் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வசதி தேவைப்படுகிறது. அதுமட்டும் இல்லாமல் போர்வை, பாய், கூடுதல் கூடார வசதிகளும் தேவைப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகள் நடைபெற்ற போது சிரியாவில் நடைபெற்ற மோதல்களில் 32 பேர் இறந்தனர்.

வடக்கு சிரியாவில் சிரிய அரச நிர்வாகம் நடத்தும் தாக்குதலால் பெரும் மனித நெருக்கடிகள் ஏற்பட்டு உள்ளன என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் எச்சரித்து உள்ளது.

வடக்கு சிரியாப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் நிவாரண உதவிகளை மேற்கொள்ள சிரிய அரச நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அமெரிக்கா கோரி உள்ளது.

# எயார் கனடா ஊழியர்கள் வேலை நிறுத்த எச்சரிக்கை

ஒட்டாவா,ஜூன் 14

எயார் கனடா பணியாளர்கள் 72 மணி நேர வேலை நிறுத்த எச்சரிக்கை நோட்டீஸை அளித்துள்ளனர். எயார் கனடா நிறுவனத்தில் புதிதாகத் தேர்வு செய்யப்படும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் பணியிலுள்ள ஊழியர்கள் பெறும் பலன்களை விட இது மாறுபட்டதாக உள்ளது.

இந்த வேறுபாட்டைக்களைய வேண்டும் என ஊழியர்கள் கடந்த 10 வாரங்களாக நிர்வாகத்தினருடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சு உரிய பலனைத் தராத நிலையிலேயே இந்த எச்சரிக்கை நோட்டீஸை அளித் துள்ளனர்.

இதுகுறித்து எயார் கனடா நிர்வாகம் தனது இணையத் தளத்தில் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், ''தங்களது அனைத்து விமானசேவைகளும் வழக்கம் போல செயற்படும். தற்போது விமானத்தில் செல்வதற்கு மேற்கொண்ட பயணச்சீட்டு பதிவு வசதிகள் உரிய செயற்பாட்டில் இருக்கும். அதே போன்று வரவிருக்கும் நாள்களில் விமானப் பயணத்திற்கான பதிவுகள் தொடர்ந்து நடைபெறும்'' எனத் தெரிவித்துள்ளது.

எயார் கனடா ஊழியர்கள் தொழில் சார்பு உள்ளவர்கள். அவர்கள் தங்களது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள் என ஏர் கனடா விமான நிறுவன செய்தித் தொடர்பாளர் பீட்டர் பட்ஸ் பாட்ரிக் தெரிவித் தார்.

கனடா ஊழியர்கள் யூனியன் நிர்வாகி பாகப் செர்னகி மற்றும் பீட்டர் பட்ஸ் பாட்ரிக் கூறுகையில், ''தங்களது அமைப்புகள் உரிய தீர்வு காண்பதற்கு பேச்சு நடத்தி வருகின்றன'' என்றனர்.

வரவேற்பு....



பிரான்ஸ் பாலினேசியா தலைநகர் பபிடியில் உள்ள விமான நிலையத்துக்குச் சென்ற சீன துணை அதிபர் சை ஜீன் பிங்கை அந்த நாட்டு அதிபர் ஒஸ்கார் தெமாரு வரவேற்றார்.

# பின்லேடனின் உடலை கடலில் தேடும் அமெரிக்க புதையல் வேட்டைக்காரர்!

வாஷிங்டன்,ஜூன்14

வடக்கு அரபிக் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படையினர் அடக்கம் செய்த பின்லேடனின் உடலை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்காவின் புதையல் வேட்டைக்காரர் பல் வாரன் ஈடுபட்டுள்ளார்.

அல்குவைதாஅமைப்பின் தலைவர் பின்லேடனை அமெரிக்க கடற்படையின் சீல் பிரிவு அதிரடிப் படையினர் பாகிஸ்தானின் அபோதாபாத் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி சுட்டுக் கொன்றனர்.

அதன்பின்னர் பின்லேடனின் உடலை ஹெலிகொப்டர் மூலம் அரபிக்கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யு.எஸ்.எஸ் கார்ல் வின்சன் போர்க்கப்பலுக்கு கொண்டு சென்று அங்கு டி.என்.ஏ உள்பட எல்லா வித சோதனைகளையும் செய்து பின் கடலில் அடக்கம் செய்ததாக அமெரிக்கா செய்தி வெளியிட்டது.

ஆதாரத்தை வெளியிடாமல் பின்லேடன் மரணம் பற்றி அமெரிக்க அதிபர் ஒபாமா வாய்மொழியாகத் தகவல் தெரிவித்தது அமெரிக்கர்கள் பலருக்கு உடன்பாடு இல்லை. இத்தகவல் வெளியானவுடன் அரபிக் கடற்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தி, ஒபாமாவின் உடலைக் கண்டு பிடிக்க வேண்டும் என முடிவு செய்தார் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த புதையல் வேட்டைக் காரர் பல் வாரன்.

இதுகுறித்து பல் வாரன் கூறியதாவது: அமெரிக்கர்கள் தேசபக்தியுடைவர்கள். பின்லேடனை கொன்று புதைத்து விட்டோம் என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க அதிபர் ஒபாமா தவறிவிட்டார் என நினைக்கிறோம். ஒபாமா அரசை நான் நம்பவில்லை. அதனால் பின்லேடன் உடலைத் தேடும் பணியில் ஈடுபடுகிறேன்.

வடக்கு அரபிக் கடற்பகுதியில் பின்லேடனை புதைத்தாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற எந்த விவரமும் வெளியிடப்படவில்லை. அதிநவீன சாதனங்கள், படகுகளுடன் பின்லேடனின் உடலைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள எங்கள் குழு பின்லேடன் உடலைக் கண்டுபிடிக்கும் என நம்புகிறேன். இதற்கு கோடிக்கணக்கில் பணம் செலவாகும் என்றார்.

# நியூசிலாந்தில் நில நடுக்கம்; பீதியில் மக்கள்

நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் நேற்று 5.2 என்ற ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில அதிர்வு பலமுறை ஏற்பட்டது. கிறிஸ்ட்சர்ச்சில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் 11 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது.

கடந்தவாரத்திலும் கிறிஸ்ட்சர்ச்சில்2 அதிர்வுகள் ஏற்பட்டன. அந்த அதிர்வின் காரணமாக நகரம் பதட்டத்துக்கு ஆளானது.

நிலநடுக்கத்தால் சில பாதிப்புகள் ஏற்பட்டதாகத் தகவல்கள் கிடைத்தாலும் பெரிய அளவில் யாரும் இந்த நில நடுக்கத்தால் பாதிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

நிலநடுக்கத்தால் ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது. அதில் சிலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நில நடுக்கத்தின் போது 181 பேர் கொல்லப்பட்டார்கள். அந்த நிலநடுக்க அதிர்ச்சி மக்கள் மனதை விட்டு மறையாத நிலையில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டு மக்களுக்கு பெரும் துயரத்தை அளித்துள்ளது.

# இந்தியா நட்பு நாடு என்கிறார் ஆப்கன் அதிபர்

காபூல்,ஜூன்11

''ஆப்கானிஸ்தான், தன் அண்டை நாடான இந்தியா விடம் உதவிகளைப் பெறுவதற்காக பாகிஸ்தான் மகிழ வேண்டும்'' என்று, ஆப்கன் அதிபர் ஹமீது கர்சாய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன் தினம் அளித்த பேட்டியில் ஆப்கானிஸ்தானின் மிகப் பழைய நட்பு நாடு இந்தியா, அந்த அடிப்படையில் தான் இந்தியா, ஆப்கனுக்கு உதவி வருகிறது. பாகிஸ்தானும், ஆப்கனும் இரட்டைக் குழந்தைகள். ஆப்கனுக்கு சிறந்த நட்பு நாடுஇந்தியா.

பாகிஸ்தானின், முன்னாள் அதிபர் முஷாரப் காலத்தில் இரு தரப்புக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தன. பாகிஸ்தான், மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தபின், இருதரப்பு உறவுகள் முன்னேறியுள்ளன.

இருநாடுகளும், பண்பாடு, மொழி மற்றும் மத அடிப்படையில் நெருங்கிய உறவுகளைக் கொண்டவை. இவ்வாறு கர்சாய் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு விக்கெட்டுக்களால் வென்று இறுதிக்குத் தெரிவாது கே.ஸி.ஸி.ஸி

வலி.வடக்கு, ஜூன் 14

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டக் கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்குஇடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 28.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது.

. காண்டீபன் ஐந்து ஆறுகளுடன் 45, லவேந்திரா 38, கிரிசாந் 36, அகிலன் 19, அம்புஜன் 18 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாகப் 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உத்தமகுமரன் 5.2 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பங்குஜன் 6 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சுஜீகரன் 6 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிலோகன் 5 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் 28.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பிரசாந் ஐந்து நான்குகள், ஒரு ஆறுடன் ஆட்டமிழக்காது 46, உத்தமகுமரன் 38, உமாநாத் 33 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அகிலன் 3 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் காண்டீபன் 6 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் டக்சன், ஹரிவதனன், மயூரன் முறையே 15, 17, 18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ-86)

# கிளிநொச்சிப் பிரதேச கபடி; கரைச்சி, பூநகரி சம்பியன்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிளிநொச்சி பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கபடிச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கரைச்சிப் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் பூநகரிப் பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் கரைச்சிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து கண்டாவளைப் பிரதேச செயலக அணி மோதியது.

கரைச்சிப் பிரதேச செயலக அணி 46:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் கண்டாவளைப் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்துக் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவு அணி மோதியது.

பூநகரிப் பிரதேச செயலக பிரிவு அணி, எதிர்த்து விளையாடிய கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவு அணியை 49:29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஐ-23)

# ஒரு வாரத்தில் இரண்டாவது கேடயம் சுவீகரித்தது சாவகச்சேரி ஸ்ரீ முருகன்

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஒரு வாரத்தில் இரண்டாவது வெற்றிக் கேடயத்தைக் கைப்பற்றியது சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணி.

மட்டுவில் வில்சன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஸ்ரீ முருகன் கிரிக்கெட் அணியின் வீரர் தசிந்தனின் அதிரடித் துடுப்பாட்டமும் ம.லாவண்யனின் சிறப்பான பந்துவீச்சும் இந்த அணியைச் சம்பியனாக்கியது.

கடந்த ஒரு மாதமாக மட்டுவில் வில்சன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் கிரிக்கெட் அணியும் நுணாவில் பாரதி கிரிக்கெட் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரீ முருகன் அணித் தலைவர் க.தர்சன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் அணியினர் 13.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றனர். இந்த அணியைச் சேர்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தசிந்தன் 34 ஓட்டங்களையும் ரொக்ஸன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாரதி கிரிக்கெட் அணியின் சாந்தன் 3 விக்கெட்டுக்களையும் டிலக்ஸன், மாயவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

85 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாரதி அணி 16.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டபோதும் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பியதால் அணி தோல்வியைச் சந்தித்தது.

ஸ்ரீ முருகன் அணி சார்பில் பந்துவீச்சில் ம.லாவண்யன் 5 விக்கெட்டுக்களையும் கோகுல், ரொக்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதிப் போட்டிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பரிசில்களை வழங்கினார்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஸ்ரீ முருகன் கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ம.லாவண்யனும் தொடர் நாயகனாக மீசாலை சீமா கிரிக்கெட் அணியின் வை.பிரதீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த 5ஆம் திகதி சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 12 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலும் ஸ்ரீ முருகன் அணி சம்பியனாகியது குறிப்பிடத்தக்கது. (ஐ-207)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகப் புயல்கள் அச்சுறுத்தவில்லை

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் 'வேகப் புயல்கள்' எதிரணி துடுப்பாட்டக்காரர்களை அச்சுறுத்த தவறுகின்றனர். ஆடுகளங்களும் படுமந்தமாக உள்ளன. தவிர வீரர்களிடம் போதிய அனுபவம் இல்லாததே அணியின் வீழ்ச்சிக்கு காரணம் என்று அம்புரோஸ் தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் கிரிக்கெட் அரங்கில் கொடி கட்டிப் பறந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, இப்போது உபயோகமில்லாத அணியாகத் திகழ்கின்றது. ரெய்னா தலைமையிலான இளம் இந்திய அணியிடம் ஒருநாள் தொடரை இழந்துள்ளது. உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் இல்லாமல் தவிக்கின்றது.

இது குறித்து அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் அம்புரோஸ் வேதனையுடன் கூறியதாவது:

மேற்கிந்தியத்தீவுகள் அணி இக்கட்டான நிலையிலுள்ளது. எதிரணி துடுப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயல்படுவது தான் வேகப் பந்துவீச்சாளர்களின் முக்கிய பாணி. இதே பாணியை தான் நான் அந்தக் காலத் தில் பின்பற்றினேன். தற்போதைய மேற்கிந்தியத்தீவுகளின் 'வேகங்கள்' எதிரணி வீரரை பயமுறுத்தும் கலையை மறந்து விட்டனர். இதை தவிர, அணியின் வீழ்ச்சிக்கு முக்கியமான இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, மந்தமான ஆடுகளங்கள். முன்பு போல் பந்துகள் எகிறும் வகையில் ஆடுகளம் அமைக்கப்படுவது இல்லை. இரண்டாவதாக, வீரர்களிடம் போதிய அனுபவம் இல்லை.

நான் அணியில் சேர்ந்த போது மால்கம் மார்ஷல், கொட்னி வோல்ஷ் போன்ற ஜாம்பவான்கள் இருந்தனர். இவர்களிடம் இருந்து நிறைய விடயங்களை கற்றுக் கொண்டேன். தற்போதைய வீரர்களுக்கு அறிவுரை சொல்ல யாருமில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் தங்களுக்கு தெரிந்த சின்னச் சின்ன விடயங்களை மட்டும் பகிர்ந்து கொள்கின்றனர். தற்போது அணியின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. இழந்த பெருமையை விரைவில் மீட்பது கடினம். ஒரு சில போட்டிகளில் வென்றால் மட்டுமே, மீண்டும் புத்துயிர் பெற முடியும்.

இந்திய வீரர் சச்சின் மீது அதிக பாசம் உண்டு. கடந்த 1990 இல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் அவரை முதன் முதலில் பார்த்தேன். பள்ளி மாணவர் போல இருந்தார். 17 வயதில் சதம் அடித்து தனது திறமையை நிரூபித்தார். 1992 இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் சச்சின் மிகவும் இளம் வீரராக இருந்தார். நான் மூத்த வீரர் என்பதால், அவரது விக்கெட்டை எளிதில் கைப்பற்றினேன்.

என்னை பொறுத்தவரை ஆஸ்திரேலியாவின் டேவிட் பூனுக்கு பந்துவீசுவது தான் கடினமாக இருந்தது. மற்றொரு ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் வோவ் மீது அதிக மரியாதை உண்டு. 1995 இல் நடந்த டெஸ்ட் தொடரில், நாங்கள் பின் தங்கியிருந்தோம். இதனால் நான் ஸ்டீவ் வோவ்வின் உடலை பதம் பார்க்கும் வகையில் பந்துவீசினேன். இதனால் வோவ் ஆத்திரமடைய, அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டது. எங்களது மோதல் களத்தில் மட்டுமே நடந்தது. அதற்கு வெளியே சகஜமாகப் பழகினோம் என்று அம்புரோஸ் தெரிவித்தார். (15)

# வில்லியம்ஸ் சகோதரிகளின் எச்சரிக்கை!

விம்பிள்டன் கிராண்ட்சிலாம் ரெனிஸ் போட்டியில் சம்பியன் கனவை சகோதரி செரினா வில்லியம்சும் நானும் பகிர்ந்து கொள்வோம் என்று ரெனிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அமெரிக்க வீராங்கனைகள் ஈஸ்ட் போர்னில் நடந்த ஏகோன் ரெனிஸ் போட்டியில் ஆட வந்தனர். இங்கிலாந்து சாம்பியன் ஷிப் போட்டிக்கு ஆரம்பக் கட்ட ஆட்டமாக உள்ள ஈஸ்ட் போர்ன் பந்தயத்துக்கு வந்ததன் மூலம் விம்பிள்டனில் இவர்கள் தங்களது அதிரடி வேகத்துக்கு தயாராகி உள்ளனர்.

அமெரிக்காவின் இந்த முன்னணி வீராங்கனைகள் காயம் காரணமாக சில காலம் ஒதுங்கி இருந்தனர். 30 வயது செரினா வில்லியம்ஸ் ஒரு ஆண்டுக்கு முன்னர் இந்த சம்பியன் ஷிப் பட்டத்தை வென்றிருந்தார். அவருக்கு



ஏற்பட்ட கால் காயத்தைத் தொடர்ந்து நுரையீரல் பகுதியில் ரத்தக்கட்டி ஏற்பட்டது. இந்த ஆண்டு மார்ச் மாதம் ரத்தக்கட்டி அகற்றப்பட்டது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 31 ஆவது பிறந்த நாளை காணும் வீனஸ் வில்லியம்ஸ் இந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் 3 ஆவது சுற்றின் போது இடுப்பு தசைக்காயம் ஏற்பட்டு அவதிப்பட்டார். இப்போது ரெனிசில் இருந்து விலகிய வீனஸ் வில்லியம்ஸ் தற்போது மீண்டும் ஆட வந்துள்ளார்.

''ஈஸ்ட் போர்ன், ஏகோன் போன்ற ஆட்டங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவை'' என்று அவர் தெரிவித்தார். வீனஸ் 5முறை விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். செரினா வில்லியம்ஸ் விம்பிள்டனில் பெற்ற வெற்றிகளை விட ஒரு எண்ணிக்கை கூடுதலாக வீனஸ் பெற்றுள்ளார்.

''ஈஸ்ட் போர்ன் மற்றும் விம்பிள்டன்'' வெற்றிகளுக்காக இங்கு வந்துள்ளோம் என்று வீனஸ் வில்லியம்ஸ் கூறினார். (15)

# எங்கள் ஆதிக்கம் தொடரும்...




சர்வதேச கிரிக்கெட் அரங்கில், இன்னும் ஐந்து முதல் பத்து ஆண்டுகள் வரை இந்தியாவின் ஆதிக்கம் தொடரும். இவ்வாறு, புதிய பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை இளம் இந்திய அணி 3-0 என்று கைப்பற்றி முன்னிலை வகிக்கின்றது. சச்சின், சேவாக், டோனி, யுவராஜ், கம்பீர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில், கரீபிய மண்ணில் இளம் வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இது குறித்து இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் பிளட்சர் கூறியதாவது:

இந்திய அணியில் திறமையான இளம் வீரர்கள் நிறைய உள்ளனர். இதனால் முன்னணி வீரர்கள் இல்லாத பட்சத்திலும் இந்திய அணியின் வெற்றிப் பயணம் தொடர்கின்றது. சமீபகாலமாக டெஸ்ட், ஒருநாள், 'ரி-20' என்று அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் இந்திய வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் ஐந்து முதல் பத்து ஆண்டுகள் வரை இந்திய அணியின் ஆதிக்கம், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நீடிக்கும் என்று நம்புகிறேன்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் ரோகித் சர்மா அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இவரை போன்ற திறமையான வீரர்களுக்கு டெஸ்ட் அணியில் இடம் அளிக்க வேண்டும். ஆனால் தற்போதுள்ள டெஸ்ட் அணியில் திறமையான வீரர்கள் நிறைய இருப்பதால், இவருக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. இவர், விரைவில் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பார் என்று நம்புகிறேன். இந்தத் தொடரில், சுரேஷ் ரெய்னா தலைவராக சிறப்பாக செயல்படுகின்றார். இவருக்கு கிடைத்த இந்த அனுபவம், வரும் காலங்களில் இந்திய அணியின் தலைவராக சாதிக்க உதவும்.

சமீபகாலமாக இந்திய அணியின் சுழற்பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. அமித் மிஸ்ரா, ஹர்பஜன் சிங் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு கைகொடுக்கின்றனர். ஹர்பஜன் சிங், பந்துவீச்சில் மட்டுமல்லாமல், துடுப்பாட்டத்திலும் அசத்தி வருகின்றார். இவர் கடந்த ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக சதம் கடந்ததன்மூலம், தன்னை சிறந்த துடுப்பாட்ட வீரராக நிரூபித்தார். 'லெக் ஸ்பின்னராக' அமித் மிஸ்ரா நம்பிக்கை அளிக்கிறார்.

கடந்த மூன்று போட்டிகளில் விளையாடாத வீரர்களுக்கு மீதமுள்ள இரண்டு போட்டிகளில் விளையாடும் [illegible] ளோம் - என்றார். (15)

# எனது 'ரோல் மொடல்' சச்சின், பெடரர்

- வல்த்தட்டி



இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், சுவிட்சர்லாந்து ரெனிஸ் வீரர் ரோஜர் பெடரர் இருவரும் தனக்கு முன் மாதிரி என்று கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர் வல்த்தாட்டி தெரிவித்துள்ளார். சமீபத்தில் இந்தியாவில் நான்காவது ஐ.பி.எல் தொடர் நடந்தது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் இளம் இந்திய வீரர் போல் வல்த்தாட்டி 14 ஆட்டங்களில் ஒரு சதம், இரண்டு அரைசதம் உட்பட 463 ஓட்டங்கள் எடுத்தார்.

அதிரடியாக ஓட்டங்கள் குவிக்கும் இவர், ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். இது குறித்து வல்த்தாட்டி கூறியதாவது,

நான்காவது ஐ.பி.எல் தொடரில் எனது செயற்பாடு மகிழ்ச்சியாக உள்ளது. இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் மற்றும் சுவிட்சர்லாந்து டெரனிஸ் வீரர் ரோஜர் பெடரர் இருவரையும் எனது முன் மாதிரியாகக் கொண்டுள்ளேன். இவர்கள் இருவரும் உண்மையான சம்பியன்கள். இவர்களது செயற்பாடு, ஆட்டங்களில் சாதிக்க வேண்டும் என்ற தூண்டுதலை ஏற்படுத்தியது.

கண்ணில் ஏற்பட்ட காயம் காரணமாக சிறிது காலம் ஆட்டங்களில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது எனது நண்பர்கள், சக ஊழியர்கள் மற்றும் உறவினர்கள் உறுதுணையாக இருந்து ஊக்கப்படுத்தினர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வரும் ஐ.பி.எல். தொடரிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிக்க விரும்புகிறேன். எனது வெற்றிக்கு தலைவர் கில்கிறிஸ்ட் தந்த ஒத்துழைப்பு மிக முக்கியமானது. இவர், என்னைப் போன்ற இளம் வீரர்களை ஊக்கப்படுத்துகிறார். துடுப்பாட்டம் குறித்து நிறைய ஆலோசனைகள் வழங்கினார்.

ஐ.பி.எல் தொடர் இளம் வீரர்களின் திறமையை கண்டறியும் மேடையாக இருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்தத் தொடர் மூலம் நிறைய இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி தேசிய அணியில் இடம் பிடிக்கலாம் என்று வல்த்தாட்டி தெரிவித்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 17.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**

*19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944*

## கண்ணீர் அஞ்சலி



### வைரமுத்து தயாமோகன்

(பொது சுகாதாரப் பரிசோதகர், உளநலப் பிரிவு, வவுனியா)

சேவை மிகப் புரிந்த சகோதரரே
செயல் வீரரான சுகாதாரப் பரிசோதகரே!
பாதிவழி வாழ்க்கையில் பயணித்ததேன்.
உற்றவர்கள் உள்ளமழ விடைபெற்றதேன்.
சேர்ந்திருந்த நேரங்களை நினைக்கின்றோம்-உம்
ஆத்ம சாந்திக்காக துதிக்கின்றோம்.

பாடசாலை வைத்திய அதிகாரியும், அலுவலர்களும்.
பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ்ப்பாணம்.

## யாழ்கோவின் பால் கொள்வனவு விற்பனை புதிய கிளை நிலையத் திறப்பு விழா

வட்டுக்கோட்டை பகுதி பால் வழங்குநர்களின் நன்மை கருதியும் இப்பகுதி மக்கள் பாலையும், பாற்பொருள்களையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் எமது சங்கத்தின் கிளை நிலையம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக நாளை (15.06.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மேலும் பஸ்ரரைஸ் செய்யப்பட்ட ஆடைநீக்கிய பால், முழுஆடைப்பால் பைக்கற்றுக்களை எமது சங்கக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்
யாழ்மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### சுவாமிநாதன் யோகநாதன்



மல்லாகம், இந்திரவாசாவைப் பிறப்பிடமாகவும் தற்போது தென்இந்தியாவில் வசித்தவருமான சுவாமிநாதன் யோகநாதன் 11.06.2011 இல் இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும் சிவகெங்காதேவியின் (சசி) அன்புக் கணவரும் யாமாவளவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகசாமி - நீலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி கலியுகவரதி சண்முகநாதனின் அன்புச் சகோதரரும் திருமதி சிவப்பிருந்தா கமலநாதன், சிவதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகநாதன், காலஞ்சென்ற சிவசக்திதேவி ஆகியோரின் மைத்துனரும் கமலநாதன், சுனித்தா, தயானந்தன், திருமதி தயாழினி, ஜீவபாலன் ஆகியோரின் அன்பு மாமனும் வர்ணவி, சுவாதிகா, சாகித்தியன், நிருஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி: யாமாவளவு, தெல்லிப்பழை.
தற்போதைய முகவரி: ராமகிரி, தெல்லிப்பழை

தகவல்: குடும்பத்தினர்.

(40)(2018)

### வேலாயுதர் அரியபுத்திரன்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் தென்னியங்குளம், துணுக்காயை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதர் அரியபுத்திரன் நேற்று (13.06.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் குணசீலன், யோகசீலன், கிருஷ்ணசீலன், காலஞ்சென்ற தருமசீலன் மற்றும் சிவஞானசீலன், கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, மேகலா, வனஜா, தயாவதி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், தியாகராஜா, காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை மற்றும் நாகம்மா, காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற அகிதா மற்றும் அஜிதா, சாயிதா, அனோஜன் காலஞ்சென்ற குணேசன் மற்றும் பார்த்தீபன், விதுசா, கௌசிகன், நிலவன், நிவேதிகா, ஆர்நிகன், பானுசன், கோநிலா, மதீசனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் பழைய கண்டி வீதி, கனகராயன் குளத்திலுள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகராயன்குளம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகராயன்குளம் வடக்கு,
கனகராயன்குளம்.

(40-27)(2004)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கண்ணையா



4ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், செழியன் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கண்ணையா நேற்று (13.06.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும் சிவலிங்கம், அருந்தவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராணி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சுப்பிரமணியம் மற்றும் நாகரெத்தினம், மகாலிங்கம், சரஸ்வதி, தங்கமுத்து, பரமலிங்கம், மகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சதாசிவம், தர்மலிங்கம், நடராசா மற்றும் ருக்குமணி, காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் கமலாதேவி, காலஞ்சென்றவர்களான யோகலட்சுமி, சுந்தரம், கணேஸ் மற்றும் சின்னத்துரை காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கனகம்மா, அருணாச்சலம், இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுஸ்யந்தன், சிவரூபன், தஜிவன், குயிலினி, சர்மினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2019)

செழியன் ஒழுங்கை,
மானிப்பாய் றோட்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
சிவலிங்கம் (மகன்),
அருந்தவமலர் (மகள்)

## கடைக்கு ராக்கை தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள இரும்பு அல்லது மர ராக்கைகள் கடைக்குத் தேவை.

தொடர்பு: Grace Electrical
0778924947, 0775413663

## தவறிவிட்டது

நேற்று (13.06.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணி அளவில் ஈச்சமோட்டை வீதியில் NOKIA C 3 கையடக்க தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பே.இராஜேஸ்வரன் (மாமா) 51/2, ஈச்மோட்டை வீதி, சுண்டுக்குளி என்னும் முகவரியில் அல்லது 0779905825 க்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0779905825

## For Rent

**No. 360/7, Catholic Press Complex, Main Street** இல் சகல வசதிகளுடன் புதிதாக வடிவமைக்கப்பட்ட கடை நியாயமான விலையில் வாடகைக்கு உண்டு.

உடன்தொடர்புகொள்ள: 0778350478

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, கரந்தன் சந்தி,
இராமுப்பிள்ளை
மகாவித்தியாலயத்துக்கு அருகில்
இராச வீதியில் 4½ பரப்பு
வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778610036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் 4 நாட்களே உள்ளன விரையுங்கள்

**மல்டிமீடியா**

அனிமேஷன் பயிற்சிக்கான புலமைப்பரிசில் பரீட்சை

June 18-19 (சனி-ஞாயிறு)

இலவச அனுமதிகளை

ASIAN CSC COMPUTER EDUCATION

யாழ்.நகர், சாவகச்சேரி மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

## கண்ணீர் அஞ்சலி



### வைரமுத்து தயாமோகன்

*(உளமருத்துவ சமூகப் பணியாளர், உளநலப் பிரிவு பொது வைத்தியசாலை, வவுனியா.)*

*(12.06.2011) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்த உள மருத்துவ சமூகப் பணியாளர் வை. தயாமோகன் அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் குடும்பத் துயரில் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உள மருத்துவ சமூகப்பணியாளர்கள், வடக்கு, கிழக்கு மாகாணம்.

## Chundikuli Girls College
## Old Girl's Association, Jaffna

### The Annual General Meeting And Fellowship Lunch

**Date:** *Wednesday 15th June 2011*

**Venue:** *College Hall*

**Agenda**

9.30 am: Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.

11.00 am: A.G.M

12.30 pm: Lunch and Games
Lunch Tickets Rs. 250

**All Old Girls are Cordially Invited.**

*Secretary.*

## மரண அறிவித்தல்

### திருமதி சவரிமுத்து நேசம்மா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், மெமோரியல் லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவரிமுத்து நேசம்மா 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்துவின் (பொன்னையா) அன்பு மனைவியும், சூசைமுத்து, பேபிசரோஜா (நோர்வே), புஸ்பராணி, காலஞ்சென்ற அன்ரனிதாசன் மற்றும் லில்லிமலர் (கனடா), ஜெசிந்தா, றமணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், நாகேஸ்வரி, றோபேட் (நோர்வே), மரியநாயகம், சுலோசனா (வவா -நோர்வே), அன்ரனி தாசன் (கனடா), இராஜேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், விஜிதா (பிரான்ஸ்), நீகன் (லண்டன்), டினேஸ் குமார் (மலேஷியா), பாமா ஜெயந்தன் (நோர்வே), மேரிஸ்ரெலா (கனடா) யசோதா (நோர்வே), ஜெனிபர் (நோர்வே), ஹனுஷன் (கனடா), ருஷிதா (கனடா), நுஸிந்தினி, ஸ்ரெலனி, ஜெனி(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிந்தியா(கனடா), கீர்த்திகா (கனடா), ஜெரோமி (கனடா) றெபேக்கா (நோர்வே), டெவோறாடானியேல் (நோர்வே) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.06.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*மெமோறியல் லேன்,*
*மானிப்பாய்.*

தகவல்: ரீ.மரியதாஸ் குடும்பத்தினர்.

## சஞ்சீவா வைத்தியசாலை

(ஆயுள்வேதத் திணைக்கள வைத்தியசாலை அனுமதிப்பத்திர இல. ஆயு/ வாப/ ம.சா/ 63)

இல.6, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (நட்டாதெருச்சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில்)

### விடுமுறை அறிவித்தல்

மாற்றமுடியாத நோய்களை நீக்குவதில் பெயர் பெற்றதும், குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரசித்தி பெற்ற எமது வைத்தியசாலை இன்றும் நாளையும் (14, 15ஆம் திகதிகளில்) மூடப்பட்டிருக்கும் மீண்டும் 16.06.2011 முதல் வழமைபோல இயங்கும். முக்கியமாக வெளிமாவட்டங்களிலிருந்து வரும் நோயாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

Dr.ஜெ.ஜெயபலன்
DAM Regd No 13461

Dr.ச.ஜெயபலன்
DAM Regd No 12128

Dr.K.O.ராஜரட்ணம்
RIMP Regd 6067

**பார்வையிடும் நேரம்-**
காலை 6 முதல் 11 வரை, 3முதல் 7 வரை. ★வெள்ளிக்கிழமை விடுமுறை.

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருதும், சான்றிதழும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்- செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

யாழ்- மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் முதலாம் இடம் பெற்றுக் கொண்ட கிராம அலுவலருக்கான விருதினையும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்ட கிராம அலுவலருக்கான விருதினையும் -

ஹேமலதா ஞாபகார்த்த நிறுவன உறுப்பினர் க.முதலியார் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்ட கிராம அலுவலருக்கான விருதினையும் வழங்கி கௌரவிப்பர். (206)

## பச்சிலைப்பள்ளியில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மீள்எழுச்சித் திட்டத்துக்கு அமைவாக பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன.

கடந்த ஒரு வருடமாக இடம்பெற்று வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் ஐ.ஓ.எம்., சேவாலங்கா, சோஆ, யு.என்.எச்.சி.ஆர். போன்ற தொண்டு நிறுவனங்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை பொதுமக்கள் பயனடையக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீளவும் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் பொதுமக்களின் அபிவிருத்திப் பணிகளில் அதிகளவு தேவைகள் ஏற்பட்டுள்ளதால் சேவாலங்கா உட்பட ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் புதிய அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொள்ளவுள்ளன. (ம-313)

## தீருவிலில் படம் பிடித்த மூவர் படையினரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

வல்வெட்டித்துறையில் உள்ள தீருவில் நினைவாலயத்தை படம்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த மூவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சனிக்கிழமை வீடியோக் கமராவுடன் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் இவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிபதி இவர்களை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதி யளித்தார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ந-319)

## 'வட பகுதி பறவைகள்' விவரண நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வட பகுதி பறவைகள் பற்றிய விவரண நூல் வெளியீடும் விசேட உரையும் நாளை வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர் டி.ஆர். கஜவிந்தன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொள்வர்.

நிகழ்வில் 'பறவைகள் உலகில் திறமை பெறுதல்' என்னும் தலைப்பில் கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் சரத் கொட்டஹொட விசேட உரையாற்றுவார். (எ)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பரும் கணபதி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளருமாகிய

அமரர்

**கணபதிப்பிள்ளை பரஞ்சோதி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்.
ராஜா கிறிம் ஹவுஸ், (சி/859)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஹெலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தனர்.

அங்கவீனர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டவர்கள் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திகளைப் பூர்த்தி செய்தனர்.

கடந்த வருடத்தை விடவும் இம்முறை பொங்கல் விழாவில் பெரும் எண்ணிக்கையானவர்கள் நூற்றுக்கணக்கான வாகனங்களில் ஆலயத்துக்கு வந்திருந்தனர். (ஒ-ஐ-86)

## நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது கிராமமான கட்டைப்பிராயில் கூட நேற்று இந்தப் பதிவுகள் நடந்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் பொதுமக்களை பதிவு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்.

பதிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் உத் தரவு பிறப்பித்த பின்னர் படையினரும் பொலிஸாரும் மீண்டும் பதிவு வேலை செய்வது நீதிமன்ற உத்தரவை மீறுகின்ற - நீதிமன்றத்தை அவமதிக்கின்ற செயல் அல்லவா? இது பாரதூரமான குற்றமல்லவா? - என்றார் சுரேஷ். (ஐ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலை 4 மணியளவில் பழை வீமன்காமம் மகா வித்தியாலயத்தின் பெயர்ப்பலகை திரை நீக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. பின்னர் மாவிட்டபுரம் அரசடி வீதி யின் புனரமைப்பை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும். தொடர்ந்து தெல்லிப்பழை வைத்தியசாலை புனரமைப்புக் கான நிதி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

மேலும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 1.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, வித்தகபுரத்தில் அரச கட்டடம் அமைக்கப்படவுள்ளது. கிராம அலுவலருக்கான கட்டடம், சமுர்த்தி அலுவலருக்கான கட்டடம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் குடும்பநல மருத்துவமாது அலுவலகம் என்பவற்றுக்கான கட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும், சகல திணைக் களங்களின் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படைப் பிரச்சி னைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அவை உடனடி யாக திணைக்களத் தலைவர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு தீர்வு காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தேவை

யாழ். நகரில் பிரபல புடைவை நிலையத்துக்கு பின்வரும் வேலை ஆள்கள் உடன் தேவை.

1) சிட்டை எழுதுநர்.(Bill Clerk)
(ஆண், வயது 35-55 வரை)
2) விற்பனையாளர்/ பழக விரும்புபவர்கள்.
(ஆண்/ பெண்).

தொடர்புகளுக்கு:- 021 222 9286, 0727122944.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்

**சண்முகநாதன் லீலாவதி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் கோயிலடி,
இணுவில் மேற்கு. (சி/860) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பொன்னையா சண்முகவேல் பத்தர்**



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த விஸ்வகுல திரு பொன்னையா சண்முகவேல் 10.06.2011 வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் சிவகுமார் (மணி), புஸ்பராஜா (புஸ்பா), கிருஷ்ணவேணி (வேணி), பாலசுப்பிரமணியம் (பாலா), மனோன் மணி (மனோன்), கேமலதா (லதா), சந்திரகலா (கலா), விக்னேஸ்வரன் (விக்கி), ஆனந்தராஜா (ராஜா), கலைவாணி (வாணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம், ஆனந்தன், சுபத்திரா, சுதர்ஷன், அருந்ததி, கிருஷ்ணதாஸ், சுஜித்தா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜனனி, அஜந்தன், ஆரணி, சுஜித்திரன், கௌதமன், காயத்திரி, மதுரா, இந்திரா, அபிஷனா, யதீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.06.2011) புதன்கிழமை காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மறுநாள் 16.06.2011 வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச. விக்னேஸ்வரன்
(விக்கி-மகன்)0779204176,
வாணி (மகள்)757135081.

இல 32-6/7,
மாதங்காவத்தை,
ரசிகாடவர். (சி/687)

## மரண அறிவித்தல்

**சரவணமுத்து விநாயகமூர்த்தி S.A**



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து விநாயகமூர்த்தி 11.06.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து(ஆசிரியர்) - நாகம்மா தம் பதியரின் சிரேஷ்ட புத்திரனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரமூர்த்தி (கனடா), சம்பந்தமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி, பத்மாவதி, சரஸ்வதி, செல்வராணி ஆகியோரின் சகோதரனும், ஞானசேகரன்(நோர்வே), கல்யாணி (ஆஸ் திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எழிமரசி (நோர்வே), வசந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், ஹர்சன், அனோஜன்(ஆஸ்திரேலியா), வாகினி, அருணன் (நோர்வே) ஆகியோரின் தாத்தாவும், புஸ்பராசமணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான மதியாபரணம், பூபாலசிங்கம், பழனிதுரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கந்தனான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.(சி/835) தகவல்: வி.தங்கம்மா
அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (மனைவி-தங்கமலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கைககள் தொடர்பிலும் நோர்வே அரசுக்கு தெரிவிக்கப்பட வுள்ளது.

இதேவேளை இலங்கையின் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் நோர்வே அரசுடனான உறவுகளை புதுப்பிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ஆர்வம் கொண்டுள்ளார் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ-15)


### வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் ஸ்ரீமுத்துமாரியம்மன் அலங்கார உற்சவம்

வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 05.06.2011 இல் ஆரம்பமாகி, இன்று சங்காபிஷேக நிகழ்வும் அன்னதானமும் நடைபெற்று இரவு அம்மன் வீதியுலாவும் நடைபெறும்.

கடந்த அனர்த்தத்தின் போது உயிர்நீத்த பொருளாளரான பண்டாரி விநாயகமூர்த்தி அவர்கள் ஆற்றிய தொண்டுக்காக சைவசமயத்தொண்டன் என்கின்ற பட்டம் ஆலய பரிபாலன சபையினர் சார்பில் வழங்கப்படும்.

ஆலய பரிபாலன சபையினரும்
(சி-863) சங்காபிஷேக உபயகாரரும்.


## கண்ணீர் அஞ்சலி



### வைரமுத்து தயாமோகன்

*(செயலாளரும், ஆணையாளரும், மக்கள் நலன்புரி சங்கமும் படையணிகளும்)*

செயலாளராக நீண்ட காலம் செயல் வடிவம் தந்தவனே.
இன்று செய்வதறியாது நாம் நிற்கின்றோம் உன் பிரிவால்,

நண்பன் சஞ்சியை இழந்து ஆறாத் துயரில் இருக்கும் எமக்கு,
மீளாத் துயரைத் தந்தாயே
உன் பிரிவால் துயருறும் உமது குடும்பத்துடன் நாமும் எமது துயரை பகிர்ந்துகொள்கின்றோம்.

மக்கள் நலன்புரிச் சங்கமும்
(2026) (20, 52) படையணிகளும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றும் **அ.சிவஞானசீலன்** அவர்களின் அன்புத் தந்தை

**வேலாயுதர் அரியபுத்திரன்**

அவர்கள் 13.06.2011 அன்று காலமாகியதையிட்டு எமது அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
பிரதேச நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி. (சி-864)(52, 53)


City & Guilds **UK ENGINEERING CLASSES**

நுழைவுத் தகுதி: G.C.E.A/L Maths/Bio

**DIPLOMA/ADVANCED DIPLOMA**

in Telecommunication/Electrical/Electronic/
Civil Engineering & Quantity Surveying.

கொழும்பு பிரபல்ய விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன

Civil Engineering By:Eng.B.Thavendrakumar(C.Eng(Civil) தவா Sir
Telecom/Electrical & Electronic Engineering
By: Prof. K. Chandirabose.

**APSS Engineering** *Dr.Subramaniam Road, Chunnakam.TP.021 224 1731*

## விற்பனைக்கு

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதி (**Guest House & Restaurant**) மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்த, வாகனத்தரிப்பிட வசதிகளுடன், பாவனைக்குத் தயார்நிலையில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான கட்டடம் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- தொ.பே: 0774528818**

அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**English Workshop (ஆங்கில பயிற்சிபட்டறை)**

அமைப்புக்கள், பிரயோகங்கள், இணைப்புச்சொற்கள், "என்று" அமைப்புக்கள், பிறர்கூற்று மற்றும் செயற்பாட்டு வசனங்கள், Cauative வசனங்கள் உட்பட ஆங்கிலம் கதைத்தலுக்கு தேவையான அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்

காலம் : 15.06.2011 புதன்கிழமை
பிரிவுகள் : 8-10, 10-12, 2-4, 4-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

**அனுமதி இலவசம்**

கலந்துகொள்வோருக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்

**MyWay English** 182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456


## 41 இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

41 பேரில், 30 பேர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சம்பள நிலுவையை உடன் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, ஈராக் அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

ஈராக்கில் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த இவர்களுக்கு 19 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. நிலுவை சம்பளத்தை உடன் வழங்குமாறு வலியுறுத்தி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், குறித்த 41 இலங்கை பணியாளர்களும் தங்களுக்கான நிலுவைச் சம்பளத்தை உடன் வழங்கி, தங்களை இலங்கைக்கு திரும்பி அனுப்புவதற்கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 41 இலங்கைப் பணியாளர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு அவர்களுக்கான உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்து வருவதாக ஈராக்கிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.(ஒ-சி)

## 13 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னுக்குபின் முரணான கருத்து களை அரசு கூறிவருகின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் என்று ஓர் அமைச்சர் கூறுகின்றார். ஆனால் அப்படி வழங்கப்பட மாட்டாது என்று மற்றொரு அமைச்சர் கூறுகின்றார்.

அரசு இது விடயம் தொடர்பில் இரட்டை வேடம் போடுகிறது என்று இதன்மூலம் நன்றாகத் தெரிகின்றது. அரசு எல்லாப் பிரச்சினைகளையும் இழுத்தடிப்பதுபோல இதையும் இழுத்தடிக்கின்றது.

இது தொடர்பில் அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன என்று அரசு நாடாளுமன்றில் கூறவேண்டும். தொடர்ந்தும் இது தொடர்பில் இரட்டை வேடம் போடக்கூடாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசு உடன் தீர்வை வழங்க வேண்டும். - என்றார். (ஒ-சி)


**படிவம் விற்பனையாகிறது**

பட்டதாரிகளை ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளல்
(2011)

**பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்**

மாபெரும் கணக்கீடு தொடர்
★ கருத்தரங்கு ★

A/L 2011 — கணக்கீடு — A/L 2011

திரு.பாலகஜன் (H.N.DiP-in-Acc)

★ பரீட்சை எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கிய மாதிரி வினாத்தாள்
★ கையேடுகள் வழங்கப்படும்
★ வெளிமாவட்ட மாணவர்கள் பங்கு பற்றலாம்.

ஆரம்பம் - நாளை (15.06.2011) புதன்கிழமை பி.ப ஒரு மணி
(நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்)

இடம் - **BEACON** - யாழ். நகர்
(மின்சார நிலைய வீதி)

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் எமது ஸ்தாபனத்துக்கு வேலையாள்கள் தேவை.

6 வெற்றிடங்கள் உண்டு.

**கல்வித் தகைமை -**

O/L 5 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

திறமைக்கு முன்னுரிமை வழங்கி சம்பளம் தீர்மானிக்கப்படும். யாழ்.மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் மிகவும் விரும்பத்தக்கது.

நிர்வாகி
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம். 222 9881 (சி-862)


## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி கந்தையா சிவபாக்கியம்



கடந்த 15.05.2011 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் **திருமதி கந்தையா சிவபாக்கியம்** அவர்களின் பிரிவுத் துயரைக் கேட்டு அறிந்தவுடன் நேரில் வந்து வேண்டிய பல உதவிகளைச் செய்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, துண்டுப்பிரசுரம் மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கிளிநொச்சி வர்த்தகர், பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத் தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பழைய கண்டி,*
*காரைநகர்.* (1926) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### அருட் சகோதரி கிளமென்ற் பேதுரு (தி.கு)

புத்தளம் நாவற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி கிளமென்ற் பேதுரு நேற்று (13.06.2011) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
*121, பிரதான வீதி,* அருட் சகோதரி யோலண்ட் மத்தியாஸ்.
*யாழ்ப்பாணம்.* (52, 53) (2025) மாகாணத் தலைவி.

### வைரமுத்து தயாமோகன்

*(பொது சுகாதாரப் பரிசோதகர், உளநலப் பிரிவு, வவுனியா உதயன் பிரதேச செய்தியாளர், வவுனியா, பண்டாரி குளம். உரிமையாளர், ஜனா பாமர்சி, ஆனைக்கோட்டை)*



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தயாமோகன் 12.06.2011 அகால மரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற வைரமுத்து (பிரதம எழுதுவினைஞர், சுகாதாரத் திணைக்களம்), மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் தயாளினியின், (பிரதேச சபை, பண்டத்தரிப்பு) பாசமிகு கணவரும் அபிதா, கேஜனா, (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), லேஜிகா ஆகியோரின் தந்தையும், கனகநாயகம், பரமேஸ்வரி, தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜ்மோகன், (சிங்கப்பூர்), குமுதினி, ஜெகமோகன், ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலன் (France) சுரேஸ்குமார் (U.K), சாந்தகுமார் (U.K), ஜெயராஜா (U.K), பவானந்தன் (ஆசிரியர், கிளி. மத்தியகல்லூரி), சுஜாதா (மலேசியா), தர்ஷினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (14.06.2011) செவ்வாய்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுருலேன்,* தகவல்:
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* **குடும்பத்தினர்.**

### திருமதி தம்பிராசா நாகம்மா



ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பை பிறப்பிடமாகவும் வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வடிவேலு தம்பிராசாவின் அன்பு மனைவி நாகம்மா நேற்று (13.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ராஜேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்- பு/சாகிரா கல்லூரி), ராஜேந்திரன், பாலேனந்திரன், இராஜகுமாரி, ஞானேந்திரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுழிபுரம் பிரதேச சபை), சந்திரன் (புள்ளி விபரவியலாளர், திருகோணமலை), இந்திரன் (முகாமைத்துவ உதவியாளர் யாழ். இந்துக்கல்லூரி), மித்திரன் (ஆசிரியர்- வவுனியா,ஸ்கந்தபுரம் வாணி வித்தியாலயம்), உபேந்திரன் (மருந்துக் கலவை உத்தியோகத்தர் வ/பூவரசங்குளம் அரச பொது வைத்தியசாலை), புலேந்திரன் (பிரான்ஸ்), சாந்தகுமாரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தவயோகநாயகி, சேதுபதியம்மா, அருளானந்தசிவம் (ஓய்வுபெற்ற அரச வடிசாலை உத்தியோகத்தர், வவுனியா), புஸ்பலீலா, உமாரதி, ஜெகசோதி, புஸ்பலதா, தபோபவானி, குமுதினிதேவி, குகதாஸன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்தை வீதி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.ஞானேந்திரன், பிள்ளைகள்,
(2024) (20, 52) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மாதம் நடைபெற்ற கணித நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் வலயத்தில் கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பெற்றுள்ளது. கடந்த மாதம் 17 ஆம்திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் முதலாமிடம் பெற்ற பாடசாலை மாணவர்களுடன் ஆசிரியரும் காணப்படுகின்றனர். (ம—8)



# தட்டிக்கொடுக்கும் ஊக்குவிக்கும் மனப்பாங்கு இன்றைய சமூகத்தில் அருகி வருகிறது

## ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் ஜூன் 14

இன்றைய எமது சமுதாயத்தில் தட்டிக் கொடுக்கும் மனப்பாங்கு மிகவும் குறைந்து காணப்படுகின்றது. பணிகளை சீராக மேற்கொள்வதற்கு இடையூறு விளைவிக்கும் சமூகமே உருவாகிவருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக்கல்வி அலுவலக ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

95 வீதமானவர்கள் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதே வேளை 5 வீதமானோர் பணிக்கு இடையூறு விளைவிப்பவர்களாக உள்ளனர். தட்டிக் கொடுக்கும் மனப்பாங்கு குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

கடந்த காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இராணுகட்டுப்பாடற்ற பகுதிகளிலும் கடமையாற்றியிருக்கின்றேன்.

பல்வேறு அவலமான காலப் பகுதிகளில் கல்விப் பணியாற்றியிருக்கிறேன். இதற்கு எல்லாம் எனக்கு இறைவன் கொடுத்த வலிமையும் அருளும்தான் காரணம்.

என்னை மதிக்கும் சமூகம் ஒன்று என்னைச் சூழ இருப்பது எனக்கு பெரும் மன நிறைவைத் தருகிறது. - என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் எஸ்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், தேசிய கல்வியல் கல்லூரியியற் அதிபர் எஸ்.யோகநாதன், யாழ்.பல் கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடங்களின் பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா, தேசிய கல்வி நிறுவக முன்னாள் பணிப்பாளர் லியானி அமர சேகர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ம-319)

# கிராமங்களின் அறிவாலயங்களாக நூலகங்கள் திகழ்ந்து வருகின்றன

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்

காரைநகர்,ஜூன் 14

நூலகங்கள் கிராமங்களின் அறிவாலயங்களாகத் திகழ்கின்றன. ஒருவர் இருபத்தைந்து வீதமான கல்வியை வாசிப்பதன் ஊடாகவே பெற்றுக்கொள்கின்றார். எனவே கிராமங்கள் தோறும் நூலகங்கள் அமைத்து மாணவர்களின் கல்வியை வளப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

காரைநகர் அபிவிருத்திச் சபையால் காரைநகர் புதுவீதியில் அமைக்கப்படவுள்ள நூலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உறையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

நூலகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலைகள், பிரதேசசபைகள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் என்பன கிராமங்கள் தோறும் நூலகங்களை அமைத்து மாணவர்கள் மற்றும் பொது மக்களின் அறிவை வளர்க்க உதவுகின்றன.

அந்த வகையில் காரைநகர் அபிவிருத்திச் சபையும் காரைநகரின் மத்திப் பகுதியில் நூலகத்தை அமைக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது.

இந்த நூலகம் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தத்தக்க வகையில் அமைய வேண்டும்.

தற்கால கல்வி முறைதேடலை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. மாணவர்கள் கற்றலில் 25 வீதமானவற்றை வாசிப்பதன் ஊடாகவே பெற்றுக்கொள்ள வேண்டும்.

நூலகப் பயன்பாட்டில் தற்போது இடைவெளிகள் உள்ளன. வளர்ச்சிப் பாதையில் செல்லும் போது அந்த இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டும். -என்றார்.

இந்த நிகழ்வில் அடிக்கல்லை நட்டு வைத்த காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்ற நோக்கில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். யுத்தம் முடிவடைந்து அபிவிருத்தியை நோக்கி செல்கின்றோம்.

முழுமையான அபிவிருத்தியை அடைந்துவிட்டோம் எனக் கூற முடியாது. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் இந்த ஊரவர்கள் சிறந்த பணிகளை இங்கு மேற்கொள்கிறார்கள்.

கல்விப் பின்புலத்தை கொண்டது காரைநகர். மிகப்பெரிய கல்விமான்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். பாடசாலை அதிபர்கள் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும். இதன் ஊடாக மாணவர்கள் சிறந்த பயனை பெற வேண்டும்.- என்றார்.

(ம-250)

# தெல்லிப்பழை கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

தெல்லிப்பழை கோட்ட மட்டத் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**ஆக்கம் எழுத்து**

**தரம் - 4,5**

ரவிச்சந்திரன் டினோயா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), தர்மதயாளன் சங்கீதன் (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி க.வித்தியாசாலை), செல்வராசா சஞ்சிகா( மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்).

**கட்டுரை**

**தரம் - 6,7**

பத்மநாதன் திவியா ( அளவெட்டி அருணோதயக் கல்லூரி), இரத்தினசிங்கம் துஷ்யந்தி (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), தர்மகுலசிங்கம் காண்டீபன்(மல்லாகம் மகாவித்தியாலயம்).

**தரம் - 8, 9**

தேவதாசன் உமையாழினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), புஸ்பராசா கோபிகா (குளமங்கால் றோ.க.த.க.பாடசாலை), செல்வராசா செல்வஜெனோஜி (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்).

**கட்டுரை, இலக்கியம்**

**தரம் - 10,11**

மகேஸ்வரன் கோகுல்சாயி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), துரைசிங்கம் மேதுஷா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), விமலதாசன் ஆன்லக்சி (குளமங்கால் றோ.க.த.க.பாடசாலை).

**தரம்- 12,13**

சக்திவேல் அனுஷா (மல்லாகம் மகாவித்தியாலயம்) ,செல்வநாயகம் மேரிஜெசிமலர் (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்).

**இலக்கணம்**

**தரம்- 10,11**

கிருஸ்ணபிள்ளை கோபிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), பாலச்சந்திரக் குருக்கள் சோபனா(இளவாலை மெய்கண்டான் மகா வித்தி.), நா.சிவஞானச்செல்வன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**தரம்- 12,13**

வாலச்சந்திரன் மோகனரூபி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி).

**திறனாய்வு**

**தரம்- 12,13**

சுந்தரமூர்த்தி தசாங்கன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**குறு நாடகம்**

**தரம்- 10,11**

ஜெயதாஸ் கனிஸ்ரா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ப.தபோசிகா( வயாவிளான் மத்திய மகாவித்தியாலம்), ம.கல்பனா ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

(வளரும்)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் ஜூன் 14

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் இந்த வருடத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக த.சண்முகலிங்கம், உபதலைவர்களாக நா.சோமசுந்தரம் , மு.திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோரும் செயலாளராக தி.மாணிக்கவாசகர், உதவிச்செயலாளராக ந.குலசிங்கம், மேலதிக உதவிச் செயலாளராக த.சிறிகாந்தன், பொருளாளராக இ.தவகோபால், பரிபாலகச் செயலாளராக பொ.கமலநாதன் உதவிப்பரீட்சைச் செயலாளராக த.பாலகிருஸ்ணன், சமயப்பிரசார அமைச்சராக மு.திருஞானசம்பந்தபிள்ளை, உள்ளகக் கணக்காய்வாளராக க.சிவபாதசுந்தரம், கணக்காய்வாளராக அரியரட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313)

# நியமனம்

நவாலி,ஜூன் 14

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் புதிய அதிபராக பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலையின் அதிபராக பணியாற்றிய வேலாயுதம் சக்திவேல் இம் மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கு அதிபராகப் பணியாற்றிய ந.சிவகடாட்சம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம் ஜூன் 14

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ் கிளையால் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்துனர், முச்சக்கரவண்டி திருத்துனர், அழகுக்கலை ஆகிய பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுடைய இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக நேரில் சமுகம் தருமாறு நிறுவனத்தின் உதவிக் கணக்காளர் த.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார்.(ம-313)

# விசேட பஸ்சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் மற்றும் புறநகர்பகுதிகளில் இயங்கிவரும் வடக்கு மாகாணசபை அலுவலகங்களில் பணியாற்றும் வடமராட்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். ஊழியர்கள் வசதி கருதி விசேட பஸ்சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

தினமும் காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி வரை வல்வெட்டித்துறை ஊடாக இரு பஸ்சேவைகள் நடைபெற்ற வருகின்றன.

இந்தச் சேவையில்ஈடுபடும் பஸ்கள் வடமாகாண சபையின் அனைத்து அலுவலகங்களுக்கும் சென்று வரும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வராணி இராமநாதன் (கிச்சி)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.45/23**A**, பிறற்றிக்கா றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் நியூ ஜெசி அமெரிக்காவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி இராமநாதன் கடந்த 10.06.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தையா - முத்தம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா இராமநாதன் ***J.P.*** (முன்னாள் தலைவர், கொக்குவில்-நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் பரிபாலன சபை) அவர்களின் அன்பு மனைவியும் ஆறுமுகம் அன்னபூசனி, சண்முகரட்ணம் புஸ்பராணி (பேபி), இராசதுரை தேவராணி (ராணி) ஆகியோரின் சகோதரியும் திருமதி சரஸ்வதி இராசையாவின் மைத்துனியும் ஸ்ரீஇராமநாதன், நீற்றா, உருத்திரா, நவீந்திரா, ரூபா, றெஜினா, மகிந்தா, குகன், அசோகன் ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி றஞ்சி கோபாலசிங்கத்தின் சிறியதாயும் மஞ்சுளா, அமுதசாகரகன், நாகேஸ்வரி, ஜெயமலர், சிவனேசன், புவனநாயகம், குவாண்டலீன், ஷீலா, சுவர்ணலதா ஆகியோரின் மாமியும், விவேக், மீரா, மித்திரன், கீதா, கௌசி, அரவிந்தன், றோகான், றேகா, முகுந்தன், துஷ்யந்தி, சிந்தியா, அஜெர்தன், கிரி, சோனியா, நிரோசா, தனுஜா, ரமேஷ், ஆனந், லசன், ரதீஷ், நதியா ஆகியோரின் பேர்த்தியும் சந்தோஷ், அரன், ஜஸ்னி, அயானா, தேவிகா, ஜோதிகா, உமா, ஜெயராம் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2011) புதன்கிழமை நியூ ஜெசி அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
திருமதி புஸ்பராணி சண்முகரட்ணம் (பேபி - சகோதரி)

(2010)(48,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மயமாக்கப்படும் தமிழர்களின் பிரதேசங்கள்

வடக்கு, கிழக்குப் பகுதிகளை சிங்கள மயமாக்கும் சதித்திட்டத்தின் பணிகள் மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வன்னிப்பிரதேசத்திலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் இதன் நடவடிக்கைகள் முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தின் முல்லைத்தீவுக் கரைவலைப்பாடு மீன்பிடி பெரும்பாலும் தமிழ் மீனவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பான்மையின மீனவர்கள் எதுவித தடையுமின்றி கரைவலைப்பாடு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

முல்லைத்தீவில் இயன்றளவில் சுமார் 10 ஆயிரம் பெரும்பான்மையின மீனவர்கள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். கொக்கிளாய் முதல் சுண்டிக்குளம் வரையிலான கிலாகத்தை, மாதிரிக் கிராமம், உப்புமாவெளி, தூண்டாய், அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய் , கருநாட்டுக் கேணி ஆகிய பிரதேசங்களில் தமிழ் மீனவர்கள் குடியேற்றப்படவும் இல்லை; மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவும் இல்லை. இதன் ஒரு கட்டமாகக் கொக்குத்தொடுவாய் முதல் சுண்டிக்குளம் வரையிலான முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் பத்தாயிரம் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

நந்திக் கடலில் மீன்பிடிப்பதற்கு எமக்கு அனுமதி இல்லை. ஆனால் இந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையின சிங்கள மீனவர்கள் நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். தமிழ் மீனவர்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். எமது நந்திக் கடலில் சிப்பாய்களும் சிங்கள மீனவர்களும் இறால் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மண்ணில் பிறந்த தமிழ் மீனவர்கள் செய்வதறியாது கைகளைப் பிசைந்துகொண்டு இருக்கின்றனர். முல்லைத்தீவு மீனவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுப் பெரும்பான்மை இன மீனவர்களுக்கு வழங்கப்படுவது குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும். அரசு உரிய நடவடிக்கை எடுக்காது அசண்டையீனமாக நடந்தால், வழக்குத் தொடரப்படும். இவ்வாறு தெரிவித்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர். இந்த விடயம் தொடர்பாக அண்மையில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து அந்தப் பகுதி மக்களைச் சந்தித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதேபோன்று இன்னொரு விடயத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது ஒரு காலத்தில் புலிகளின் தலைநகர் என்று வெளிநாடுகளால் வர்ணிக்கப்பட்டு வந்த கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஜெயபுரம் கிராமத்தில் வீதி ஒன்றுக்கு 'மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை' என்ற பெயர் பொறிக்கப்பட்ட பலகை நடப்பட்டுள்ளதாம்.

ஜெயபுரத்தில் இருந்து பல்லவராயன் கட்டு நோக்கிச் செல்லும்போது ஜெயபுரம் சந்தைக்கு அருகில் இருக்கும் இரண்டு வீதிகளில் ஒன்றுக்கு 'மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை' என்ற பெயரும் மற்றைய வீதிக்கு 'அமுத் மாவத்தை' என்ற பெயரும் சூட்டப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. வெள்ளை வர்ணம் பூசப்பட்ட பலகையில் கறுப்பு மையால் பிரஸ்தாப வீதிகளின்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில வீதிகளுக்கு வேறு பல சிங்களப் பெயர்கள் இடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இலங்கைப் படைகள் தமிழ் பகுதிகளை ஆக்கிரமிக்க மேற்கொண்ட போரின் பின்னர் தற்போது இந்த இரண்டு விடயங்களும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் நடந்தேறியுள்ளன.

கிளிநொச்சி உள் வீதிகளில் இந்த அடையாளங்களை இடுவதன் மூலம் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஆர்வலர்கள் கண்களிலிருந்து இதை மறைத்துச் சிங்கள மயமாக்கலை மேற்கொள்ளும் இரகசியத் திட்டம் தற்போது அம்பலமாகியுள்ளது. அது மட்டுமல்லாமல் இந்தப் பெயர்ப்பலகைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றுக்கு அருகில் பொலிஸார் காவலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பெயர்ப்பலகையை நிழல்படம் எடுக்க முற்படும் பொதுமக்களும் பாதசாரிகளும் அவதானிக்கப்படுவதால் மக்கள் அஞ்சி அதைத் தவிர்த்து வருகின்றனர். தமிழர்களின் ஜெயபுரம் கிராமத்தை 'மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை'யாக மாற்றி சிங்கள கிராமங்களாக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை மஹிந்த அரசு மேற்கொண்டு வருகிறது. கிளிநொச்சியில் முன்னர் சந்தை இருந்த இடத்தில் புத்த சின்னங்களை நிறுவி அதனை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக காட்டிக்கொள்ள அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

காணிகளை ஆக்கிரமித்து அவற்றில் புத்தர்சிலைகள் மற்றும் கட்டடங்களை நிறுவி தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் நடவடிக்கைகளில் அரசு தொடர்ந்தும் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்த விடயம். இதன் ஒரு வெளிப்பாடாக அற்ப சலுகைகளுக்காகச் சங்கங்களை அமைப்பது, சிங்களக் கலாசார விழாக்களை நடத்துவது போன்ற விடயங்கள் ஊடாக சிங்கள மயமாக்கலை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதற்கு ஒரு சில தமிழ் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் துணை போகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இதேபோன்று குறிப்பாக அண்மையில் பலாலி உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் 28 புத்தர் சிலைகள் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இதன் ஊடாக பலாலியில் பௌத்த சமயம் இருந்ததற்கான ஆதாரங்களை உருவகப்படுத்தி வருகிறது மஹிந்த அரசு.

தி.அசோக்

தமிழ் இனத்தின் பண்பாடு, கலாசாரம், இன உணர்வு,, சமூகக் கட்டமைப்பு என்பவற்றை வளர்ப்பதில் அல்லது பேணிப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றியது யாழ்ப்பாண மாவட்டமே. அவ்வாறான யாழ்.மாவட்டத்தில் தற்போது அதனது அடித்தளங்களை முற்றாக அழித்து, யாழ். மக்களை முற்றாகத் திசை திருப்பும் நடவடிக்கையில் சிங்கள அரசும் அதனுடன் சேர்ந்தியங்கும் சக்திகளும் செயற்பட்டு வருகின்றன. இது தொடர்பாக மக்கள் மிகவும் விழிப்படைய வேண்டும். ✱


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 235 | சீட்டிழுப்புத் திகதி 12.06.2011

வெற்றி இலக்கங்கள்: 02 27 41 46 | சுப்பர் இலக்கம்: 02

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 7,310,120/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 113361 | ரூ. 20/= | ரூ. 2,267,220 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10299 | ரூ. 40/= | ரூ. 411,960 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8780 | ரூ. 100/= | ரூ. 878,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 804 | ரூ. 200/= | ரூ. 160,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 197 | ரூ. 1,500/= | ரூ. 295,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 21 | ரூ. 3,000/= | ரூ. 63,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 7,310,120/= | |
| மொத்த எண்ணிக்கை | 133463 | | ரூ. 5,076,480/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 7,654,520/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


## கருத்தமர்வு

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். கிளையால் உயர்கல்விவாய்ப்புக்கான கருத்தமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு மந்துவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள சனசமூக நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தமர்வில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக வாய்ப்பைத் தவறிய மாணவர்கள் கலந்துகொள்ளலாம். (ம-313)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் முன்னைநாள் தலைவர்
க.இராமநாதன் அவர்களின்
அன்பு மனைவியும் அம்பாளின் இறை
பக்தரும் மகா சபை உறுப்பினருமான
**திருமதி செல்வராணி இராமநாதன்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
மனோன்மணி அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
கொக்குவில்- நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

(40)(1950)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் இல.374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம்- காசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவனடியான் மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜரட்ணம்- தங்கரட்ணம், இராஜேந்திரம்- நாகரட்ணம், முத்துகுமார்சாமி - இராசமணி (லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் தங்கரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலாம்பிகை, உமாமகேசன் (கனடா), ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் துஷ்யந்தினி (கனடா), சிவபாஸ்கரன் (சாரங்கா நகை மாடம்) ஆகியோரின் மாமியும் சுதர்சன்- கௌரிதேவி (கனடா), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), மாதங்கி, பிருந்தாயினி (யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), பிருந்தா (கனடா), அனித்தா (கனடா), சேயோன் (கனடா), சாரங்கன் (யாழ்/ இந்துக் கல்லூரி), வைஸ்ணவி (யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வைதேகி (யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.06.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ப.சிவபாஸ்கரன்
(சாரங்கா நகை மாடம்)

(40-24-22)(சி/848)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உ
குகமயம்

## மிருசுவில் வடக்கு நெல்லிக் கிணற்றடி அருள்மிகு தான்தோன்றி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

### புதிய சித்திரத் தேர் திருப்பணி கால்கோள் விழா

முருகப்பெருமானின் திருவருளோடு நிகழும் வைகாசி மாதம் 31 ஆம் நாள் (15.06.2011) புதன்கிழமை பூரணை நன்னாளில் முற்பகல் 11 மணியளவில் நாள் வேலை ஆரம்பமாகவுள்ளது.

- மங்கள விளக்கேற்றல் - ஆலய தர்மகர்த்தா
- வேதபாரயணம் - ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக் குருக்கள்
- ஆசியுரை சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் (பிரதமகுரு, யாழ்.வண். கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்)
- உபயம் திருமதி செல்லையா கமலாதேவி

தேர் நிர்மாணம்:
ஆறுமுகம் சிற்பாலயம்
ஜீவரட்ணம் - ஜெயபிரகாஸ் குழுவினர்
*பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.*

அடியார்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்கவும்.

தர்மகர்த்தா,
சி.கனகரத்தினம்.

(40)(2009)

## கண்ணீர் அஞ்சலி

### வைரமுத்து தயாமோகன்



உளமருத்துவ சமூகப் பணியாளர், உளநலப்பிரிவு,
பொது வைத்தியசாலை, வவுனியா.

12.06.2011 ஞாயிற்றுக்கிழமைஅகால மரணமடைந்த உளநல மருத்துவ சமூகப்பணியாளர் வை.தயாமோகன் அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் குடும்பத் துயரில் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
488எ, நாவல வீதி, இராஜகிரியா.

விரிவுரையாளர்கள்,
2008/2010 சமூகப்பணியாளர்கள்.

(2002)

## கண்ணீர் அஞ்சலி



### ஒவசியர் இராமநாதன் செல்வராணி

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஓவசியர் இராமநாதன் செல்வராணி அமெரிக்காவில் காலமான செய்தி கேட்டு கலங்கி நிற்கின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆசிமட அரசடி விநாயகரை இறைஞ்சுகின்றோம்.

கோண்டாவில் கிழக்கு மக்களும்
பாமினி எஞ்சினியேர்ஸ் [illegible]
த.இ.பாலசுந்தரம்

(48,27,19)

## சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்14

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பகாலக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் இடம்பெற்று எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை விநாயகர் வழிபாடு, யாகபூசை என்பன இடம்பெறும்.

மகாகும்பாபிஷேக ஆசியுரைகளை இணுவில் காயத்திரி பீடத்தின் தா.மகாதேவக்குருக்கள், பேராசிரியர் பிரம்மஸ்ரீ கோபாலகிருஸ்ண ஐயர், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், செஞ்.சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர். கிரியா கால பூசை வழிபாடுகளை சிவஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள் நிகழ்த்துவார். (ம-135)

***

யாழ்ப்பாணம், ஜூன்14

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் இலட்சார்ச்சனைப் பூர்த்திவிழா நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு பூசைகள்நிறைவுறும். அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு அம்பாள் உள்வீதி வெளிவீதி வலம் வருவார். (ம-313)

## ஆன்மீக வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன்14

யாழ்.சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆன்மீக வகுப்புகள் இன்று செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் மாலை 4 மணிக்கு இளையோர்களுக்கும் மாலை 5.15 மணிக்கு 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வகுப்புகள் நடைபெறும்.

இலவசமாக நடைபெறும் இந்த ஆன்மீக வகுப்புக்களில் ஆர்வமுடையவர்கள் கலந்து கொள்ளலாம்.

நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெறும் இந்த வகுப்புகள் பிரதி செவ்வாய் தோறும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-313)

## Eye Centre

(ஐ சென்ரர்)

### கண் சிகிச்சை நிலையம்

230, நாவலர் வீதி,
(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
யாழ்ப்பாணம்.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் ஆலோசனையும், சிகிச்சையும் நடைபெறுகின்றன. வெகு விரைவில் நவீன முறையில் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு
இ.கோபிதரன்
0779231710
0213202199

(3826)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

(உரிமையாளர், கணபதி ஸ்ரோர்ஸ்)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், 36/5, **B.A.** தம்பி வீதி, சிவலிங்கப் புளியடி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரஞ்சோதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன்- மாணிக்கம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கற்பகவல்லியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரராஜா, நாகேஸ்வரி, சிவபாலன் காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவமதி, சிறீவர்ணசூரியா, யோகலக்ஸ்மி, சிவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன், சஞ்சீவன், அனுசா, மீரா, விதுஷா, விநாயகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/5, B.A.தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி.

(2006)

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. **2405**
திகதி **12.06.2011**

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: H
வெற்றி எண்கள்: 5 7 3 5 0 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 5 | 7 | 3 | 5 | 0 | 5 | ரூபா. 18,512,992/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 5 | 7 | 3 | 5 | 0 | 5 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 7 | 3 | 5 | 0 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 09 |
| 3ம் பரிசுகள் | | | | 3 | 5 | 0 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 82 |
| 4ம் பரிசுகள் | | | | | 5 | 0 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 809 |
| 5ம் பரிசுகள் | | | | | | 0 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் | 8,213 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் | 80,654 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 5 | 7 | 3 | 5 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 5 | 7 | 3 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 81 |
| 9ம் பரிசுகள் | | 5 | 7 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 796 |
| 10ம் பரிசுகள் | | 5 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 8,100 |
| 11ம் பரிசுகள் | H | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 32,313 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
**18,818,743.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **8,265,240.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631

முடிவுகளை அறிய
www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org